தமிழின் முதல்தர வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 40 ரூபா • தீபம் 150 • 29.07.2018





## இழுத்து மூடப்பட்ட முல்லைத்தீவு பார்மசிகள்

பனடோலுக்கும் பத்து கிலோமீற்றர் போக வேண்டிய அவலம்

## தமிழ் தேசிய முன்னணிக்கு காத்திருக்கும் விசப்பரீட்சை



## அனந்தியின் கைத்துப்பாக்கி... உண்மை என்ன?


## புலிகள் தயாரித்த சண்டியன்!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருடன்

கையில் சில பைல் கட்டுக்களுடன் வந்தார் கருடர். மிக சீரியசாக அவற்றை கொஞ்ச நேரம் ஆராய்ந்து கொண்டிருந்தார். சில இடங்களில் அடையாளமிட்டு வைத்தார். குறிப்புக்களும் எடுத்துக் கொண்டார்.

"இது என்ன பைல் தெரியுமா?" ஒரு பைலை தூக்கி காண்பித்து கேட்டார்.

"சொல்லுங்கள்"

"யாழ் மாநகரசபையின் ஈ.பி.டி.பி நிர்வாககாலத்தில் சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டை விசாரித்த நீதிபதிகளின் அறிக்கை. ஓரிரண்டு வருடங்களாக முதலமைச்சரின் அலுவலக இறாக்கைக்குள் இருந்தது. தகவல் அறியும் உரிமைச்சட்டம் நடைமுறையில் இருந்தும் ஒரு சிலர்தான் அதை பாவித்து அறிக்கையை பெற்றி யோகேஸ்வரி மீது குற்றம் சுமத்தினாலும் அது கட்சிக்கு பாதிப்பை ஏற்படுத்தும். வடமாகாணசபை பதவிக்காலம் முடியும் தறுவாயில், விக்னேஸ்வரனின் நிர்வாகம் மீது கடுமையான குற்றச்சாட்டுக்களை ஈ.பி.டி.பி வைக்க ஆரம்பித்துள்ளது. வினைத்திறனில்லாத நிர்வாகம் நடக்கிறது, எம்மிடம் அதிகாரத்தை தந்து பாருங்கள் பாலும் தேனும் ஓட வைக்கிறோம் என பிரச்சாரத்தை ஈ.பி.டி.பி ஆரம்பித்துள்ள நிலைமையில், முதலுக்கே மோசமாக அறிக்கை விடயங்கள் கசிய ஆரம்பித்துள்ளன. ஓய்வுபெற்ற நீதிபதிகளின் அறிக்கையும் விரைவில் வெளியாகுமென தெரிகிறது. ஈ.பி.டி.பிக்கு நிச்சயம் அது சிக்கலை கொடுக்கும். ஆனால் அது சமாளிக்ககூடிய சிக்கலையே கொடுக்கும். ஏனெனில், நமக்கு கிடைத்த கியை வைத்துக் கொண்டு, அல்லது கைத்துப்பாக்கிக்கு விண்ணப்பித்து விட்டு அஸ்மினிற்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய வாய்ப்பில்லை. இது முதலாவது விடயம்.

அடுத்தது நாம் திரட்டிய தகவல்கள். நாம் திரட்டிய தகவல்படி அனந்தியிடம் கைத்துப்பாக்கி எதுவும் கிடையாது என்றுதான் இதுவரை அறியக் கிடைத்துள்ளது. மாறான தகவல்கள் இருந்து, அதை நம்மால் இதுவரை அறிய முடியாமலும் இருந்திருக்கலாம். அடுத்தடுத்த வாரங்களில் அதுபற்றி தெளிவாக அறியக் கிடைக்கும்.

அதற்கு முன்னர் ஒரு விடயத்தை புரிய வைக்கிறேன். வடமாகாணசபை அமைவதற்கு முன்னர், பொலிஸ் பாதுகாப்பை வைத்திருந்தது நமது ஒரு நடைமுறைதான்.


அனந்தியும் இதைத்தான் செய்திருக்கிறார். தனது மெய்ப்பாதுகாவலர்கள் ஏ.கே துப்பாக்கியுடன் வாகனத்தில் பயணிப்பதில் சிரமமுள்ளதால், கைத்துப்பாக்கி வழங்கும்படி பாதுகாப்பு அமைச்சிற்கு கடிதம் அனுப்பியிருக்கிறார். அனந்தி மட்டுமல்ல, வடமாகாணசபை உறுப்பினர்களில் வேறு சிலரும் இப்படியான கடிதங்களை பாதுகாப்பு அமைச்சிற்கு அனுப்பியுள்ளனர். அனந்தியின் உதவியாளராக இருந்த ஒருவர் அண்மையில் அவரிடமிருந்து விலகியுள்ளார். அவரின் மூலம்தான் தகவல் இப்படி திரிவடைந்து சென்றதென அனந்தி தரப்பு கூறுகிறது"

"அப்படியென்றால் அஸ்மின் ஏன் அப்படி சொன்னார்?"

"அதற்கு இன்னும் சில நாட்கள்

# அனந்தியின் கைத்துப்பாக்கி... உண்மை என்ன?

## வடக்கு சட்டப் போராட்டங்கள் தொடக்கம் ரெலோவின் உட்கட்சி போராட்டங்கள் வரை!



ருக்கிறார்கள்" என்றார்.

"மாநகரசபை ஊழல் குற்றச்சாட்டு விவகாரம் எப்படி முடியும்?"

"நிச்சயம் இது ஈ.பி.டி.பிக்கு தலையிடியை கொடுக்கும். வடமாகாணசபை தேர்தல் வரலாமென எதிர்பார்க்கப்படும் நிலையில் அந்த அறிக்கை வெளியாவது ஈ.பி.டி.பிக்கு நிச்சயம் சிக்கல்தான். அறிக்கையில் வலுவான சில குற்றச்சாட்டுக்கள் உள்ளன. ஓய்வுபெற்ற நீதிபதிகள் அறிக்கையை தொடர்பான பரிந்துரை வெளியாகிவிட்டது. அந்த அறிக்கையை தயாரித்த குழுவினரை ஈ.பி.டி.பி பிரமுகர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, அறிக்கையில் கடுமையான பரிந்துரைகளை செய்ய வேண்டாமென கேட்டதை ஏற்கனவே கூறியிருக்கிறேன்.

ஓய்வுபெற்ற நீதிபதிகளின் அறிக்கையில் கறாரான குற்றச்சாட்டுக்கள் பல உள்ளன. அப்போதைய முதல்வர் என்ற ரீதியில் யோகேஸ்வரி பற்குணநாதன் அவற்றிற்கு பதிலளிக்க வேண்டியவர். முதலமைச்சர் நியமித்த குழுவின் பரிந்துரையிலும் அது சொல்லப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பி மீது குற்றம் சுமத்தினாலும், தகவல்களின்படி அந்த காலத்தில் நடந்த ஈ.பி.டி.பிக்கு கடுமையான சிக்கலை கொடுக்கும் ஆதாரங்களை விசாரணைக்குழுவால் கண்டுபிடிக்க முடியவில்லை. அதற்கு விசாரணைக் குழுவும் ஒரு காரணம். சில அதிகாரிகளும் காரணம். இப்போதைக்கு இந்தளவில் நிறுத்திக்கொள்கிறேன். நேரம் வரும்போது நானே சில ஆவணங்களை தருகிறேன். நீங்கள் வெளியிட்டு கொள்ளுங்கள்" என அந்த பைலை மூடி வைத்தார்.

"சரி... வடக்கு மாகாணசபைக்குள் என்ன நடக்கிறது? அனந்தி உண்மையில் கைத்துப்பாக்கி வைத்திருக்கிறாரா?"

"இதற்கு இரண்டு விதமாக பதில் சொல்கிறேன். முதலாவது அதற்கு வாய்ப்பிருக்கிறதா என்ற ரீதியில் பார்க்கலாம். அயூப் அஸ்மின் மாகாணசபையில் உரையாற்றும்போது "பெண் அமைச்சர் ஒருவர் பாதுகாப்பு அமைச்சிடம் விண்ணப்பித்து கைத்துப்பாக்கி பெற்றுவைத்திருக்கிறார்" என குற்றம்சாட்டியிருந்தார். இதையடுத்து அனந்தி சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

அனந்தி உண்மையில் கைத்துப்பாக் நாடாளுமன்ற உறுப்பினர்களும், கட்சி தலைவர்களும்தான். மாகாணசபை அமைந்ததன் பின்னர்தான் மாகாணசபை உறுப்பினர்களும் பொலிஸ் பாதுகாப்பை பெற்றார்கள்.

ஆரம்பத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் மெய்பாதுகாவலர்களான பொலிஸ்காரரர்கள் எல்லோருக்கும் ஏ.கே துப்பாக்கிகள்தான் வழங்கப்பட்டன. ஏ.கே துப்பாக்கி பெரியது. அதையும் வைத்துக் கொண்டு மெய்ப்பாதுகாவலர்கள் வாகனங்களில் பயணிப்பதில் சிரமமாக இருக்கும் என எம்.பிக்கள் எல்லோருமே பாதுகாப்பு அமைச்சிற்கு கடிதம் எழுதுவார்கள். தமது மெய்ப்பாதுகாவலர்களிடம் உள்ள ஏ.கே துப்பாக்கியை மாற்றி அவர்களிற்கு கைத்துப்பாக்கி வழங்க வேண்டுமென. அதன்படி பாதுகாப்பு அமைச்சு அவர்களின் துப்பாக்கியை மாற்றிக் கொடுக்கும். இன்று வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் எம்.பிக்களின் மெய்பாதுகாவலர்கள் யாரெல்லாம் கைத்துப்பாக்கி வைத்திருக்கிறார்களோ, அந்த எம்.பிக்கள் எல்லோருமே பாதுகாப்பு அமைச்சில் விண்ணப்பித்துத்தான் கைத்துப்பாக்கியை பெற்றார்கள். இது வழக்கமான

கருடன் பக்கம்



பொறுத்து பார்க்க வேண்டும். பாதுகாப்பு உத்தியோகத்தர்களிற்கு பிஸ்ரல் வழங்கும்படி அனந்தி கேட்டதைதான் அஸ்மின் மாறி குறிப்பிட்டாரா, அல்லது உண்மையிலேயே வேறு ஆதாரங்கள் வைத்திருக்கிறாரா என்பதை அவர்தான் சொல்ல வேண்டும். ஆனால் உடனடியாக அடுத்த அமர்விலேயே அதை அஸ்மின் நிரூபிக்க வாய்ப்பில்லையென்றுதான் தெரிகிறது'

"சரி, வடக்கு அமைச்சரவை சர்ச்சை எப்படி முடியும்?"

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இது மாகாணசபையின் நிர்வாகம் சம்பந்தமான விடயம் என்பதற்கு அப்பால் அரசியல் போட்டியாக மாறி விட்டது. இதில் தோற்க முதலமைச்சர் விரும்பவில்லை. அவரை தோற்க வைத்து அரசியல் அறுவடை செய்ய எதிரணி முயற்சிக்கிறது. ஆகவே, இது ஒரு இழுபறியான விவகாரமாகவே இருக்கும்.

ஆனால் டெனீஸ்வரனை பதவி விலக்கியதற்கு இடைக்கால தடையுத்தரவு விதிக்கப்பட்ட யூன் 29ம் திகதியின் பின்னர் வடக்கு அமைச்சரவை வாரியம் கூடவில்லை. இதனால் எந்த திட்டத்திற்கும் அமைச்சரவை அனுமதி கிடைக்கவில்லை. அபிவிருத்தி திட்டங்கள் நடக்கவில்லை. மாகாண நிர்வாகத்தின் இயக்கத்தில் திடீர் கோளாறு ஏற்பட்டதை போல, இந்த சம்பவம் அமைந்துள்ளது. மாகாண நிர்வாகம் சரிவர இயங்குவதை உறுதிசெய்வது முதலமைச்சரின் பொறுப்பு. அதை எப்படி சரிவர செய்கிறார் என்பதிலேயே அவரது ஆளுமையை மக்கள் அறிந்து கொள்வதிலும், வெற்றியடைவதும் தங்கியிருக்கிறது. இப்படி காரணங்களை சொல்லி, மாகாண நிர்வாகத்தை ஸ்தம்பிக்க வைக்க முடியாது"

"மொத்தத்தில் மக்களை பற்றி கவலைப்படாமல் ஒரு அரசியல் விளையாட்டு நடக்கிறது என்கிறீர்கள். சரி... வேறென்ன செய்திகள் உள்ளன?"

"டெனீஸ்வரனை அரசியலுக்கு கொண்டு வந்தது ரெலோ. டெனீஸ்வரனை அரசியலிற்கு கொண்டு வந்தபோது, ரெலோவிற்குள் ஒரு குழப்பம் ஏற்பட்டது. நீண்டகால கட்சி செயற்பாட்டாளர்கள் இருக்க, வெளியிலிருந்து ஆட்களை கொண்டு வருகிறார்கள் என கட்சி உறுப்பினர்களிடம் கொஞ்சம் அதிருப்தி இருந்தது.

இப்பொழுது டெனீஸ்வரன் விவகாரம் நீதிமன்றம் வரை சென்றதையடுத்து, கட்சிக்குள் பழைய முணுமுணுப்பு கிளம்பியுள்ளது. நாம் அப்போது சொன்னதுதான் நடக்கிறது, கட்சி தலைமை எம்முடன் கலந்தாலோசிக்காமல் நடந்ததன் விளைவுதான் இது என விமர்சனங்களை ஆரம்பித்துள்ளனர்.

இப்பொழுது ரெலோவிற்குள் இந்த விமர்சனங்கள் மேலெழுந்ததற்கு காரணம் ரெலோவிற்குள் சில உறுப்பினர்கள் கொஞ்சம் அதிருப்தியாக இருக்கிறார்கள். அதில் முக்கியமானவர் யாழ் மாவட்ட முக்கியஸ்தர் விந்தன் கனகரட்ணம்.

கட்சியின் பொதுக்குழு, தலைமைக் குழு கூட்டங்கள் அண்மையில் நடந்தபோதும், அவற்றில் கலந்துகொள்ளாமல் புறக்கணித்து விட்டார். கட்சி தலைமையில் கடுமையான அதிருப்தியில் இருக்கிறார். வடக்கு அமைச்சராக விந்தன் கனகரட்ணத்தை பிரேரிப்பதென கட்சி முடிவெடுத்திருந்த நிலையில், தலைவர் செல்வம் அடைக்கலநாதன் பின்னர் முதலமைச்சரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு குணசீலனை பிரேரித்திருந்தார். விந்தனிற்கு அமைச்சர் பதவி கொடுக்கலாமென்ற முடிவிற்கு முதலமைச்சர் வந்திருந்த சமயத்தில் இது நடந்தது. இது அவரை கடுமையாக அதிருப்தியடைய வைத்துள்ளதாக தெரிகிறது."

"குழப்பம் பெரியளவில் இருக்கிறதா?"

"அப்படி சிக்கலாகவில்லை. ஆனால் மெல்லிய அதிருப்தியுடன் ஒரு அணியாக உருவாகி வருகிறார்கள். ஒரு அதிருப்தி வந்தால், பின்னர் எல்லாமே அதிருப்தியாகத்தான் மாறும் என்பதை போலத்தான் இது. அமைச்சர் விடயத்திற்கு பிறகும் மெல்லிய குழப்பங்கள் தொடர்கிறது. விந்தனிற்கு அமைச்சர் பதவி கிடைக்காமல் விட்டதன் பின்னர் கட்சியின் யாழ்ப்பாண நகர்வுகளில் தொடர்ந்து அதிருப்தியடைந்து வருகிறார் போல தெரிகிறது.

கட்சியின் செயலாளர் சிறிகாந்தாவிற்கும், அவருக்குமிடையில் கண்ணுக்கு தெரியாத பனிப்போர் ஒன்று நடக்கிறது. இப்போது ஆரம்ப கட்டத்தில் இந்த குழப்பங்கள் இருந்தாலும், அடுத்தடுத்த வாரங்களிலோ மாதங்களிலோ நிச்சயம் வளர்வதற்கான வாய்ப்பே தெரிகிறது.

"ஏன்?"

"முதலாவது இந்த குழப்பங்களை தீர்க்க கட்சி இன்னும் நடவடிக்கையெதையும் ஆரம்பிக்கவில்லை. கட்சியின் நீண்டகால செயற்பாட்டாளர்களான தாம் புறக்கணிக்கப்படுவதாகவே விந்தன் அணி அதிருப்தியில் இருக்கிறது. அவர்களை திருப்திப்படுத்த ஏதாவது செய்ய வேண்டும். ஆனால் இப்போதைக்கு கட்சிக்குள் அது சாத்தியமில்லையென்றுதான் தெரிகிறது.

இந்த பிரச்சனையில் எண்ணெய் ஊற்றப்போகிறது, தேசியப்பட்டியல் நியமனம். தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் ஆசனமொன்றை ரெலோவிற்கு வழங்குவதாக தமிழரசுக்கட்சி முன்னர் சொல்லியிருந்தது. ஆனால், பின்னர் வழக்கம்போல அதையெல்லாம் கிடப்பில் போட்டு விட்டது. ஆனால் இம்முறை ரெலோ அந்த ஆசனத்தை விட்டுக்கொடுக்க தயாரில்லை. தேசியப்பட்டியல் ஆசனத்தை எப்படியும் பெற்றுக்கொள்வதென கட்சிக்குள் முடிவெடுத்து, தமிழரசுக்கட்சி தலைமை, கூட்டமைப்பின் தலைவரோடு பேச்சும் நடத்தியிருக்கிறார்கள். வழக்கம் போல பார்க்கலாம், யோசிக்கலாம் என்ற பாணியிலான பதில்கள்தான் அவர்களிற்கு கிடைத்தது. இறுதியாக இப்பொழுது தேசியப்பட்டியலை யாருக்கும் கொடுப்பதில்லையென்ற முடிவிற்கும் வந்துவிட்டனர்.

கூட்டமைப்பை விட்டு வெளியேற போகிறோம் என அடிக்கடி மிரட்டிக் கொண்டும் இருக்க முடியாது. அதேநேரம் இனியும் கூட்டமைப்பிற்குள் "சின்ன பிள்ளைகளாக" இருக்கவும் தயாரில்லை. ஆகவே, சில வித்தியாசமான முடிவுகளை கட்சி எடுக்கவும் வாய்ப்புள்ளது. விரைவில் கட்சியின் மாநாடு நடைபெறவுள்ளது. அதில் கொஞ்சம் அதிரடியான முடிவுகள் எடுக்கப்படலாம்."

"ரெலோவின் தேசியப்பட்டியல் யாருக்கென்பதில் குழப்பமான தகவல்கள் வருகிறதே"

"இதைத்தான் ஆரம்பத்திலேயே, கட்சிக்குள் சில குழப்பங்கள் இருப்பதாக சொன்னேன். தேசியப்பட்டியல் ஆசனம் யாருக்கு என்பதில் ரெலோவிற்குள் பெரிய பனிப்போர் நடந்து வருகிறது.

கிழக்கை சேர்ந்த ஹென்ரி மகேந்திரன், ஜனா இருவரும் அதில் கண் வைத்துள்ளனர். ஆனால் இருவருக்கும் ஆகாது. யாராவது ஒருவருக்கு முக்கிய பதவி கிடைப்பதை மற்றவர் விரும்பமாட்டார். அதன் மூலம் அவர் செல்வாக்கானவராக மாறிவிடுவார் என அச்சப்படுகிறார்கள். ஆரம்பத்தில் கட்சியின் செயலாளர் பதவிக்கு இருவரும் மல்லுக்கட்டினார்கள்.

இப்போது தேசியப்பட்டியலிற்கும் இருவரும் காய்களை நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள். இருப்பது ஒரு தேசியப்பட்டியல் வெற்றிடம். அதை இருவரில் ஒருவருக்கு கொடுக்க முடியாது. அப்படி கொடுத்தால் மற்றவர் அதிருப்தியடைந்து விடுவார், ஏற்கனவே ஒரு அதிருப்தி அணி உருவாகி வரும் நிலையில், தேசியப்பட்டியலில் அதிருப்தியடைபவரும் அந்த அணியில் இணைந்து, அது பலப்பட்டு விடும் என கட்சி தலைமை நினைக்கிறது. அதனால்தான் முன்னாள் எம்.பி வினோ நோகராதலிங்கத்தின் பெயர் இப்பொழுது அடிபடுகிறது. கட்சி தலைமையின் ஆசீர்வாதத்துடன்தான் வினோ நோகராதலிங்கத்தின் பெயர், கடந்த செயற்குழு கூட்டத்தில் முன்மொழியப்பட்டதாம்.

வினோ நோகராதலிங்கத்திற்கு தேசியப்பட்டியல் நியமனம் கொடுப்பதன் மூலம் ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடிக்க விரும்புகிறது தலைமை. உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மன்னாரிலும் கூட்டமைப்பிற்கு சறுக்கல். அதிலும் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதனின் சொந்த ஊராக விடத்தல் தீவை உள்ளடக்கிய மாந்தை மேற்கு பிரதேசசபையை ஐக்கிய தேசிய கட்சியின் சின்னத்தில் போட்டியிட்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்தான் கைப்பற்றியுள்ளது. மன்னார் மாந்தை கிழக்கும் கூட்டமைப்பிடம் இல்லை. மன்னார் நகரசபையை மயிரிழையில்தான் கைப்பற்ற முடிந்தது. மன்னாரையும், வன்னி தேர்தல் தொகுதியையும் பலப்படுத்த வேண்டிய தேவை செல்வம் அடைக்கலநாதனிற்கு உண்டு.

வடமாகாணசபையில் ரெலோ சார்பில் தெரிவாகும் அமைச்சர்கள் மன்னாரை சேர்ந்தவர்களாக இருப்பதும் அதனால்தான். வினோ நோகராதலிங்கத்திற்கு தேசியப்பட்டியல் நியமனம் வழங்குவதன் மூலம், வன்னிக்குள் தம்மை கொஞ்சம் பலப்படுத்துவதாகவும் அமையும், ஹென்ரி மகேந்திரனா, ஜனாவா என்ற சச்சரவில் சிக்குவதையும் தவிர்த்ததாக அமைந்து விடும் என கட்சி தலைமை நினைக்கிறது.

இப்படி பல குழப்பங்களுடன் கட்சி மாநாட்டை எதிர்பார்த்திருக்கிறது ரெலோ. அதிலும் சில சுவாரஸ்யங்கள் இருக்கும்" என்றபடி பறந்து சென்றார்.



**"டெனீஸ்வரனை அரசியலிற்கு கொண்டு வந்தபோது, ரெலோவிற்குள் ஒரு குழப்பம் ஏற்பட்டது. நீண்டகால கட்சி செயற்பாட்டாளர்கள் இருக்க, வெளியிலிருந்து ஆட்களை கொண்டு வருகிறார்கள் என கட்சி உறுப்பினர்களிடம் கொஞ்சம் அதிருப்தி இருந்தது.**

**நெ**டுந்தீவு பிரதேசசபையில் இன்னும் வெடிக்காமல் எரிமலையொன்று குமுறிக் கொண்டிருக்கிறது. அப்படித்தான் இருக்கிறது நிலைமை. பிரதேசசபைக்குள் ஏற்பட்ட அணி குழப்பம் உள்ளுக்குள் புகைந்து கொண்டிருக்கிறது. விரைவில் வெடித்து பகிரங்கமாகலாமென தெரிகிறது.

நெடுந்தீவு பிரதேசசபையில் தமிழ் தேசிய கூட்டமைப்பும், சுயேட்சைக்குழுவும் இணைந்து ஆட்சியமைத்தன. முதல் இரண்டு வருடமும் தமிழ் தேசிய கூட்டமைப்பும், அடுத்த இரண்டு வருடங்களும் சுயேட்சைக்குழுவும் தவிசாளர் பதவியை வகிப்பதென ஏற்பாடு. அண்மையில் உப தவிசாளரான தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் மரணமானார். இன்றவரை சபையில் உப தவிசாளர் இல்லை. உப தவிசாளரை தேர்ந்தெடுப்பதற்காக இதுவரை மூன்று அமர்வுகளில் முயற்சிக்கப்பட்டும், இன்றும் உப தவிசாளர் தேர்ந்தெடுக்கப்படவில்லை. முதலிரண்டு அமர்வுகளிலும் சுயேட்சைக்குழு கலந்துகொள்ளவில்லை. மூன்றாவது அமர்வில், உபதவிசாளர் தேர்விற்கு முன்னதாக சுயேட்சைக்குழு, ஈ.பி.டி.பி இணைந்து சபையை விட்டு வெளியேறி விட்டனர். ஏன் இந்த இழுபறி தெரியுமா? உப தவிசாளராக தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினரை ஆதரிப்பதெனில், தவிசாளர் பதவியை தமக்கு தர வேண்டுமென சுயேட்சைக்குழு வலியுறுத்தியுள்ளது. இதனால்தான் உப தவிசாளரை தேர்ந்தெடுக்க முடியாமல் இழுபறியாக உள்ளது. அதேநேரம், இரண்டு வருடங்களின் முன்பாக தவிசாளர் பதவியை சுயேட்சைக்குழுவிற்கு கொடுக்க சம்மதிக்க மாட்டோம் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நெடுந்தீவு பிரதேசசபை உறுப்பினர்கள் கையெழுத்திட்டு கடிதமொன்றை கட்சித் தலைமைக்கு அனுப்பியுள்ளனர். போகிற போக்கை பார்த்தால், உப தவிசாளர் பதவியை ஈ.பி.டி.பி கைப்பற்ற வாய்ப்புள்ளதாக தெரிகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எப்படியிருக்கும் மாகாணசபை தேர்தல் களம்? 02

# தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு காத்திருக்கும் விசப்பரீட்சை

## கட்டம் கட்ட காத்திருக்கும் 'பெரியண்ணா'... வாசலை திறப்பாரா முதலமைச்சர்?

தீபம் குழு

வடக்கு முதலமைச்சர் வேட்பாளர் யார்? எப்படியிருக்கும் வடக்கு தேர்தல் களம்? கட்சிகளின் நிலைமை எப்படியிருக்கிறது? எப்படியான பெறுபேற்றை பெறுவார்கள்? இப்படியாக தலைவெடிக்கும் ஆயிரம் கேள்விகளுடன் காத்திருக்கும்வாக்காள பெருமக்களான உங்களிற்காகவே இந்த தொடரை ஆரம்பித்துள்ளோம்.

விக்னேஸ்வரன், மாவை என இருந்த போட்டிக்களத்தில் பின்னர் டக்ளஸ் தேவானந்தாவின் பெயரும் அடிபட்டது. இறுதியாக நானும் இருக்கிறேன என விஜயகலாவின் பெயரும் சேர, தேர்தல் அரசியல் களம் இப்போதே சூடு பிடித்துள்ளது. இப்போதைய பரபரப்பிற்குள் அகப்பட்டவர்கள் எல்லோருமே தேர்தலில் களமிறங்க வாய்ப்பிருக்கிறதா? யார் போட்டியிடுவார்கள்? யார் வெளியேறுவார்கள்? எந்த கட்சிக்கு ஏற்றம் வரும்? எந்தக்கட்சிக்கு சறுக்கல் ஏற்படும்? இப்படியான குழப்பத்துடன் இருப்பவர்களிற்கு நாங்கள் பதில் சொல்கிறோம்.

இனப்பிரச்சனை தீர்விற்கு மாகாணசபை முறையை தீர்வல்ல, அதனால் நாங்கள் மாகாணசபை தேர்தலை புறக்கணிக்கிறோம் என கடந்த மாகாணசபை தேர்தலை புறக்கணித்த தமிழ் தேசிய மக்கள் முன்னணி இம்முறை என்ன செய்யும்? தமிழ் தேசிய மக்கள் முன்னணி இம்முறை மாகாணசபை தேர்தலில் களமிறங்குமா?

இம்முறை மாகாணசபை தேர்தலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி நிச்சயம் களமிறங்கும். அதற்கான முன்னாயத்தங்களில் கட்சி இப்பொழுதே ஈடுபட தொடங்கி விட்டது.

முன்னர் மாகாணசபை தேர்தலை புறக்கணித்தது, இப்பொழுது எப்படி போட்டியிடலாம் என்ற விமர்சனத்தை எதிர்தரப்பிடமிருந்து முன்னணி எதிர்கொள்ள வேண்டி வரலாம். ஆனால், அது விமர்சனத்திற்குரியதல்ல என்பதே நடைமுறை அரசியல் யதார்த்தம்.

ஒரு அரசியல் இயக்கமாக பரிமாணமடையும் அமைப்புக்கள் இப்படியான பல மாற்றத்திற்கு உட்படுவது இயற்கை நியதி. ஒரு சமயத்தில் விடுதலைப்புலிகள் அமைப்பிற்குள் திருமணம் அனுமதிக்கப்படவில்லை. விடுதலைப்புலிகள் அமைப்பிற்குள் ஏற்பட்ட முதலாவது பெரிய பிளவான உமாமகேஸ்வரன் பிரிவு கூட அதனால் ஏற்பட்டதுதான். ஆனால் அடுத்தடுத்த சில வருடங்களிலேயே விடுதலைப் புலிகள் அமைப்பிற்குள் திருமணம் அனுமதிக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் அமைப்பின் எதிராளிகள் இன்றும் வன்மத்துடன் அந்த சம்பவத்தை பகிடி விடுவது வழக்கம். அது வன்மத்தால் மட்டுமே உருவாக பகிடி. மானுடவியல் இயக்கத்தை புரிந்தவர்கள், அதை மீறி செயற்பட முடியாதென்பதை அறிவார்கள்.

அதேபோல ஜனநாயக தேர்தல் அரசியல் இயக்கங்களிற்கும் சில அடிப்படை விதிகள் உள்ளன. அவற்றை நிராகரித்து அமைப்புக்கள் இயங்க முடியாது. கூடவே, அரசியல் இயக்கமாக பரிணமிக்கும்போதும், சில மாறுதல்களை உட்புகுத்துவது இயல்பே. அப்படி, உள்ளூராட்சி பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்யாமல் பெரிய இலக்குகளை அடைய முடியாதென்ற யதார்த்தத்தை தமிழ் தேசிய மக்கள் முன்னணி கடந்த எட்டு வருடங்களில் கற்றுக்கொண்டதாக தெரிகிறது.

ஆகவே நிச்சயம் அவர்கள் மாகாணசபை தேர்தலில் களமிறங்குவார்கள்?

தமிழ் தேசிய மக்கள் முன்னணி தனித்து போட்டியிடுமா? கூட்டாக போட்டியிடுமா? கூட்டாக என்றால் யாருடன்?

உண்மையில் இந்த கேள்விகளிற்கு யாருக்குமே பதில் தெரியாது. யாருக்குமென்றால்... தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் அதில் அடக்கம்!

வரும் மாகாணசபை தேர்தலில் அதிகம் சிக்கலில் சிக்கியுள்ள கட்சி தமிழ் தேசிய மக்கள் முன்னணிதான். முன்னணிக்கு இம்முறை ஏற்பட்டுள்ள





சிக்கல்கள் வித்தியாசமானவை.

தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு மாறான கூட்டணியொன்றை உருவாக்குவதற்காக தமிழ் தேசிய மக்கள் முன்னணி நீண்டகாலமாக முயற்சித்து வருகிறது. ஆனால் இன்னும் அது சரியாக அமையவில்லை. கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில், ஈ.பி.ஆர்.எல்.எவ் உடன் கூட்டணி பேச்சுக்கள் எல்லாம் முடிந்து, "இந்தா கூட்டணி அமைகிறது" என எதிர்பார்க்கப்பட்ட சமயத்தில், ஆனந்தசங்கரியுடன் கைகோர்த்தார் சுரேஷ் பிரேமச்சந்திரன். எல்லாம் கூடி வந்த நேரத்தில் சுரேஷ் பிரேமச்சந்திரன் காலைவாரிய கோபம் முன்னணிக்கு இன்னும் இருக்கிறது. பக்கத்து நாடான "பெரியண்ணா" தான் அந்த கூட்டணியை குழப்பியது என்ற அப்பிராயம் பரவலாக அரசியல் வட்டாரங்களில் உள்ளது. முன்னணியிடமும் அதேவிதமான அபிப்பிராயம் உள்ளது.

அப்பொழுதும் முதலமைச்சருடன் முன்னணி பேசியிருந்தது. முதலமைச்சர் தலைமையிலான ஒரு கூட்டணியில் அது தமிழ் மக்கள் பேரவையாகவும் இருக்கலாம் போட்டியிடலாமென முன்னணி முயற்சித்தது. ஆனால் முதலமைச்சர் விக்னேஸ்வரனும் அந்த கூட்டணி முயற்சியை முன்னகர விடாமல் தடுத்து விட்டார். அதனால் தமிழ் தேசிய மக்கள் முன்னணி தனித்து போட்டியிட்டிருந்தது. உள்ளூராட்சி தேர்தலில் முன்னணி தனித்து போட்டியிட்டு பெற்ற வாக்குகள், முன்னரைப் போல கூட்டணிகளிற்காக காத்திருக்க வேண்டியதில்லையென்ற உற்சாகத்தை நிச்சயம் கொடுத்திருக்கும்.

அதனால் இன்றுவரை முன்னணியின் பிரதான வாயில் முதலமைச் சரிற்காகவே திறந்து வைக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் தமது கூட்டணியை தலைமையேற்கட்டும் என முன்னணி பகிரங்கமாக கூறி வருகிறது.

உள்ளூராட்சி தேர்தலின் பின்னரும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முதலமைச்சரை சந்தித்து, தமது கூட்டணிக்கு தலைமையேற்க அழைப்பு விடுத்திருந்தார். ஆனால் அப்பொழுது அவர்கள், ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட் போன்ற கட்சிகள் அந்த கூட்டணிக்குள் வரக்கூடாது என்ற நிபந்தனையையும் விதித்திருந்தார்கள். அவர்களிடம் முதலமைச்சர் தெளிவான பதிலெதுவும் கூறியிருக்கவில்லை. "யோசிக்கலாம்" என்ற அளவில் கூறியிருந்தார்.

முதலமைச்சர் தனிக்கட்சி தொடங்குவாரா?, ஒரே அரசியல் நிலைப்பாட்டில் நிலைத்து நிற்பாரா?, ஒவ்வொரு அடியையும் யோசித்து, நிதானமாக எடுத்து வைக்கிறாரா?, ஒரு அரசியல் சக்தியாக உருவெடுக்கும் வல்லமையும், நோக்கமும், அரசியல் பார்வையும் அவரிடம் உள்ளதா? இப்படி ஆயிரம் கேள்விகளுடன் முன்னணி இப்பொழுது அல்லாடிக்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கிறது.

தேர்தலிற்கு இன்னும் காலமுள்ளது. ஆனால்,புதிய அரசியல் அணியொன்று களமிறங்குவதென்றால், அந்த அணி மக்களை தயார்செய்ய போதிய அவகாசம் கிடையாது. இந்த நிலைமையில் முதலமைச்சர் வீட்டு வாசல் கதவை பார்த்துக் கொண்டு நிற்க வேண்டிய நெருக்கடி முன்னணிக்கு ஏற்பட்டுள்ளது.

முன்னணியும், முதலமைச்சரும் இணைந்தால் மாத்திரமே வலுவான கூட்டணியை உருவாக்கலாம், இல்லா விட்டால் வாக்குகள் சிதறி அழுத் தக்குழுக்களாக மட்டுமே மாகாண சபைக்குள் இடம்பிடிக்கலாமென்பது இரண்டு தரப்பிற்கும் தெரியும். அதனால், ஆகக்கூடுதலான பட்சம் முதலமைச்சருக்காக காத்திருக்கலா மென முன்னணி முடிவெடுத்துள்ளது போல் தெரிகிறது.

எனினும், முன்னணியில் “தூய்மை வாத நிபந்தனைகளை” மீறி முதல மைச்சர் முன்னணியுடன் ஒரு இணக்கப்பாட்டிற்கு போக வாய்ப் புள்ளதா என்றும் தெரியவில்லை. ஏனெனில், ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட் போன்ற கட்சிகளை தமது கூட்டணிக்குள் சேர்க்ககூடாதென முன்னணி நிபந்தனை விதித்துள்ளது. தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து வெளியேறுவதாக புளொட் எந்த சந்தர்ப்பத்திலும் சொல்லவுமில்லை. முன்னணிக்கோ, முதல்வருக்கோ இரகசிய வாக்குறுதி கொடுத்ததாகவும் தெரியவில்லை. ஆனால் புளொட்டும் வரலாமென்ற சொந்த ஊகத்தின் அடிப்படையில் நிபந்தனைகளை போட்டுள்ளது முன்னணி.

தனிக்கட்சியா, கூட்டணியா, தமிழ் தேசிய கூட்டமைப்பா என்பதை யெல்லாம் முதலமைச்சர் இன்னும் வெளிப்படையாக்கவில்லை. அரசிய லில் தொடரப் போகிறேன் என்பதை மாத்திரமே வெளிப்படுத்தியுள்ளார். முதலமைச்சரின் மகன்,கட்சியொன்றை பதிவுசெய்யும் முயற்சியில் இருப்பதாக ஒரு தகவல். அதற்கும் அப்பால் எந்த தகவலும் வெளியாகவில்லை.

இப்படியிருக்க, முதலமைச்சரிற்காக காத்திருக்கிறது முன்னணி. ஒருவேளை மாற்று அணியொன்றிற்கான ஆர்வத் துடன் முதலமைச்சர் வெளியில் வந்தாலும், மாற்று அணிக்கான வாய்ப்புள்ளதா என்ற கேள்வியுள்ளது. ஏனெனில், முதலமைச்சரிற்கு ஈ.பி.ஆர். எல்.எவ், முன்னணியை விட புளொட் மீது ஒரு “மென்பார்வை” இருப்பதாக தெரிகிறது. முதலமைச்சர் தனக்கு நம்பிக்கையானவர்களிடம் ஈ.பி.ஆர். எல்.எவ், முன்னணி தொடர்பான எச்சரிக்கை, சந்தேகம் கலந்த அபிப் பிராயங்களை வெளியிட்ட சந்தர்ப் பங்களும் உள்ளன. தமிழ் மக்கள் பேரவை, தேர்தலில் களமிறங்க வேண்டுமென்ற அப்பிராயம் எழுந்தபோது, அதில் அங்கம் வகித்த தமிழ் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.ஆர்.எல்.எவ் போன்றவற்றை பேரவைக்குள் பலவீனமடைய செய்யும் காரியங்களைத்தான் முதலமைச்சர் செய்தார். அந்த கோபத்தில்தான் தமிழ் தேசிய பேரவையென்ற பெயரில் முன்னணி தேர்தலில் களமிறங்கியது.

அப்படி பார்த்தால், முன்னணியின் நிபந்தனைக்காக புளொட்டை அவர் தூக்கியெறிவாரா என்பது சந்தேகமே. பரந்துபட்ட கூட்டணியொன்றே வெற்றிக்கான வழியென ஈ.பி.ஆர். எல்.எவ் ஐயும் அதில் இணைத்தால் தமிழ் தேசிய மக்கள் முன்னணி அந்த கூட்டணிக்குள் இருக்க வாய்ப்பில்லை. இன்னும் நான்கைந்து வருடத்தின் பின், “அதீத அரசியல் தூய்மைவாதத்தின்” சாத்தியமற்ற தன்மையை உணர்ந்து முன்னணி கைவிடும். வரலாற்றின் வழியில் அரசியல் இயக்கமொன்று கற்றுக்கொண்ட பாடமாக அதை அப்போது கொள்ளலாம். சில வேளைகளில் அந்த முதிர்ச்சி இம்முறை ஏற்பட்டு பரந்துபட்ட கூட்டணிக்கு வாய்ப்புள்ளதோ தெரியவில்லை. அதை தெளிவாக கூற முடியாது.

முதலமைச்சர் அணியுடன் கூட்டு வைக்காத பட்சத்தில் சிறியளவிலான கூட்டணியொன்றை உருவாக்கும் வாய்ப்புள்ளது. சில பொது அமைப்புக்கள் உள்ளிட்ட தரப்புக்கள் முன்னணியின் கூட்டுக்குள் வரலாம்.

முன்னணிக்கு உள்ள மிகப்பெரிய சிக்கல், முதலமைச்சரிற்காக எவ்வளவு காலம் காத்திருப்பதென்பதே. முதல மைச்சர் தமிழ் தேசிய கூட்டமைப்பின் முகாமிற்குள்ளும் ஐக்கியமாக வாய்ப்புள்ளது. கடைசி நொடியில் இப்படி நடந்தால், காத்திருந்தது, காலத்தை வீணாக்கியதாகி விடும். முன்னணிக்கு அப்படியொரு நெருக்கடியும் உள்ளது. அதனால்தான் மற்ற எல்லா கட்சிகளையும் விட முன்னணிக்குத்தான் இந்த தேர்தல் சிக்கலை கொடுத்துள்ளது என்று ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ளோம்.

விக்னேஸ்வரனை தவிர்த்த கூட்டணியொன்றிற்கு முன்னணி போகுமெனில், அதன் முதலமைச்சர் வேட்பாளராக அனேகமாக கஜேந்திரகுமார் பொன்னம்பலமே களமிறங்க அதிக வாய்ப்புள்ளது. முன்னணிக்குள் உள்ள அதிகபட்ச கவர்ச்சிகரமான வேட்பாளர் அவர்தான். அவரை விட பொறுத் தமான பொதுவேட்பாளர் கிடைப் பாரா என்பதும் சந்தேகம்தான். அதனால் கஜேந்திரகுமார் களமிறங் கவே அதிகமான வாய்ப்புள்ளது.

கடந்த உள்ளூராட்சி தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் அதிருப்தி வாக்குகளில் ஒரு பகுதி முன்னணிக்கும் சென்று சேர்ந்தது. அந்த வாக்குகள் முன்னணியிடமே தங்கியிருக்குமா, திரும்பவும் தமிழ் தேசிய கூட்டமைப்பிடம் திரும்பி விடுமா என்பதிலேயே முன்னணியின் வெற்றி தங்கியுள்ளது. அந்த வாக்குகள் திரும்பவும் கூட்டமைப்பிற்கு திரும்பினால், முன்னணிக்கு பெரிய சறுக்கலாகவே முடியும்.

அதிருப்தி வாக்குகளை திருப்பி யெடுக்கும் முயற்சிகளை தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆரம்பித்திருப்பதாக தெரிகிறது. கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பதிலேயே அதிருப்தி வாக்குகள் முழுமையாக திரும்புவதும், திரும்பாமல் விடுவதும் தங்கியுள்ளது. அந்தவகையிலும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வெற்றியை தீர்மானிக்கும் இரண்டாவது வெளிக் காரணியும் உள்ளது.

அதுசரி, முதலாவது வெளிக்கார ணியை குறிப்பிடாமல் இரண்டாவது வெளிக்காரணியை மட்டும் குறிப் பிட்டுள்ளோமே என வாசகர்கள் குழப் பமடையலாம். முதலாவது வெளிக்கார ணியையும் குறிப்பிட்டு விடுகிறோம்.

கோத்தபாய ராஜபக்ச தேர்தலில் போட்டியிடலாமா என்பதையும், மஹிந்த ராஜபக்சவின் தேர்தல் வெற்றி யையும் வெளிநாடுகள் தீர்மானிக்கும் வல்லமையுடன் இருக்கிறதென்றால், தமிழ் தேசிய மக்கள் முன்னணி போன்ற கட்சியை வளர்ப்பதோ, வீழ்த்துவதோ இலங்கையில் செல்வாக்கு செலுத்தும் வல்லரசுகளிற்கு பெரிய விசயமேயில்லை. தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் அதிதீவிர நிலைப்பாடுகள் இந்த வல்லரசுகளிற்கு நிச்சயம் உவப்பாக இருக்காது. குறிப்பாக அண்டை நாட்டு பெரியண்ணாவிற்கு முன்னணி தொடர்பான எதிர்மறை யான பார்வைதான் உள்ளது. ஒரு அழுத்தக்குழுவாக அவர்கள் வளர் வதை அனுமதிப்பார்களே தவிர,



அதிகாரத்தை கைப்பற்றும் தரப்பாக வளர அனுமதிப்பார்களா என்பது சந்தேகம்தான். அதனால் கடந்த உள்ளூராட்சி தேர்தல் சமயத்திலும் கூட்டணிகளிற்குள் புகுந்து விளை யாடி, முன்னணியை தனிமைப் படுத்தினார்கள் என்ற அபிப்பிரா யம் உள்ளதை ஏற்கனவே குறிப்பிட் டுள்ளோம். அதையும் மீறி உள்ளூராட்சி மன்ற தேர்தலில் முன்னணி வாக்குகளை பெற்றிருக்கிறது. இது இன்னும் கொஞ்சம் “ஹோம்வேர்க்” செய்ய வேண்டுமென்பதை அந்த தரப்புக்களிற்கு உணர்த்தியிருக்கும். அதனால், மாகாணசபையில் முன்னணியை மேலும் “கட்டம் கட்டும்” கூட்டணிகளை உருவாக்கவே அந்த தரப்புக்கள் முயலும்.

மொத்தத்தில் வரும் மாகாணச பை தேர்தல் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு பெரும் விசப்பரீட்சை யாகவே அமைய வாய்ப்புண்டு.

தீபம்

989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்

தொடர்புகளிற்கு

ஆசிரியர்பீடம் : 0214927562 விநியோகம், விளம்பரம் : 0214927542, 0768255563

அலுவலகம் : 0214927561 கருத்துக்கள், முறைப்பாடுகள் : 0768255562

செய்திகள் அனுப்ப : deepamdesk@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழுத்து விழுத்துவது தமிழர்களின் இயல்பு... அதை செய்யாவிட்டால் வெற்றிபெறலாம்!

## உலகத் தமிழர் பேரவை தலைவர் எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகள்

நேர்காணல்: முரளி

உலகத் தமிழர் பேரவையின் தலைவர் எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகளாரின் பேட்டி கடந்த இதழில் வெளியானது. இதன் தொடர்ச்சியாக இந்த வாரமும் பல்வேறு விடயங்களை பேசியுள்ளார். இனப்பிரச்சனை தீர்வு முயற்சிகள், அடுத்த வடமாகாண முதலமைச்சர் வேட்பாளர் உள்ளிட்ட பல விடயங்களை மனம் திறந்து பேசியுள்ளார்.



**தீபம் : இலங்கை தமிழ் அரசியலில் உலகத் தமிழர் பேரவை என்ன விதமான பங்கு வகிக்கிறது?**

**எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகள் :** போர் முடிந்ததன் பின்னர் போராட்டம் சர்வதேச மயப்படுத்தப்பட்டது. சர்வதேச அமைப்புக்கள் ஐ.நா சபை, மனித உரிமைகள் பேரவை, அரசியல் தலைவர்களை சந்தித்து சர்வதேசமயப்பட்ட போராட்டத்தை முன்னெடுப்பதற்காகவே உலகத்தமிழர் பேரவை உருவானது. 27 நாடுகள் புலிகளை தடைசெய்திருந்தன. 20 நாடுகள் ஆயுதம் கொடுத்து புலிகளை அழித்திருந்தார்கள். அந்த நாடுகளை மனமாற்றமடைய செய்திருக்கிறோம். இங்கிருந்து கத்திக் கொண்டிருந்ததால் அந்த மாற்றம் வரவில்லை. நாடு நாடாக சென்று உண்மைகளை சொன்னோம். அதனால்தான் மாற்றம் நிகழ்ந்தது. இப்பொழுதும் அதைத்தான் செய்து கொண்டிருக்கிறோம். இந்த வருடம் மார்ச் மாதம் நாங்கள் பதின்மூன்று பேர் அமெரிக்காவிற்கு சென்று ஐ.நாவில் நான்கு கூட்டங்களும், அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தில் நான்கு கூட்டங்களும் நடத்தினோம்.

அரசாங்கம் இப்பொழுது தள்ளாடிக் கொண்டிருக்கிறது. இந்த அரசாங்கத்தை தொடர்ந்து வைத்திருக்க வேண்டும். அவர்கள் கூறியதை இன்னும் செய்யாவிட்டாலும், அவர்கள் செய்யக்கூடிய வாய்ப்புள்ளது என்பதை சொன்னோம். அரசாங்கம் வாக்குறுதியளித்தும் செய்யாத விசயங்களையும் கூறி, அவற்றை நிறைவேற்ற வேண்டியதையும் வலியுறுத்தினோம்.

இப்படியான வேலைகளை வேறு யாரும் செய்யவில்லை. இந்த அரசாங்கத்திற்கு நாங்கள் விமர்சித்த ஒத்துழைப்பு வழங்குகிறோம். அவ்வளவுதான். அரசாங்கத்திற்காக பிரச்சாரம் செய்யவில்லை.

ஜெனீவாவில் அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகளை எப்படி நிறைவேற்றுகிறது என்பதை விழிப்பாக இருந்து கவனித்துக் கொண்டிருக்கிறோம். இங்கே எப்படியான மாற்றங்கள் நடக்கிறது என்பதை கவனித்துக் கொள்வதற்காகவே இலங்கைக்கு வந்து தங்கியிருக்கிறேன்.

இன்றைக்கு சிலர் எம்மை விமர்சிக்கிறார்கள். துரோகி என்கிறார்கள். விமர்சிப்பவர்கள் விமர்சித்துக் கொண்டுதான் இருப்பார்கள். நானும் ஒரு தமிழன். தமிழ் உணர்வாளன். கண்மூடித்தனமாக விமர்சிப்பவர்கள் உண்மையான தமிழர்கள் அல்ல.

புலம்பெயர்ந்த தமிழர்கள் இங்கு வந்து வாழ முடியாவிட்டாலும், நீங்கள் அங்கிருந்தபடி யாவது நாட்டையும், மக்களையும் முன்னேற்ற சிறுதுளியாவது உதவி செய்யுங்கள். அதைவிட்டுவிட்டு, அங்கிருந்து பேசிக் கொண்டிருப்பது வீண்.

எமது பிரதான பணி, சர்வதேச ரீதியாக எமக்கு ஒத்துழைப்பை திரட்டுவதுதான். சர்வதேசத்தின் ஒத்துழைப்பில்லாமல் எமது போராட்டம் தொடர முடியாது. அதை உணராமல், சர்வதேச பிரேரணைகளை எரிப்பதும், அவர்களிற்கு போதிப்பதும் மடத்தனமானவை. அப்படியான தலைவர்களும் இருக்கிறார்கள்.


எமது போராட்டத்திற்கு உண்மையான ஒரு சாட்சியாக இருப்பது சர்வதேசம். முள்ளிவாய்க்காலில் போர் முடியும்வரை அவர்கள் எம்மை பிழையாக விளங்கிக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது அவர்கள் உன்னிப்பாக பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாவிட்டாலும், நாங்கள் நம்பிக்கை இழக்காமல் கடைசிவரை நேர்மையாக போராடுவோம். தமிழர் தரப்புத்தான் சமாதானத்தை குழப்பியதாகவே இதுவரை சொல்லி வந்தார்கள். இம்முறை நாங்கள் உறுதியாக இருக்கிறோம். எமக்கு சமாதானம் வேண்டும்.

இலங்கை அரசாங்கம் தீர்வை தராவிட்டாலும், போராட்டத்தை தொடர சர்வதேச ஒத்துழைப்பு மிகமிக முக்கியம். அவர்கள் நல்லவர்கள், சிறந்தவர்கள் என்பதல்ல. ஆனால் உலக அமைப்பில், அவர்களிற்கான இடத்தை கொடுக்க வேண்டும்.

**தீபம்: இனப்பிரச்சனை தீர்வு முயற்சிகளிலும், போரால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வு முயற்சிகளிலும் உலகத் தமிழர்கள் ஒன்றுபட்டு செயற்பட முடியாத நிலைமைநீடித்துக்கொண்டிருக்கிறது. பலஅமைப்புக்களாகபிரிந்துதமக்குள் மோதிக் கொண்டிருக்கிறார்கள். இந்த பிளவை சரி செய்ய முடியாதா?**

**எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகள் :** பல புலம்பெயர் தமிழர்கள் நேரடியாக உதவிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். அதை மறுக்க முடியாது. தங்கள் ஊர்களிற்கு, அமைப்புக்களிற்கு, பாடசாலைகளிற்கு உதவிகள் செய்கிறார்கள். அவர்கள் ஒருமைப்பட்டு செயற்படுவதென்பது ஒருநாளும் நடக்க முடியாது. தமிழர்களிற்குள் ஒற்றுமையென்பது நடக்காது. அதைப்பற்றி பேசி பலனில்லை. எங்களது உன்னத இலட்சியத்தில் ஒருமைப்பாட்டை தேடலாமே தவிர எங்களுடைய அமைப்புக்களிலும், நடவடிக்கைகளிலும் ஒற்றுமையை தேட முடியாது. உன்னத இலட்சியம் என்பது நான் ஒரு தமிழன், தாயகத்தையும் மக்களையும் நேசிப்பவன், பாதிக்கப்பட்டவர்களிற்கு என்னாலான உதவியை செய்ய வேண்டும், அந்த உதவியை செய்யாதவர்களிற்கு பேச்சுரிமை இல்லை. பாதிக்கப்பட்டவர்களிற்கு சதத்தை கூட கொடுக்க முடியாதவர்கள் எதற்கு சும்மா பேசிக்கொண்டிருக்க வேண்டும்?

கடந்த வருட இறுதியில் வெளிநாட்டிலுள்ள தமிழ் வைத்தியர்கள் 18 பேரை அழைத்து வந்து



தென்னிலங்கையில் மருத்துவ உதவிகள் செய்தோம். எமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தவே அதை செய்தோம்.

மஹிந்த ராஜபக்சவின் காலத்தில் உலகத்தமிழர் பேரவை இலங்கைக்கு வர முடியாது. ஆனால் நாம் இயன்ற வழிகளில் உதவிகள் செய்தபடியிருந்தோம்.

**தீபம் : இனப்பிரச்சனை தீர்விற்காக புதிய அரசுடன் இணக்கமான போக்கை வெளிப்படுத்தி வருகிறீர்கள். மூன்று வருடம் விமர்சித்த ஒத்துழைப்பை வழங்கி விட்டீர்கள். மூன்று வருடம் கழித்து, அந்த முயற்சிகள் குறித்த உங்கள் பார்வை எப்படியிருக்கிறது?**

**எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகள் :** இனப்பிரச்சனையை தீர்ப்பதில் அரசாங்கத்திற்கு ஆரம்பத்திலிருந்த ஆர்வம் இப்பொழுது குறைந்து விட்டது. கூட்டரசாங்கம் என்பதால் அவர்களிற்கிடையில் சில

தொடர்ச்சி 8-ம் பக்கம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


7-ம் பக்க தொடர்ச்சி...

பிரச்சனைகள் உள்ளன. ஊழல் விவகாரங்கள் வர, அவற்றை தூக்கிப் பிடித்து அதில் காலத்தை செலவிடுகிறார்கள். இன்றைக்கு பாராளுமன்றத்தில் அங்கத்தவர்களாக உள்ளவர்களின் தராதரம் மிககுறைவானது. அவர்கள் உணர்ச்சிவசப்பட்டவர்கள். பரந்த சிந்தனையில்லாதவர்கள். அப்படியான சபையில் எமது பிரச்சனைகளை விளக்கி, இனப்பிரச்சனையை தீர்க்க வேண்டுமென்றால் அவர்களிற்கு அது முக்கியமாக படவில்லை. தேசிய பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டுமென நாம் நினைக்கிறோம். அவர்கள் உடனடி பிரச்சனைகளை வைத்து வாக்கு வாதப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள். எமக்கு தீர்வு தேவை. அதனால் நம்பிக்கையிழக்காமல் கடைசிவரை போராட வேண்டும்.

**தீபம்: வடமாகாணசபையின் அடுத்த முதலமைச்சர் வேட்பாளராக உங்களது பெயரும் அடிபட்டதே?**

**எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகள் :** அதொரு வதந்தி. முழுக்க முழுக்க பொய்யானது. எனது இல்லத்திலிருந்து எனக்குரிய பணிகளை செய்து கொண்டிருக்கிறேன். நான் அரசியல் வாதியல்ல. அப்படியான நோக்கத்தையுடையவனும் அல்ல. எழுபது ஆண்டுகளாக போராடிக் கொண்டிருக்கிறேன். கொழும்பு பல்கலைகழக மாணவனாக இருந்தபோது 1956இல் சிங்கம் மட்டும் சட்டம் வந்தது. அன்று தொடக்கம் போராடிக் கொண்டிருக்கிறேன். சம்பந்தனிற்கு முன்னரே நான் அரசியல் போராட்டத்தை தொடங்கி விட்டேன். 1958ஆம் ஆண்டு ஸ்ரீ எதிர்ப்பு போராட்டத்தில் கருப்பு கொடி பிடித்துக்கொண்டு யாழ் கோட்டை வாசலில் படுத்திருந்தேன். பின்னர் குருவாக வந்து நான் சாட்சியாக இருக்கிறேன். அவ்வளவு தான். அரசியல்வாதியாக வர விரும்பும் நோக்கமெதுவும் எனக்கு இல்லை.



பொறுப்புள்ள அரசாங்கம் செய்ய வேண்டியவற்றை விட்டுவிட்டு தேவையற்ற விசயங்களில் ஈடுபடுகிறது. நாடு முன்னேற வேண்டுமெனில், இனப்பிரச்சனை தீர்வு முயற்சியில் மனஉறுதியுடன் செயற்பட வேண்டும். ஆனால் அது நடப்பதாக தெரியவில்லை.

போர் நடந்தபோது நான் மக்கள் சார்பாக குரல் கொடுத்தேன். ஆலயங்கள் தாக்கப்பட்டபோது, அங்கே நான் குரு முதல்வராக இருந்தேன். அவற்றிற்கு எதிராக குரல் கொடுத்தேன். அந்த குரலை புலிகள் சாதகமாக எடுத்துக் கொண்டார்கள். அரசாங்கம் தனக்கெதிரானதாக கருதியது. ஆனால் நான் உண்மையை சொன்னேன். அப்போது என்னை பிழையான புரிந்து கொண்டார்கள். இன்றும் அதுதான் நிலைமை.

அண்மையில் முதல்தடவையாக முதலமைச்சர் விக்னேஸ்வரனை சந்தித்தபோது, முதலமைச்சர் வேட்பாளர் கதையை அவரும் கேட்டிருந்தார். இதெல்லாம் தேவையற்ற வதந்தியால் வந்தது. இதை தமிழ் ஊடகங்களே செய்வது மனவருத்தத்திற்கு உரியது.

**தீபம்: இனப்பிரச்சனை தீர்வு முயற்சிகளின் எதிர்காலம் எப்படியிருக்குமென நினைக்கிறீர்கள்?**

**எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகள் :** மிகவும் கஸ்ரமாக உள்ளது. பொறுப்புள்ள அரசாங்கம் செய்ய வேண்டியவற்றை விட்டுவிட்டு தேவையற்ற விசயங்களில் ஈடுபடுகிறது. இதுதான் நிலைமையென்றால் இந்த நாட்டிற்கு வருங்காலம் மிகப்பெரிய சவாலாக இருக்கும். நாடு முன்னேற வேண்டுமெனில், இனப்பிரச்சனை தீர்வு முயற்சியில் மனஉறுதியுடன் செயற்பட வேண்டும். ஆனால் அது நடப்பதாக தெரியவில்லை.

அரசியல் தலைவர்கள் மட்டுமல்ல, மத தலைவர்களும் செய்ய வேண்டியதை செய்யவில்லை. மௌனமாக இருக்கிறார்கள். சமாதானம், நல்லிணக்கம் தானாக வராது. அதற்காக உழைக்க வேண்டும். இந்த அரசாங்கம் எல்லா வாக்குறுதிகளையும் நிறைவேற்றுமென்பது பெரிய சந்தேகம். இருந்தாலும், முடியுமானளவிற்கு அதை நிறைவேற்ற வைப்பது எமது கடமை. தலைவர்களின் கடமை. அவர்கள் முயற்சிக்கிறார்கள். அவர்களை இழுத்து விழுத்தாமல் அதற்கு நாம் ஒத்துழைப்பு கொடுப்போம். ஏணியில் ஏற முயல்பவர்களை அதிகமாக இழுத்து விழுத்துவதுதான் தமிழர்களின் வழக்கம். அதை செய்யாமல், தீர்வு முயற்சிகளிற்கு எல்லோரும் ஒத்துழைத்தால் பலனை அடையலாம்.


# நீங்களும் பத்திரிகைத்துறையில் ஆர்வமுடையவரா?

## இதோ ஒரு அரிய வாய்ப்பு

- ✓ உங்களை சுற்றி நடக்கும் பிரச்சனைகளை தட்டி கேட்க விரும்புகிறீர்களா?
- ✓ சுவாரஸ்யமாக எழுத தெரியுமா?
- ✓ ஆர்வமுள்ளதா?

உடனே விண்ணப்பியுங்கள்.
அனுபவமுள்ளவர்கள்
இளையவர்கள்
இருபாலரும்

முழுநேரம்
பகுதிநேரம்



தீபம் ஆசிரியர்பீடம் 989/1, பருத்தித்துறைவீதி, கல்வியங்காடு, நல்லூர்
தொலைபேசி: 0214927562 0768255562


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசட்டிடமே திரும்பி வந்த இரகசியம்!

## மொசாட் செய்த "பேப்பர் ஒப்ரேஷன்" 02

இங்கிலாந்து பத்திரிகையொன்றை வைத்து மொசாட் புலனாய்வு அமைப்பு நடத்திய இரகசிய ஒப்ரேஷனை பற்றிய இந்த தொடரின் கடந்த பாகத்தில், டன்னி மோசாய் என்ற ஆளிடமிருந்து கசிந்த அணு ஆணுத இரகசியங்கள் இஸ்ரேலை அதிர்ச்சியடைய வைத்தது,"விசயத்தை முடித்து விடுங்கள்" என இஸ்ரேல் பிரதமரே, மொசாட் அதிகாரிகளிற்கு கட்டளையிட்டதை கடந்த பாகத்தில் குறிப்பிட்டிருந்தோம். விசயத்தை முடித்து விடுங்கள் என்றால் ஆளை முடித்து விடுங்கள் என்பது அர்த்தம்!

அப்போது நியூசிலாந்தில் வசித்து வந்த டன்னி மோசாய், இஸ்ரேலின் எந்த அணு உலையிலாவது பணியாற்றினாரா? அங்கு என்ன வேலை செய்தார் என்று இஸ்ரேல் ஆராய்ந்ததில் பல அதிர்ச்சி தகவல்கள் வெளியாகியிருந்தன.

இஸ்ரேலின் முதலாவது அணு உலையான டிமோனாவில் டன்னி நுட்பவியலாளராக கடமையாற்றினார். நீண்டகாலம் அவர் அங்கு பணியாற்றியிருந்ததால், தொழிற்சாலைக்குள்ளிருந்த இரகசிய செக்சன்களிற்கும் சென்றுவரும் அனுமதியை பெற்றிருந்தவர். இதுதான் மொசாட் அதிகாரிகளை தலையை சுற்ற வைத்தது.

அங்கு என்ன உற்பத்தி நடக்கிறது, அது அப்போது என்ன நிலைமையில் இருக்கிறது என்பதையெல்லாம் அறியக் கூடியவராக இருந்திருக்கிறார்.

அணு ஆயுத தயாரிப்பு முயற்சிகள் எதிலும்நாம்ஈடுபடவேயில்லையென்று இஸ்ரேல் அப்போது பகிரங்கமாக கூறிக் கொண்டிருந்த சமயம். இந்த தகவல்கள் லீக் ஆனால் நிச்சயம் இஸ்ரேலுக்கு நெருக்கடி ஏற்படும்.

Shabtai Shavit மீண்டும் டெய்லி நியூஸ் ஆசிரியர் டேவிட் மக்னெலிற்கு அழைப்பேற்படுத்தி, எகிப்பு ஃபிரீ லான்சர் அப்துல் ரடாஹியுடன் பேசி, அனைத்து ஆவணங்களையும் தகவல்கள், இஸ்ரேல் மொசாட் புலனாய்வு அமைப்பிடமே திரும்பி வந்து சேர்ந்தது!

Shabtai Shavitக்கும், அட்மோனிக்கும் தலையை சுற்றி விசயம் எதுவெனில் யாரிந்த டன்னி மோசாய்? அவரது பின்னி என்ன? தொழிற்சாலை இரகசியத்தை தெரிந்து கொள்ளும் நிலையில் அவர் பணிபுரிந்திருக்கிறார் என்பது சரி. ஆனால் அதையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும், ஆதாரங்களை சேகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பணிபுரிந்தாரா?, புகைப்பட ஆதாரங்களை எப்படி சேகரித்தார்?, அதையெல்லாம் அணு தொழிற்சாலை செக்கியூரிட்டி யுனிட் எப்படி கண்டுபிடிக்காமல் இருந்தது? இந்த தகவல்கள் வேறு யாருக்கெல்லாம் லீக் செய்யப்பட்டிருக்கும்? என்பதே.

இவையெல்லாவற்றிற்கும் விடை காண மொசாட் ஏஜெண்ட்கள் களமிறக்கப்பட்டனர்.

அடுத்தடுத்த நாட்களிலேயே கையினடிப்படையில்தான் மாற்றப்பட்டார். 1977 தொடக்கம் 1985 வரை டிமோனாவில் அதுவும் உச்சபட்ச இரகசிய தளமான செக்சன் 3 இல் பணிபுரிந்திருக்கிறார்!

இந்த விடயத்தை முழுமையாக கையாளும் பொறுப்பு Shabtai Shavit இடமே ஒப்படைக்கப்பட்டது.

அவர் உடனே அணுஆலை தொடர்பான யுனிட்டை தொடர்பு கொண்டு, மோசாய் பற்றிய இரகசிய பைல்களை வரவழைத்தார். அணுஆயுத தொழிற்சாலை போன்ற உயர்மட்ட இரகசிய இடங்களில் பணிபுரிபவர்கள் பற்றிய இரகிசய பைல், அதனுடன் தொடர்புடைய புலனாய்வு பிரிவால் பேணப்படும். வருடாந்தம் அது புதுப்பிக்கப்படும். அந்த பைலை ஆராய்ந்தார்.

அதில் குறிப்பிடும்படியான எந்த தகவலும் இல்லை. ஒரேயொரு முறை விமுறையில் நியூசிலாந்திற்கு சென்று வந்திருந்தார். அது 1984

சில புலனாய்வு அமைப்புக்களிற்கு மட்டும் அங்கு அணு ஆயுத தயாரிப்பு முயற்சி நடப்பது அப்போது தெரிந்திருந்ததே தவிர, மற்றும்படி வெளியாட்களிற்கு அது அணு ஆயுத தொழிற்சாலையென்பது தெரியாது.



மோசாய் பணிபுரிந்திருக்கிறார். அதுவும் அணுஉலையின் ஹை செக்கியூரிட்டி யுனிட்டான, செக்சன் 3 இல்!

இஸ்ரேல் தலைநகரான டெல் அவி நகரிற்கு வடகிழக்காக இந்த அணுஉலை அமைந்திருந்தது. மிக இரகசியமாக இயங்கிய இந்த அணுஉலையில் இஸ்ரேல் முதலாவது அணு ஆயுதத்தை 1960 அளவில் வெற்றிகரமாக தயாரித்திருந்தது என்பது உபரி தகவல்.

சில புலனாய்வு அமைப்புக்களிற்கு மட்டும் அங்கு அணு ஆயுத தயாரிப்பு முயற்சி நடப்பது அப்போது தெரிந்திருந்ததே தவிர, மற்றும்படி வெளியாட்களிற்கு அது அணு ஆயுத தொழிற்சாலையென்பது தெரியாது. அங்கு அமைந்திருந்த நிலத்தடி ஆய்வுகூடத்திலேயே அணு ஆயுத சோதனைகள் நடந்து கொண்டிருந்தன.

டன்னி மோசாய் அங்கு தொழில் பெற்றுக்கொள்ளும்ப கேட்டார். அந்த ஆவணங்கள் சன் பத்திரிகைக்கு போகக்கூடாது. எவ்வளவு தொகையென்றாலும் கொடுத்து வாங்கி விடுங்கள். பணத்தை நாங்களே தந்து விடுகிறோம் என கேட்டுக் கொண்டார்.

இஸ்ரேலின் அதிஸ்டம் அப்துல் ரடாஹிக்கும் சன் பத்திரிகைக்குமான பேச்சுவார்த்தை இறுதிக்கட்டத்தில் இருந்ததே தவிர, முடியவில்லை. மக்னெல் கொடுப்பதாக கூறிய பணத்தை கேட்டதும் ரடாஹிக்கு தலைசுற்றியது. சன் உடன் நடந்த பேச்சுக்களை அப்படியே முறித்துக் கொண்டு, ஆவணங்களையும் புகைப்படங்களையும் மக்னெல்லிடம் ஒப்படைத்தார்.

அதாவது டன்னி மோசாய் இஸ்ரேலின் அணு தொழிற்சாலை பற்றி இரகசியமாக திரட்டிய மொசாட் தலைவர்களின் மேசைக்கு மெல்ல மெல்ல விசயங்கள் வரத் தொடங்கின. அந்த தகவல்களில் இருந்து நியூசிலாந்து ஆள் பற்றிய ஒரு கோப்பு தயாராக தொட்டங்கியது.

### டன்னி மோசாய்

டன்னி மோசாய பிறந்தது இஸ்ரேலின் நசாரத் நகரத்திற்கு அருகில். 1951 இல் டன்னி மோசாய் பறந்தார். அவர் பிறந்த ஏழு வருடங்கள் கழித்து, டிஆமோனா நகரத்தில் இஸ்ரேல் தனது முதலாவது அணு ஆயுத சோதனைக்கூடத்தை அமைத்தது.

தனது 23வது வயதில் டிமோனாவின் உப சோதனைக்கூடமாக ஜெருகெம்மில் இயங்கிய எரிசக்தி தொடர்புடைய ஆலையொன்றில் தொழில் நுட்பவியலாளராக சேர்ந்தார். இரண்டு வருடத்தில் பிரதான அணு சக்தி ஆலையான டிமோனாவிற்கு மாற்றப்பட்டார். திறமை, நம்பிக் இல். ஓய்வுபெறுவதற்கு ஒரு வருடம் முன்னர். Shabtai Shavitஇன் கவனத்தை ஈர்த்த இன்னொரு விடயம் மோசாய் மனைவியை விட்டு பிரிந்து வாழ்கிறார். 1979 இல் திருமணம் செய்தவர், 1981 இல் மனைவியை விட்டு பிரிந்து விட்டார். அதன் பிறகு தனிமையில்தான் வசித்து வந்தார். பொதுவாகவே மோசாய் தனிமையிலிருக்க விரும்புபவர். அதிகமாக அரசியல் கதைக்கமாட்டார்.

இவ்வளவுதான் அவரைப்பற்றிய முக்கிய விசயங்கள்.

ஓய்வுபெறுவதற்கு ஒரு வருடம் முன்னர் நியூசிலாந்து சென்று வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஓய்வின் பின்னர் நியூசிலாந்தில் சென்று குடியிருந்திருக்கலாம். அப்படியானால், இரண்டு மோசாய்களும் ஒன்றாக இருக்க வாய்ப்புள்ளது!

Shabtai Shavit இன் மூளையில் மின்னலடித்தது! (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என் சுவாசக்காற்றே!

## மூச்சு சொல்லும் சூட்சுமம்

நம் உடலில் மூளையின் கட்டளையால் நடக்கும் சில முக்கியமான செயல்களில் சுவாசமும் ஒன்று. நாம் எவ்வளவு முயன்றாலும் ஒரு குறிப்பிட்ட நேரத்துக்குப்பின் மூச்சை அடக்க முடியாது. நாம் சரியாக சுவாசிக்கிறோமா? நாம் மூச்சுவிடும் விகிதம் சரியா? சரியாக மூச்சுவிடாவிட்டால்சுவாசப்பிரச்னை ஏற்படுமா? சுவாசப் பிரச்னையின் அறிகுறிகள் என்னென்ன? என்பன போன்ற பல சந்தேகங்களுக்கு விடையளிக்கிறார், நுரையீரல் சிறப்பு மருத்துவர் ஜெயராம்.

### சுவாசத்தின் தொடக்கம்

தாய், பிரசவிக்கும்போது, சுவாசத்தை எதிர்கொள்ள முடியாமல் குழந்தை கதறி அழும். அந்தக் கதறலே அந்தக் குழந்தை சுவாசிக்கும் முதல் மூச்சு. பத்து மாதங்களாகத் தாயின் கருவறையில் இருந்த குழந்தை முதன்முறையாக வெளிக்காற்றை சுவாசிப்பதால் ஏற்படுவதே அந்த அழுகை. அந்தத் தருணம் முதல் கடைசி மூச்சு உள்ளவரை நேரடியாக மூளையின் கட்டுப்பாட்டில் சுவாசம் செயல்படுகிறது.

ஒரு மனிதன் ஓய்வில் இருக்கும் போது ஒரு நிமிடத்துக்கு எத்தனை முறை சுவாசிக்கிறான் என்பதைக் கணக்கிடுவதே சுவாச விகிதம். தூங்கும்போதும் விழித்திருக்கும் போதும் நாம் ஒரே அளவு எண்ணிக்கையிலேயே சுவாசிக்கிறோம். மேலும், உறங்கும்போது நாம் சுவாசிக்கும் வேகம் மாறுபடுமே தவிர, எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படாது. பொதுவாக, ஒரு நிமிடத்துக்கு 12ல் இருந்து 18 முறை சுவாசிக்கிறோம்.

### சுவாச விகிதம் கணக்கிடுவது எப்படி?

ஒரு நிமிடத்தில் நாம் எத்தனைமுறை சுவாசிக்கிறோமோ அதுவே சராசரி சுவாச விகிதமாகும். இந்தக் கணக்கீடு பல காரணிகளால் மாறக்கூடும். உதாரணமாக, உடல் பருமனானவர்கள், இதயநோயாளிகள், ஆஸ்மா உள்ளவர்களின் சுவாச விகிதத்தைக் கணக்கிடுவது சற்று சிரமம். சுவாச விகிதக் கணக்கெடுப்பில் முக்கியமான மற்றொன்று, கணக்கிடும் நேரம். நாம் விழித்திருக்கும்போதோ நடைப்பயிற்சி, உடற்பயிற்சி செய்து முடித்தபின்னரோ வேலைகளைச் செய்துமுடித்தவுடனோ கணக்கிடக் கூடாது. அவ்வாறு எடுக்கப்படும் அளவு துல்லியமாக இருக்காது. ஓய்வில் இருக்கும்போது எடுக்கப்படும் அளவே சரியானது.

சுவாச விகிதத்தைக் கணக்கிடுவதில் சவாலான ஒன்று, மூளையின் செயல்பாடு. ஒரு நிமிடத்தில் நாம் எத்தனைமுறை மூச்சு விடுகிறோம் என்பதை மூளையே முடிவுசெய்யும். ரத்தத்தில் உள்ள ஒட்சிசனின் அளவு குறையும்போதோ, காபன்டை ஒக்சைடின் அளவு அதிகமாகும் போதோ அடிக்கடி சுவாசிக்கவேண்டும் என நம் மூளை கட்டளையிடும். உதாரணமாக, ஒரு நோய்த் தொற்றின் காரணமாக நம் உடலில் காபன்டை ஒக்சைடு அதிகரித்தால், (ஒட்சிசன் அளவு சரியாக இருக்கும்போது) நமது மூளை, நம்மை வேகமாக சுவாசிக்க வைத்து காபன்டை ஒக்சைடை வெளியேற்றும்.

### எப்போது சுவாச விகிதம் குறையும்?

போதைப் பொருள்களைப் பயன்படுத்தும்போது நம் சுவாசம் சரியாக வேலை செய்யாது. இதற்குக் காரணம் போதை மருந்துகள் இரத்தத்தின் வழியாக நம் மூளைக்கு அனுப்பும் செய்திகளை, மூளை மந்தமாகஎடுத்துக்கொள்ளும்.இதனால், நம் தேவையைவிடக் குறைவாக சுவாசிப்போம். தலையில் அடிபட்டு மூளையில் உள்ள சுவாச மையம் பாதிக்கப்பட்டாலும் நம்முடைய சுவாச விகிதம் குறையும்.

### குழந்தைகளிடம் வேறுபடும்

நடக்கப் பழகிய குழந்தையைவிட கைக்குழந்தை அதிகமாக சுவாசிக்கும். மருத்துவ மொழியில் இதை 'பீரியாடிக் ப்ரீத்திங்' (Periodic breathing) என்று கூறுவார்கள். இந்தப் பீரியாடிக் ப்ரீத்திங்கின்போது குழந்தைகளின் சுவாச அளவு பரவலாக மாறுபடும். ஒரு குழந்தை சில நிமிடங்கள் வேகமாக சுவாசித்துவிட்டுப் பின்னர், இயல்பை விடக் குறைவாக சுவாசிக்கலாம். பீரியாடிக் ப்ரீத்திங்கில் நாம் கவனிக்க வேண்டிய சில முக்கியமான அம்சங்கள் உள்ளன. இயல்பைவிட அதிகமாகவோ அல்லது குறைவாகவோ குழந்தை சுவாசிப்பது பெற்றோருக்கு அச்சுறுத்தலாக இருக்கும். உங்கள் குழந்தை நோயோ, வேறு ஏதாவது குறிப்பிட்ட உடல் பாதிப்புகளோ இல்லாமல் இருந்தால், பீரியாடிக் ப்ரீத்திங் சாதாரண ஒன்றுதான், இல்லையென்றால் உடனடியாகக் கவனிக்க வேண்டியது அவசியம்.

### சீரற்ற சுவாச விகிதம்

உடலில் பிரச்னை இருப்பதன் அறிகுறியே சீரற்ற சுவாச விகிதம். இந்த நேரத்தில்சுவாசவிகிதம்இயல்பைவிடக் குறைவாகவோ அதிகமாகவோ இருக்கும். இதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கும். அதேபோல், உடற்பயிற்சி செய்யும்போது சுவாச விகிதம் அதிகரிப்பதும் இயல்பான ஒன்று.

வயது வந்தவர்கள் (Adults) சராசரியாக ஒரு நிமிடத்துக்கு 20 முறை சுவாசிக்க வேண்டும். மாறாக, சுவாச விகிதம் 24க்கும் மேல் இருந்தால் அது ஆபத்தானது. ஒருவர், திடமானவர் அல்லது திடமற்றவர் என அவரின் இதயத்துடிப்பின் அளவு, இரத்த அழுத்த அளவின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும். சுவாச விகிதம் அதிகமாக இருப்பதற்குப் பல்வேறு காரணிகள் உள்ளன. சில காரணிகள் நுரையீரல் தொடர்புடையவையாக இருக்கும். சில காரணிகள் நுரையீரல் தொடர்பில்லாதவையாக இருக்கும்.

### சுவாச விகிதம் எதனால் அதிகரிக்கும்?

= காய்ச்சல்: காய்ச்சலின் காரணமாக உடலில் ஏற்படும் வெப்பத்தை வெளியேற்ற, நமது உடல் வேகமாக சுவாசிக்கத் தொடங்கும். இதனால், சுவாச விகிதம் அதிகரிக்கும். இவ்வாறு அதிகரிக் கும் சுவாச விகிதம், நோயை மோசமடையச் செய்யும். குழந்தைகள் காய்ச்சல் பாதிப்பில் இருக்கும்போது, இயல்பைவிட அதிகரிக்கும் ஒரு டிகிரி செல்சியஸ் வெப்பத்துக்கு, சுவாச விகிதம் ஐந்து முதல் ஏழு வரை அதிகரிக்கும். ஆனால், 12 மாதத்துக்குட்பட்ட குழந்தைகளுக்குக் காய்ச்சலின் போது சுவாச விகிதம் அதிகரிப்பதாக இதுவரை எந்த ஆய்வுகளும் நிரூபிக்கவில்லை. அவ்வாறு அதிகரிக்கும் பட்சத்தில், ஒரு டிகிரி செல்சியஸ் வெப்பத்துக்கு ஏழு முதல் 11 வரையிலான சுவாச விகிதம் இயல்பைவிட அதிகரிக்கலாம்.

= டீஹைட்ரேஷன் எனப்படும் உடலின் நீர்வற்றிய தன்மை இருந்தால் சுவாச விகிதம் அதிகரிக்கும்.


= ஆஸ்மா இருந்தால் சுவாச விகிதம் அதிகரிக்கும்.

= நாள்பட்ட நுரையீரல் நோய் (சி.பி.ஓ.டி) உள்ளவர்களுக்கு சுவாச விகிதம் அதிகமாக இருக்கும். குறிப்பாக, புகைபிடிக்கும் பழக்கம் உள்ளவர்களுக்கு மிக அதிகமாக இருக்கும்.

= மனஅழுத்தம், வலி, கோபம் அல்லது தாக்குதலுக்கு ஆளாகும்போது சுவாச விகிதம் உடனடியாக அதிகரிக்கும்.

= நுரையீரல் புற்றுநோய் இருப்பவர்களுக்கு சுவாச விகிதம் அதிகரிக்கும். உறைந்த ரத்தம் காலில் இருந்து

தொடர்ச்சி 12-ம் பக்கம்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன கற்கலாம்.. எங்கே கற்கலாம்?

## இளைஞர்களிற்கான வாழ்க்கை வழிகாட்டி

நிலவன்



நாட்டில் பெரிய பிரச்சனையாக உரு வெடுத்துள்ளது வேலையில்லா திண்டாட்டம். தேர்தல் சமயத்தில் எல்லா கட்சிகளும் வேலை வாய்ப்பு வாக்குறுதிகளை வழங்குகின்றன. ஆனால் இருக்கின்ற மக்கள் தொகையுடன் ஒப்பிடும்போது, அரச நிர்வாகத்தில் கிடைக்கும் வேலைவாய்ப்பு, ஆனைப்பசிக்கு சோளப்பொரி போட்ட கதைதான்.

பெரும்பாலானவர்கள் அரசாங்க வேலையைத்தான் எதிர்பார்க்கிறார்கள். உயர்தரம், பல்கலைகழக பட்டம் என்ற தகுதியுடன் அரசாங்க வேலையை எதிர்பார்க்கும் எல்லோருக்கும் வேலை வாய்ப்பு வழங்குவதென்பது குதிரைக்கொம்புதான். ஆனால், நாட்டின் ஏதோவொரு மூலையில் வேலை வாய்ப்பு வழங்ககோரி அடிக்கடி போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

அரசாங்க வேலை கிடைக்கும்வரை வாழ்க்கையை தொடங்காத எத்தனையோ இளைஞர், யுவதிகள் நம் மத்தியில் உள்ளனர். தனியார்துறை, சுய தொழில் முயற்சிகளில் கணிசமானவர்கள் ஆர்வம் காட்டுவ தில்லை. அரச துறையை பாதுகாப்பானதாக கருதுகிறார்கள். உண்மையில், அதிகம் சம்பாதிக்கும் வாய்ப்புக்கள் அரசதுறைக்கு வெளியிலேயே உள்ளன. ஒருவர் தனது தொழில்துறை தேர்ச்சியை வளர்த்துக் கொண்டால், எந்த நிறுவனங்களையும் சார்ந்திருக்காமல், சுயமாக செயற்படலாம்.

அதிக சம்பாத்தியம், உடனடி வேலைவாய்ப்பு உள்ள துறைகள் எவை, அந்த தொழில்துறை கல்விகள் எங்கு கற்பிக்கப்படுகின்றது என்ற ஒரு ரவுண்ட் அப் இது.

**விருந்தோம்பல் மற்றும் உபசரணை முகாமைத்துவம்**

நாடளாவிய ரீதியில் மட்டுமன்றி உலகளாவிய ரீதியில் தொழில் வாய்ப்புக்களைப் பெறக் கூடிய ஒரு கற்கை நெறி. நாளாந்தம் இந்ததுறை வளர்ச்சியடைந்து வருகிறது. தொழில்முறைச் சமையலாளர், வரவேற்பாளர், உணவு மற்றும் குடிபானம் பரிமாறுபவர், அறை பராமரிப்பாளர் போன்ற நான்கு பிரிவுகளில் வேலை வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. இலங்கையின் சுற்றுலா வளர்ச்சி ஜெட் வேகத்தில் உள்ளது. இதனால் இந்த கற்கைநெறி பரவலாக அனைத்து இடங்களிலும் கற்பிக்கப்படுகிறது.

அதிக சுற்றுலா பயணிகளின் வரவு, ஹோட்டல்களின் அதிகரிப்பு என்பவற்றால் வடக்கு, கிழக்கில் இந்த துறை சடுதியான வளர்ச்சியை பெற்றுவருகிறது. எனினும், தேர்ச்சி மிக்கவர்களிற்கு பற்றாக்குறை நிலவுகிறது. இந்ததுறையில் தேர்ச்சி மிக்கவர் நாட்டில் எந்த மூலையிலும் உடனடி வேலைவாய்ப்பு பெறலாம்.

வடக்கு கிழக்கில் 35,000 - 50,000 வரை தேர்ச்சிமிக்கவர்கள் மாத வருமான மீட்டும் வாய்ப்புள்ளது. சாதாரணதர சித்தியுடன் இந்த துறைக்குள் நுழையலாம் என்பது ஒரு வரப்பிரசாதம். இதனால் இப்போது கணிசமானவர்கள் இந்ததுறையை நோக்கி திரும்ப ஆரம்பித்துள்ளனர்.

அதிகமானவர்களின் ஆர்வம் ஏமாற்றுக்காரர்களிற்கும் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு என கவர்ச்சிகரமான விளம்பரங்களுடன் பல தனியார் நிறுவனங்கள் கடைவிரித்துள்ளன. அங்கு சென்று ஏமாறுபவர்களின் பட்டியலும் அதிகரித்து செல்கிறது. கல்விக்காக நிறுவனங்களை அடையாளம் கண்டுபிடிப்பதில் அவதானமாக இருக்கவும்.

யாழ்ப்பாண பல்கலைகழக கல்லூரி, தொழில்நுட்ப கல்லூரி, தேசிய தொழிற்பயிற்சி அதிகாரசபை என்பவற்றில் நம்பிக்கையான கல்வியை பெறலாம்.

**உணவுத் தொழினுட்பவியல்**

உணவு உற்பத்தி, உணவு பதனிடல், உணவுச் சுகாதாரம் போன்றவற்றைப் பற்றிய நுண்ணிய அறிவே இக் கற்கைநெறி. உள்நாட்டு உணவு உற்பத்தி நிறுவனங்களிலும், வெளிநாடுகளிலும் தொழில் வாய்ப்புக்களைப் பெற வழியேற்படுத்துகிறது இந்த கற்கைநெறி. மாதாந்தம் 50000க்கு மேல் வருமானம் பெறும் வாய்ப்புள்ளது. உயர்தரத்தில் உயிரியல், தொழினுட்பம், விவசாயம் போன்ற துறைகளில் கற்றவர்கள் இந்த கற்கைநெறியை தொடரலாம்.

யாழ்ப்பாண பல்கலைகழக கல்லூரியில் இந்த கற்கைநெறியை தொடரலாம்.

**கட்டுமானத் தொழினுட்பவியல்**

கட்டட நிர்மாணத்துறை தற்போது வேகமாக வளர்ந்து வரும் துறைகளுள் ஒன்று. உள்நாட்டிலும், வெளி நாட்டிலும். கட்டுமானத்துறையினருக்கான வேலை வாய்ப்புக்கள் இருந்து கொண்டே இருக்கின்றன. உயர்தரத்தில் கணிதம் மற்றும் தொழினுட்பவியல் பாடங்களைக் கற்றவர்களுக்கு சிறப்பான எதிர் காலத்தை வழங்கக்கூடியது இந்தகற்கைநெறி. உள்நாட்டில் நாளாந்தம் பெருகிவரும் கட்டுமான நிறுவனங்களின் கதவுகள் திறமையானவர்களிற்கு எப்போதும் அகலத் திறந்தேயுள்ளன. அவரவர் திறமைக்கு ஏற்றவாறு 40000-50000 வரைக்கும் வருவாய் ஈட்ட வாய்ப்புள்ளது.

பல தனியார், அரச நிறுவனங்களில் இந்த கற்கைநெறியை பூர்த்தி செய்யலாம்.

பல்கலைகழக கல்லூரி, தொழில்நுட்ப கல்லூரி என்பவற்றில் கற்கைநெறியை தொடரலாம்.

**மீன் வளர்ப்பு மற்றும் நீரியல் வள முகாமைத்துவம்**

உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் கற்றவர்களிற்கான தொழில் வாய்ப்புக்களுடன் கூடியதான கற்கை நெறியாகும். திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அமைச்சின் கீழ் இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தால் இக் கற்கை நெறி முன்னெடுக்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்திலும் கற்கலாம். இலங்கையில் யேசசயயாஇ யேஉவய போன்ற நிறுவனங்களிலும், சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிலும் இதற்கான வேலை வாய்ப்புக்கள் உள்ளன. அத்துடன், சுயதொழில் வாய்ப்புக்களும் பிரகாசமாக உள்ளன. மாதாந்தம் 35000க்கு மேல் வருமானம் பெறலாம்.

யாழ்ப்பாணத்தில் 2ம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள சமுத்திரவியல் பல்கலைகழகத்தில் இந்த கற்கைநெறியை தொடரலாம்.

**மிதவை கப்பல் இயந்திர பொறிவலர் மற்றும் கடலக மாலுமிக்கான பயிற்சி நெறி**

சாதாரணதரத்துடன் உலகத்தரம் வாய்ந்த கப்பல் இயந்திர பொறிவலராகவும், கடலக மாலுமியாகவும் தொழில்புரியக் கூடிய

தொடர்ச்சி 12-ம் பக்கம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11-ம் பக்க தொடர்ச்சி...

வாய்ப்பேற்படுத்தும் கற்கை நெறி. இலங்கை சமுத்திரப் பல்கலைக் கழகத்தாலேயே இந்த கற்கைநெறியும் முன்னெடுக்கப்படுகின்றது. கொழும்பு, திருகோணமலை போன்ற பகுதி களிலேயே பயிற்சிகள் வழங்கப்படு கின்றன. இலங்கையில் யேசசயயாஇ யேஉவய போன்ற நிறுவனங்கள் மூலம் தொழில்வாய்ப்பை பெறலாம். வேளிநாட்டு வேலைவாய்ப்பையும் சுலபமாக பெற்றுத்தரும். மாதாந்தம் 50,000 இற்கும் அதிகமான வருவாயை சுலபமாக ஈட்டலாம்.

வடக்கில் அதிகமானவர்கள் கண்டுகொள்ளாத துறை. அந்த துறைக்கு பிரகாசமான எதிர்காலமும் உள்ளது.

சமுத்திரவியல் பல்கலைகழகத்தில் கற்கையை தொடரலாம்.

### தொழினுட்பவியல்


திறமையான மாணவர்களுக்கு பொறியியல் மற்றும் தொழினுட்பவியல் துறைகள் பிரகாசமான வாய்ப்புக்களை வழங்கும் துறைகளாகும். குடிசார் எந்திரவியல், மின்னியல் மற்றும் இலத்திரனியல் எந்திரவியல் போன்ற துறைகளிலான நிபுணத்துவத்தை சாதாரண தரத்துடனேயே பெற்றுக் கொள்ளலாம். இலங்கையின் பல இடங்களிலும் இத் துறைக்கான வேலைவாய்ப்புக்கள் உள்ளன. மாதாந்தம் 50,000 இற்கும் அதிமான வருவாய் பெறலாம்.

இந்த கற்கைநெறிகளை பல அரச, தனியார் நிறுவனங்கள் வழங்குகின்றன. நம்பிக்கையை நாடுபவர்கள் தொழில் நுட்ப கல்லூரியில் கற்கையை தொடரலாம்.

### எந்திரவியல் சார் பட வரைபியல்

எந்திரவியலைப் போன்றே எந்திரவியல் சார் பட வரைபியலுக்கும் தொழில் வாய்ப்புக்கள் உள்ளன. சாதாரணதர தகுதியுன் (தமிழ், கணிதம் மற்றும் விஞ்ஞானத்தில் சித்தி) இக் கற்கைநெறியை (உயர்தரத்தில் கணித, தொழினுட்பப் பிரிவுகளில் கற்றிருப்பது இன்னும் நலம்) தொடர லாம். கட்டுமானத்துறை சார்ந்த நிறுவனங்களில் தொழில் வாய்ப்புக் களை பெறலாம். சுயமாகவும் செயறபடலாம். மாதாந்தம் 40,000 வரையான வருவாயை நிச்சயம் பெறலாம்.

இந்த கற்கைநெறியை நிறைய அரச, தனியார் நிறுவனங்கள் வழங்குகின்றன.



வடக்கில் தொழில்நுட்ப கல்லூரிகளில் கற்கையை தொடரலாம்.

### பொறிமுறை எந்திரவியல்

ஓட்டோ மொபைல் எனப்படுகின்ற இந்த பொறிமுறை எந்திரவியலானது, நிறுவன பணியாளராகவோ, சுய தொழிலாளியாகவோ செயற்பட வாய்ப்பை தரும் கற்கைநெறியாகும். சாதாரணதரத்துடனேயே (தமிழ், கணிதம் மற்றும் விஞ்ஞானத்தில் சித்தி) இக் கற்கைநெறியைத் தொடரலாம். எந்தக்காலத்திலும் தொழில் வாய்ப்புள்ள வாகனப் பழுது பார்த்தலில் ஆர்வமுடைய வர்கள் இந்த கற்கைநெறியை தொடர லாம்.

வாகன உற்பத்தி, இறக்குமதி நிறு வனங்கள், அரச போக்குவரத்து துறை உள்ளிட்ட பல அரச நிறுவனங் களில் வேலைவாய்ப்பை பெற்றுக் கொள்ளலாம். சுயமாக தொழில் முயற்சியையும் ஆரம்பிக்கலாம். எப்படியோ ஆரம்ப வருவாயை 40,000 வரை பெறலாம். ஆர்வமும் திறமையுமுடையவர்களின் மாதாந்த வருமானத்தை விரும்பிய எல்லைவரை விஸ்தரிக்கலாம்.

இந்த கற்கைநெறியை தொழில்நுட்ப கல்லூரியில் தொடரலாம்.

### அழகுக் கலையியல்

இலகுவாக பணமீட்டும் துறை. தற்போது அதிக கேள்வியுள்ள துறையும் கூட. வீட்டுக்கு வீடு அழகுகலை கற்றவர்கள் இருந்தாலும், வருவாய்க்கு பஞ்சம் வைக்காத துறை. அதிகமாக பெண்கள் கோலோச்சுகிறார்கள். வடக்கு கிழக்கில் அதிகமாக ஆண்கள் இந்த துறைக்குள் நுழைவதில்லை. ஆனால் இருபாலரும் நன்றாக சம்பாதிக்ககூடிய துறை. அழகுக்கலை சந்தை நாளுக்குநாள் விரிவடைந்து கொண்டிருக்கிறது. நாளாந்தம் எண்ணற்றவர்கள் கற்கை நெறியை பூர்த்தி செய்து வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். எனினும், முறையாக தொழில்நுணக்கங்களை கற்காததால் தொழில் போட்டியில் நீடிக்க முடியாமல் வெளியேறி விடுகிறார்கள். நாளாந்தம் பெருகும் ஏராளம் அழகுக்கலை கற்கை நிறுவனங்களில் காலத்தை வீணடிக் காமல், சரியான இடத்தை தேர்வு செய்யுங்கள்.

கல்வித்தகுதி எதுவுமில்லாமலே இந்ததுறைக்குள் நுழையலாம். எனினும், அரச நிறுவனங்களில் கற்கையை தொடர்வதானால் சாதாரண தர தகுதி அவசியம். கற்கைநெறியை பூர்த்தி செய்தால் யாருடைய தயவிற்கும் காத்திருக்காமல் நீங்களே சுயமாக தொழில் முயற்சியை ஆரம்பிக்கலாம். உங்களின் தனிப்பட்ட திறனும், முயற்சியுமே பலத்த போட்டியுள்ள இந்த துறையில் வெற்றிபெற உதவும்.

இந்ததுறையின் மூலம் நல்ல வருமானம் ஈட்டலாம். உங்களின் முயற்சிக்கேற்ப வருமானத்தை இஸ்டம் போல பெருக்கிச் செல்லலாம்.

பல்கலைகழக கல்லூரி, தேசிய தொழிற்பயிற்சி அதிகாரசபை என்பவற்றில் கற்கையை தொர்டரலாம்.

### பல்திறன் கைப்பணிப்பாளர் நிர்மாணிப்பு

இது சுயதொழில் செய்பவர்க ளுக்கு ஏற்ற கற்கைநெறியாகும். பொறியியல், இரு சக்கர வாகனப் பழுதுபார்த்தல், அலுமினியப் பொருள் உருவமைத்தல், வீட்டு மின் உபகரணங்கள் திருத்துதல் போன்றவற்றில் பயிற்சியும், வேலை வாய்ப்பு உதவிகளும் வழங்கப்படுகிறது. யாழ்ப்பாண பல்கலைகழக கல்லூரி யில் இந்த கற்கைநெறி வாய்ப்புள்ளது.

தரம் 10 சித்தியடைந்தவர்கள் அந்த கற்கைநெறியை தொடரலாம். மாதாந்தம் 2500030000 வரையான வருமானத்திற்கு உத்தரவாதம் உள்ளது. சுயதொழிலாக செய்பவர்கள் அதிக வருமானம் ஈட்டலாம்.

தொழில்நுட்ப கல்லூரியில் கற்கையை தொடரலாம்.

வாய்ப்புக்கள் வரட்டுமென காத்திருக்காமல், நாமே வாய்ப்புக்களை உருவாக்கினால்தான் வாழ்க்கை சுவாரஸ்யமாகும். யாரும் நமக்கு அப்பொயின்ற்மென்ற் தரட்டுமென காத்திருக்காமல் நாமே நமக்கு அப்பொயின்ற்மென்ற் ஓடர் போடு வோமே!

---

10-ம் பக்க தொடர்ச்சி...

நுரையீரலுக்குச் செல்லும் போதும் சுவாச விகிதம் அதிகரிக்கலாம்.

= ஃப்ளு, நிமோனியா, டிபி உள்ளிட்ட நோய்களாலும் சுவாச விகிதம் அதிகரிக்கும்.

= பிறந்த குழந்தைகளுக்கு டிடிஎன் (TTN) என்று சொல்லக்கூடிய மூச்சுத்திணறல் இயல்பாக ஏற்படும். சில குழந்தைகளுக்கு 24 மணி நேரத்தில் சரியாகிவிடும்.

= சர்க்கரைக் குறைபாடு உள்ளவர் களுக்கு அமிலத்தன்மை அதிகரித்து சுவாச விகிதம் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

= வலி நிவாரண மாத்திரைகள் மற்றும் தூக்கம் வரவழைக்கும் மாத்திரை களை அதிகமாக எடுத்துக்கொள் வதாலும் சுவாச விகிதம் அதிகரிக் கும்.

### சுவாச விகிதம் எதனால் குறையும்?

இயல்பான சுவாச விகிதத்தைவிட, நிமிடத்துக்கு 12 முதல் எட்டு வரை குறைந்தால் உடனே கவனிக்க வேண்டும்.

= மது உள்ளிட்ட போதைப்பொருள் களைப் பயன்படுத்துவதால் சுவாச விகிதம் குறையும்.

= உடலில் ஏற்படும் அசாதாரண வளர்சிதை மாற்றத்தால் சுவாச விகிதம் குறையும்.

= பக்கவாதம், தலையில் காயம் போன்ற காரணங்களால் மூளை யின் செயல்பாட்டில் பிரச்னை உள்ளவர்களுக்கு சுவாச விகிதம் குறையும்.

### சிகிச்சை

அலர்ஜி, ஆஸ்மா, நுரையீரல் புற்றுநோய், சி.பி.ஓ.டி, ஸ்லீப் ஆப்னியா, நிமோனியா போன்றவற்றால் சுவாசப் பிரச்னைகள் ஏற்படும். இதற்கான காரணத்தைக் கண்டறிந்து அந்தந்த நோய்க்கான சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும்.

பிஎஃப்டி (Pulmonary function test), ரத்தப் பரிசோதனை, ஸ்கான், ஸ்லீப் டெஸ்ட் மற்றும் நுரையீரலில் எவ்வளவு சளி உள்ளது என்பதற்கான பரிசோதனைகள் மூலம் சுவாசப் பிரச்னைக்கான காரணங்கள் கண்டறியப்படும். சுவாசப் பிரச்னைகள் வராமல் தடுக்க ஆண்டுக்கு ஒருமுறை நிமோனியா மற்றும் ஃப்ளு தடுப்பூசி போட்டுக்கொள்ளலாம்.

### சுவாசப் பிரச்னையைத் தவிர்க்க

= சுற்றுச்சூழலைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

= சமைப்பதால் உண்டாகும் புகை சமையலறைக்குள் தங்கிவிடாமல், வெளியேற வழிவகுக்க வேண்டும்.

= பினாயில், டொய்லெட் கிளீனர் போன்ற கெமிக்கல்களைக் கவன மாகக் கையாள வேண்டும்.

= வீட்டைச் சுத்தம் செய்யும்போதும் வாகனங்கள் ஓட்டிச் செல்லும் போதும் மாஸ்க் அணிந்துகொள்ள லாம்.

= புகைபிடிப்பதைத் தவிர்ப்பதுடன், புகைபிடிப்பவரின் அருகில் நிற்பதையும் தவிர்க்க வேண்டும்.

= சத்தான உணவை சரிவிகிதத்தில் சாப்பிட வேண்டும்.

= யோகா, தியானம், பிராணயாமம் போன்ற பயிற்சிகளைத் தினமும் செய்ய வேண்டும்.

= நுரையீரலில் ஏதேனும் பிரச்னைகள் இருந்தால் உடனடியாக மருத்து வரின் ஆலோசனை பெறவேண்டும்.

### சுவாசம் தொடர்பாகத் தூக்கத்தில் ஏற்படும் குறைபாடுகள்

= ப்ராடிப்னியா (Bradypnea): தூக்கத் தின்போது சுவாசம் குறைவதால் ஏற்படுவது.

= டேகிப்னியா (Tachypnea): தூக்கத் தின்போது சுவாசம் அதிகரிப்பதால் ஏற்படுவது.

= டிஸ்ஆப்னியா (Dyspnea): குறைவாக அல்லது அதிகமாக சுவாசிப்பது போன்ற உணர்வு ஏற்படுவது.

= ஹைபர்ஆப்னியா (Hyperpnea): ஆழமான, அசாதாரணமான பெரு மூச்சு விடுவது. இந்தப் பிரச்னை உள்ளவர்கள் சுவாசிக்கும்போது மிகவும் சிரமப்படுவதுபோல் தெரியும்.

= ஆப்னியா (Apnea): ஒருசில விநாடி சுவாசம் நின்ற நிலையைக் குறிக்கும். இது மீண்டும் அடுத்த நொடியிலேயே சரியாகி, சுவாசம் சீராகிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



26 நீங்களும் பிஸ்னஸ் புள்ளி ஆகலாம்

# ஓர்டர் எடுப்பது எப்படி?

ஏற்றுமதித் தொழில் செய்பவர்களிற்கு உள்ள அடுத்த முக்கியமான ரிஸ்க் ஓர்டர் எடுப்பது. சரியான ஆளையும், பொருளையும் அடையாளம் காண்பதில்தான் பிஸ்னஸின் வெற்றி தோல்வி தங்கியுள்ளது. வெளிநாடுகளில் இருக்கும் இறக்குமதியாளரை அடையாளம் கண்டு ஓர்டர் எடுப்பது எப்படி என்பதை இப்போது பார்ப்போம்.

**1. இணையதளங்கள் மூலமாக**

நீங்கள் ஏற்றுமதி செய்யப் போகும் நாட்டையும், என்ன பொருள் என்பதையும் கூகுள் தேடுதல் பொறியில் குறிப்பிட்டு, வாங்குபவரின் விலாசங்களை எடுத்து விடலாம். உதாரணத்துக்கு, சிங்கப்பூருக்கு அரிசி ஏற்றுமதி செய்யவேண்டுமெனில், yellowpages/singapore/rice இவ்வாறு குறிப்பிட்டுத் தேடினால் அரிசி வணிகம் செய்யும் நபர்களின் தொடர்பு விவரங்களை நீங்கள் எடுத்துக்கொள்ளலாம்.

நீங்கள் தேர்ந்தெடுக்கும் பொருளுக்கு எம்.இ.ஐ.எஸ் திட்டம் இருக்கிறதா, இல்லையா என்பதையும், Duty Draw Back இருக்கிறதா என்பதையும்கூடத் தெரிந்துகொள்ளலாம். மேலும், எந்த நாட்டுக்கு என்னென்ன பொருள்கள் தேவை என்பதையும் தெரிந்துகொள்ளலாம். உதாரணமாக, நீங்கள் அரிசியை ஏற்றுமதி செய்யப் போகிறீர்கள் எனில், அரிசி/ வகை/ நாடு என்று தேடும்போது, அதன் ஹெச்.எஸ் கோட்/ எஸ்.பி.எஸ் சானிட்டரி பைதோ சானிட்டரி மதிப்பீடுகள் (Sanitary and Phyto-Sanitary Measures) போன்றவற்றைத் தெரிந்துகொள்ளலாம்.

இயந்திரங்களை நீங்கள் ஏற்றுமதி செய்வதாக இருந்தால், அதற்கு 'டெக்னிக்கல் பேரியர் டு ட்ரேட்' என்ற சான்றிதழ் அவசியம் என்பதையும் இந்த இணையதளம் தெரிவிக்கும்.

இந்த இணையதளங்கள் தவிர, கூகுளில் நேரடியாகவே நீங்கள் இறக்குமதியாளர்களைக் கண்டுபிடிக்கலாம். அதற்கு இவ்வாறு கூகுளில் தேட வேண்டும். சிறிலங்கன் (பொருளின் பெயர்) இம்போர்ட்டர்ஸ் இன்(நாடு). சில நாடுகளில் இம்போர்ட்டர்ஸ் என்ற பெயரில் இல்லாமல் டிஸ்ட்ரிப்யூட்டர் அல்லது சேல்ஸ் ஏஜென்ட் என்ற பெயரில் இருப்பார்கள். இம்போர்ட்டர்ஸ் என்ற இடத்தில் டிஸ்ட்ரிப்யூட்டர் அல்லது சேல்ஸ் ஏஜென்ட் என்று குறிப்பிட்டுத் தேட வேண்டும். இவ்வாறு தேடி எடுக்கப்படும் இறக்குமதியாளரிடம் நீங்கள் மெயிலிலோ, போனிலோ பேசி உங்களுடைய பொருளைப் பற்றி சொல்லி ஓர்டர் கேட்கலாம்.

வேகமாக விற்பனையாகும் நுகர்வோர் பொருள்களை விற்பனை செய்யும் நிறுவனங்களைக் கண்டறிய companylist.org/country/keyword/fmcg <http://companylist.org/country/keyword/fmcg> எனக் குறிப்பிட்டு, தேடி எடுக்கலாம்.

**2. எக்ஸ்போர்ட் புரமோஷன் ஓர்கனைசேஷன்**

எக்ஸ்போர்ட் புரமோஷன் ஓர்கனைசேஷன் அமைப்புகளிடம் ஏற்றுமதி மற்றும் இறக்குமதியாளர்கள் விவரங்கள் இருக்கும். நீங்கள் அதன் இணையதளத்திலிருந்து இறக்குமதியாளர்களின் தகவல்களை எடுக்க முடியும். உதாரணத்துக்கு, ஏற்றுமதிக் கூட்டமைப்பு ஆணையமான ஃபியோ விடம் பல்வேறுவிதமான பொருள்களின் இறக்குமதியாளர்களின் விவரங்களைக் கண்டடையலாம். FIEO.org/buyers/country.doc <http://fieo.org/buyers/country.doc%20>என கூகுளில் குறிப்பிட்டுத் தேடினால், இறக்குமதியாளர்கள் விவரங்களைப் பெறலாம்.

**3. தூதரகம்**

ஒவ்வொரு நாட்டுக்கும் தூதரக (High Commision) அமைப்புகள் உள்ளன. அவற்றின் இணையதளங்களிலிருந்தும் இறக்குமதி யாளர்களை அடையாளம் காண முடியும். நீங்கள் ஏற்றுமதி செய்ய விரும்பும் நாட்டின் பெயரைக் குறிப்பிட்டு, அந்த நாட்டின் ஹைகமிஷன் அமைப்பை இணையத்தில் தேடி, அதன் இணைய பக்கத்தைக் கண்டுபிடிக்கலாம்.

**4. நண்பர்கள், உறவினர்கள்**

வெளிநாடுகளில் இருக்கும் நண்பர்கள், உறவினர்கள் மூலமாக நம்முடைய ஏற்றுமதி பிசினஸை எப்படியெல்லாம் வளர்க்க முடியும் என்றும் பார்க்கலாம். அவர்கள் இருக்கும் பகுதியில் உங்களிடம் இருக்கும் பொருள் தேவையாக உள்ளதா என்பதை அவர்களிடம் கேட்டு, அவற்றை நீங்கள் ஏற்றுமதி செய்ய முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும்.அங்குள்ள உறவினர்கள், நண்பர்கள் மூலமாகக்கூட உங்கள் பொருள்களை அந்த நாட்டில் விற்பனை செய்யலாம். ஃபேஸ்புக் போன்ற சமூக வலைதளங்கள் மூலமும் இறக்குமதியாளர்களைப் பிடித்து அவர்களுக்கு உங்களுடைய பொருள்களை அனுப்ப ஏற்பாடு செய்யலாம். ஃபேஸ்புக் சமூக வலைதளத்தில் அல்லது இணையதளத்தில் 'wholesale supply store in dubai, wholesale Al Aweer market' என்று தேடினால் அவர்களுடைய விவரங்கள் உங்களுக்குக் கிடைக்கும்.

**5 நேரடி சந்திப்பு**

ஐந்தாவது வழி நேரடி சந்திப்பு. இறக்குமதியாளரை நேரடியாகச் சந்தித்து உங்களிடம் இருக்கும் பொருளைப் பற்றி அவர்களிடம் எடுத்து கூறி ஓர்டர் எடுப்பது. ஒரு இறக்குமதியாளரை நேரடியாகச் சந்தித்து அவரிடம் வெற்றிகரமாக ஓர்டர் எடுக்க முடியும். அப்படி எடுத்து அந்த இறக்குமதியாளரை உங்களுடைய பொருளால் நீங்கள் திருப்தி செய்தீர்கள் என்றால், அவர் உங்களுடைய நிரந்தர வாடிக்கையாளராகக்கூட ஆகிவிடுவார். மற்ற வழிகளைவிட நேரடியாகச் சந்தித்து பேசுவதன் மூலம் எளிதில் ஓர்டர் எடுக்கலாம்.

(ஜெயிப்போம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சி.எஸ். அமுதன் இயக்கத்தில் சிவா, தீஷா பாண்டே, ஐஸ்வர்யா மேனன் , சதிஷ், கலைராணி மற்றும் பலர் நடிப்பில் வெளியாகியிருக்கும் பகடித் திரைப்படம் 'தமிழ் படம் 2'. தமிழ் படங்களின் காலங்காலமான கிளிஷேக்களை கிழித்துப் போட்டு கலாய்த்துத் தள்ளிய 'தமிழ் படம் '(2010) படத்தின் இரண்டாம் பாகம். இனி போலீஸ் வேலை வேண்டாம் என முடிவு செய்து வீட்டில் நிம்மதியாக இருக்கும் சிவாவிற்கு பார்சலில் வருகிறது பாம். ஆனால் சிவாவிற்கு பதில் மனைவி பிரியா(தீஷா பாண்டே) இறந்து விடுகிறார். வில்லன் ' றி' மீது கொண்ட கோபத்தால் மீண்டும் போலீசாக பொறுப்புக்கு வருகிறார் சிவா.

யார் இந்த 'பி' ஏன் இப்படி செய்கிறான் என சஸ்பென்ஸ் கொடுக்காமல் பல வில்லன் கெட்டப்களில் என்ட்ரி கொடுக்கிறார் பாண்டி என்கிற பி (சதிஷ்). வில்லன் பி' யை சிவா அழித்தாரா இல்லையா என்பது பல தமிழ், ஹாலிவுட் படங்கள் மட்டுமின்றி அரசியல் அட்ராசிட்டிகளும் சேர்ந்த கலவையான கிளைமாக்ஸ் கடைசியில் உங்களையும் நடிக்க வெச்சுட்டாங்களே என நம் மண்டைக்குள் மணி அடிக்கும் முன்பு அவரே ஒரு கட்டத்தில் தனக்குத் தானே கேட்டுக்கொள்கிறார். அந்த அளவிற்கு தமிழ் படங்களில் மிக முக்கியமான காட்சிகள் அனைத்தையும் 'ஒரு கை பார்த்திருக்கிறார் சிவா.

ரஜினி, கமல், விஜய், அஜித், விஷால், சூர்யா, கார்த்தி , விக்ரம் என அத்தனை ஹீரோக்களின் மேனரிசத்தையும் காட்சிக்குக் காட்சிக் கொடுத்து கைதட்டலை அள்ளுகிறார். சதிஷ் ஒவ்வொரு ஃபிரேமுக்கும் ஒவ்வொரு வில்லன் கெட்டப், ஒவ்வொரு விதமான நடிப்பு என அவருடைய கேரியரில் நிச்சயம் முக்கியமான படம் என்றே சொல்லலாம். படங்களைக் கலாய்க்கதானே செய்கிறோம் என தேமே என்றில்லாமல் ஒவ்வொரு காட்சிக்கும் ஒரிஜினலுடன் மெனெக்கெட்டு மேட்ச் செய்திருக்கிறார்கள்.

தமிழ் படங்கள் மட்டுமின்றி 'ஸ்பீட்' , 'கேம் ஆஃப் த்ரோன்ஸ்', மற்றும் 'ஸ்கை ஃபால்' என ஹாலிவுட் படங்களையும் கலாய்த்திருப்பது வேற லெவல் பாஸ். படங்களின் கலாய்ப்புக் காட்சிகள் மட்டுமின்றி சமீபத்திய அரசியல் சூழல்களையும் ட்ரோல் செய்து அரங்கத்தை அதிரச் செய்திருக்கிறார்கள். படத்தின் வேகத்திற்கு சற்றே பிரேக் போடுகிறது பாடல் காட்சிகள். குறைத்திருக்கலாம். இரண்டாம் பகுதியில் ஹைய்யயோ! இன்னொரு பாடலா என நினைப்பதற்குள் இந்த சீன்ல பாட்டு வேண்டாம் கடுப்பாகிடுவாங்க என சொல்லி கட் செய்த விதம் அருமையோ அருமை.

ஓபனிங் மாஸ் பாடல் தவிர்த்து மற்ற பாடல்கள் மனதில் நிற்க மறுக்கிறது. ஒரு சேஞ்சுக்கு ஆண்களைத் திட்டி ஹீரோயின் ஆடும் 'எவடா உன்ன பெத்தா' பாடல் வித்யாசமான முயற்சி. ஃபிளாஷ் பேக் பீரியாடிக் காட்சியில் கோபி அமர்நாத் ஒளிப்பதிவு தரம். ஒரிஜினல் படங்களின் பின்னணி இசையை அப்படியே பயன்படுத்தாமல் சொந்தமாக சில மாற்றங்கள் செய்து சேர்த்திருப்பது, 'ஆரோமலே' பாடலுக்கு பதில் 'ஏறாமலே' என கலாய்த்திருக்கும் இசையமைப்பாளர் என்.கண்ணனுக்கு சபாஷ். மொத்தத்தில் சினிமா என்றாலே பொழுதுபோக்குதானே அதைத்தான் செய்திருக்கிறோம் என தில்லாகவே நிமிர்ந்து நிற்கிறது இந்த 'தமிழ் படம் 2'




## அடல்ட் பட ஹீரோயின் ஆன சுனிதா!



சின்னத்திரை நடன நிகழ்ச்சிகளில் பங்கேற்பவர் சுனிதா கோகோய். விஜய் டிவியின் ஜோடி நம்பர் ஒண் நிகழ்ச்சியில் டைட்டில் வென்றார். சுனிதா இப்போது சினிமா ஹீரோயின் ஆகிவிட்டார். விவன் என்ற புதுமுகம் இயக்கித், தயாரித்து, நடிக்கும் யார் அந்த கருப்பு ஆடு படத்தில் ஹீரோயினாக நடித்திருக்கிறார். இது அடல்ட் காமெடி படம். இணையத் தளத்தில் பிரபலமான கரடி ராஜா என்ற கதையை மையமாக வைத்து உருவாகி உள்ளது. ஜூலியை போட்டது யாரு, டிங்கு டாங்கு டிங்கு அவுந்து போச்சு ரிங்கு என்ற பாடல்கள் படத்தில் இடம்பெறுகிறது. அதற்கு சுனிதா கவர்ச்சியாட்டம் போட்டிருக்கிறார். "அடல்ட் காமெடி படம் என்றால் ஆபாச படம் என்று அர்த்தம் இல்லை. இளைஞர்கள் அன்றாட வாழ்கில் சிரித்து பேசும் இயல்பான வசனங்களே படத்தில் இடம்பெற்றுள்ளது. படத்தின் கண்டெண்ட்தான் அடல்ட் விஷயமே தவிர காட்சிகளில் ஆபாசம் இருக்காது. என்னுடைய திரைப்பட முயற்சியில் இந்தப் படம் திருப்புமுனையாக இருக்கும், என்கிறார் சுனிதா.

## நந்தினி வில்லன் சினிமாவிற்கு வந்தார்!



நந்தினி தொடரில் வில்லனாக நடித்தவர் கிரண் ஆர்யா. தற்போது சினிமாவில் வில்லனாக நடிக்கிறார். சமீபத்தில் வெளிவந்த ஒரு குப்பை கதை படத்தில் வில்லனாக நடித்தவர், அடுத்து சுந்தர்.சி இயக்கத்தில் ஹிப் ஆப் தமிழா ஆதி, இயக்கி, நடிக்கும் படத்திலும் வில்லனாக நடிக்கிறார். மேலும் இரண்டு படங்களில் வில்லனாக நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார். இதுகுறித்து அவர் கூறியதாவது: சிறு வயதாக இருக்கும் போதே சினிமாவில் நடிக்க வேண்டும் என்பது ஆசை. ஏன் என்றால் என் சித்தப்பா ஒரு இயக்குனர். அப்போதிலிருந்தே சினிமா மீது காதல். கல்லூரி படிப்பை முடித்து சொந்தமாக ஒரு தொழில் துவங்கி வேலை செய்து கொண்டிருந்தேன். தகடு என்ற தமிழ் படத்தில் கதாநாயகனாக அறிமுகமானேன். பிறகு பாலுமகேந்திராவின் கூத்துப் பட்டறையில் நடிப்பு பயின்று வந்தேன். அப்போது அங்கு பார்த்த இயக்குனர் காளி ரங்கசாமி, என்னை ஒரு குப்பைக் கதை படத்தில் வில்லன் காதபாத்திரத்தில் நடிக்க வைத்தார். அதன்பிறகு சரியான வாய்ப்புகள் கிடைக்கவில்லை. நந்தினி தொடர் வாய்ப்பு கிடைத்தது. அதுதான் பெரிய பெயரை பெற்றுக் கொடுத்தது. தொடர்ந்து சீரியல்களில் நடித்துக் கொண்டே சினிமாவிலும் வில்லனாக நடிப்பேன். ஹீரோவாக நடிக்க வேண்டும் என்பதே லட்சியம் என்கிறார் கிரண் ஆர்யா.

## தமிழ் கடவுள் முருகன் சொதப்பியது ஏன்?



பெரும் ஆரவாரத்துடன் தொடங்கிய தமிழ் கடவுள் முருகன் சீரியல் வெறும் ஐந்து மாதத்தில் தடாலென நின்று விட்டது. அந்த சீரியலில் பார்வதியாக நடித்தவர் பிரியா. அந்த சீரியல் தோல்வியடைந்ததற்கு பல காரணங்களை கூறியிருக்கிறார். தனது கதாபாத்திரம் தவறாக வடிமைக்கப்பட்டது, முருகன் குழந்தையாக இருந்தபோது பார்வதியை மகிஷாசூரன் வர்த்தித்ததாக காட்சி இருந்ததை உதாரணமாக குறிப்பிட்டார். பார்வதி திருமணம் செய்வதற்கு முன் நடந்த சம்பவத்தை, பார்வதியின் திருமணம் நடந்ததன் பின்னர் நடந்ததாக தவறாக குறிப்பிட்டிருந்தனர். இப்படி தவறு தவறுகளால் சீரியல் சொதப்பியதாக கூறியுள்ளார். இப்போது பூர்ணமா பாக்கியராஜ் இயக்கும் சீரியலில் அவரது மகளாக நடித்துக் கொண்டிருக்கிறாராம். பெயர் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. விரைவில் சன் டிவியில் ஒளிபரப்பாகுமாம்.

## இனி வில்லி வேண்டாம்!



தொகுப்பாளினியாக சின்னத்திரைக்கு வந்தவர் நிஷா. பிறகு "தெய்வம் தந்த வீடு" சீரியலில் வில்லியானார். அந்த சீரியலிலேயே ஸ்கோர் செய்தவர் அவர்தான். சில மாத இடைவேளைக்கு பிறகு ரெக்க கட்டி பறக்குது, ஈரமான ரோஜாவே தொடர்களில் வில்லியாக ஒப்பந்தமாகியுள்ளார். ஆனால் வில்லி வேடத்தை நிஷா விரும்பவில்லையாம். தொடர்ந்து இப்படியே நடித்துக் கொண்டிருந்தால் மனதளவில் பிரச்சனைகள் வருமென பயப்பிடுகிறார். ஆனால் அவருக்கு நெகடிவ் பாத்திரங்கள் மட்டுமே கிடைக்கிறது. கடை திறப்பு விழாக்களிற்கு சீரியல் நடிகைகளையும் அழைக்கிறார்கள். ஆனால் நெகடிவ் பாத்திரங்களில் நடிப்பவர்களை அழைப்பதில்லையாம். இப்படியான காரணங்களால்தான் இனி பொஸிட்டிவான பாத்திரங்களிலேயே நடிக்கப் போவதாக கூறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணத் திரை

## கீர்த்திக்கு இரட்டை மகிழ்ச்சி!

சாவித்திரியின் வாழ்க்கை படத்தால் தெலுங்கு சினிமாவிலும் பிரபலமான நடிகையாக திகழ்கிறார் கீர்த்தி சுரேஷ். மகாநதி படத்திற்கு தமிழில் பிசியாகிவிட்ட கீர்த்தி சுரேஷ் இன்னும் தெலுங்கில் புதிய படங்களில் கமிட்டாகவில்லை. இருப்பினும், தற்போது தமிழில் அவர் நடித்துள்ள சண்டக்கோழி2, சர்கார் படங்கள் தெலுங்கிலும் வெளியாக உள்ளன. இவற்றில் விஷாலுடன் நடித்துள்ள சண்டக்கோழி 2 ஒக்டோபர் 18ந் திகதி வெளியாகிறது. ஒக்டோபர் 17ந் திகதி கீர்த்தி சுரேஷ் பிறந்த நாள், அதனால் இரட்டிப்பு மகிழ்ச்சி அம்மணிக்கு

## மவுசு குறைந்த 'கண்ணடி' நடிகை!

கடந்த சில மாதங்களுக்கு முன் 'ஒரு அடார் லவ்' மலையாள பட டீஸர் வெளியானது. அதில் நடித்திருந்த நடிகை பிரியா பிரகாஷ் வாரியர் ஒற்றை கண்ணடித்தும், புருவங்கள் உயர்த்தி, நமட்டு சிரிப்பு சிரித்து காதலனை சைட் அடித்த காட்சி ஒரே இரவில் இணைய தளத்தில் வைரலானது. இதையடுத்து அவரது டுவிட்டர் பக்கத்தில் ஃபாலோயர்கள் எண்ணிக்கையும் பல்லாயிரக்கணக்கில் அதிகரித்தது. குறிப்பிட்ட படம் இன்னமும் திரைக்கு வராத நிலையில் பிரியாவுக்கு மட்டும் வேறு படங்களில் நடிக்க வாய்ப்பு வந்த வண்ணம் இருந்தது. பிரியாவாரியர் நடித்த படத்தை ஒரு மாத இடைவெளியில் பார்த்துவிட முடியும் என எதிர்பார்த்த ரசிகர்களுக்கு அப்பட ரிலீஸ் பற்றி எந்த தகவலும் இல்லாததால் ஏமாற்றமே மிஞ்சியிருக்கிறது. இந்நிலையில் விளம்பர படமொன்றில் நடித்தார் பிரியா. அதிலும் கண்ணடிக்கும் காட்சி இடம்பெற்றது. இதற்காக அவருக்கு லட்சக் கணக்கில் சம்பளம் தரப்பட்டதாம். கண்ணடிக்கும் காட்சியில் நடிக்க அவர் சுமார் 35 ரீடேக் வாங்கினார். அந்த விளம்பரத்துக்கு போதிய வரவேற்பு கிடைக்கவில்லை. இதையடுத்து விளம்பர நிறுவனம் வாபஸ் பெற்றது. இதனால் மிகுந்த வருத்தத்தில் உள்ளார்.

## கேலிக்குள்ளாகும் விஷ்ணுவிஷால்

விஷ்ணு விஷால் நடிப்பில் கடைசியாக வெளியான படம் கதாநாயகன். முருகானந்தம் இயக்கிய இந்தப்படம், கடந்த வருடம் செப்டம்பர் மாதம் வெளியானது. இது வணிகரீதியில் படு தோல்வியடைந்ததால், கிட்டத்தட்ட ஒரு வருடமாக வேறு படங்களில் நடிக்காமலே இருந்தார் விஷ்ணுவிஷால். ராட்சசன், சிலுக்குவார்பட்டி சிங்கம், ஜகஜால கில்லாடி என மூன்று படங்கள் முடிவடைந்தும் விஷ்ணு விஷாலின் அடுத்த படம் எதுவும் இன்னும் ரிலீஸாகவில்லை. இந்நிலையில், புதிய படத்தை தொடங்கியிருக்கிறார் விஷ்ணு விஷால். அவருடைய சொந்தத் தயாரிப்பில் உருவாகும் நான்காவது படத்துக்கு இன்னும் தலைப்பு வைக்கவில்லை. முன்னணி ஹீரோக்களின் படங்களுக்கு தலைப்பு வைக்கப்படாத சூழலில் நடிகரின் பெயருடன் பட எண்ணிக்கையை குறிப்பிடுவதுபோல் தன்னுடைய புதிய படத்தையும் விஷ்ணுவிஷால்17 என்று குறிப்பிட்டிருக்கிறார். இதை பார்த்த ரசிகர்கள் சமூகவலைத்தளங்களில் விஷ்ணுவிஷாலை கிண்டல் பண்ணி வருகிறார்கள்.

## வெல்லப்போவது யார்?

விஜய் சேதுபதியும், அருண்பாண்டியனும் இணைந்து தயாரிக்க, கோகுல் இயக்கத்தில் விஜய்சேதுபதி, சாயிஷா, மடோனா செபாஸ்டியன் நடித்துள்ள படம் ஜுங்கா. இப்படம் அண்மையில் சென்சாருக்கு அனுப்பப்பட்டது. படத்துக்கு ஹி சான்று வழங்கப்பட்டது. அதையடுத்து இம்மாதம் 27ஆம் திகதி படத்தை வெளியிட உள்ளனர். சுமார் 350 தியேட்டர்களில் படத்தை வெளியிட திட்டமிட்டுள்ளனர்.

ஜுங்கா ரிலீஸாகும் அதே நாளில் ஆர்யா, சாயிஷா நடித்துள்ள கஜினிகாந்த் படமும் வெளியாகவிருக்கிறது. ஹர ஹர மகாதேவகி, இருட்டு அறையில் முரட்டு குத்து போன்ற ஆபாசமான படங்களை இயக்கிய சந்தோஷ் பி.ஜெயகுமார் இந்தப்படத்தை இயக்கியுள்ளார். படத்தை ஸ்டுடியோ கிரீன் நிறுவனம் தயாரித்துள்ளது. இந்தப் படம் அடல்ட் கெண்டன்ட் படம் இல்லை. ஆர்யாவுக்கு தற்போது மார்க்கெட் குறைவு தான். அதன் காரணமாகவோ என்னவோ கஜினிகாந்த் படம் ஜுங்காவை விட குறைவான தியேட்டர்களிலேயே ரிலீஸாகிறது.

## அதற்குள் பாட்டியான லட்சுமி ராய்!

நடிகை லட்சுமிராய், தான் பாட்டி ஆகிவிட்டதாக டுவிட்டர் பக்கத்தில் மெசேஜ் போட்டிருக்கிறார். நடிகைகள் அம்மா ஆவதையே அவ்வளவாக விரும்பாத நிலையில், நேரடியக பாட்டியே ஆகிவிட்டேன் என்கிறாரே என ரசிகர்கள் அதிர்ச்சியுடன் படித்தால், விசயம் வேறு. கையில் இரண்டு குட்டீஸை வைத்து கொஞ்சிக் கொண்டிருந்தார். அவர் செல்லமாக வளர்க்கும் நாய் இரண்டு குட்டிகளை ஈன்றுள்ளது. அந்த குட்டிகளை கையில் கொஞ்சியபடி போஸ்கொடுத்திருக்கும் அவர் இதுபற்றி டுவிட்டரில் கூறும்போது,'என் வயதுடைய பெண்கள் அம்மா வாகத்தான் இந்நேரம் ஆகியிருப்பார்கள். ஆனால் நான் அதற்கு முன் இரட்டையர்களுக்கு பாட்டியாகிவிட்டேன். ஆச்சரியமாக இருக்கிறதா? எனது குழந்தை (செல்லமாக வளர்க்கும் நாய்) மியு, லியு என்ற இரண்டு குட்டிகளை ஈன்றிருக்கிறது. அதை உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறேன். இப்போது நாங்கள் பெரிய குடும்பம் ஆகிவிட்டோம்' என குறிப்பிட்டிருக்கிறார்.



ஷெரினா

## சதீசுக்கு புதுவாழ்வு தந்த தமிழ்படம் 2

கிரேஸி மோகனின் நாடக குழுவில் நடித்துக் கொண்டிருந்தவர் சதீஷ். அதன் பிறகு சின்னத்திரையில் காமெடி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு வந்தார். ஏ.எல்.விஜய் இயக்கிய பொய் சொல்லப்போறோம் படத்தின் மூலம் சினிமாவுக்கு வந்தார். அதன் பிறகு பல படங்களில் காமெடியனாக நடித்தார். பாண்டிராஜ் இயக்கிய மெரீனா படத்தில் ஹீரோவாக நடிக்க தேர்வானவர் இவர்தான். கடைசி நேரத்தில் இவர் மாற்றப்பட்டு சிவகார்த்திகேயன் ஹீரோவானார். இவர் ஹீரோவின் நண்பர் ஆனார். அன்று முதல் இருவரும் நிஜத்திலும் நண்பர்கள் ஆனார்கள். இதுவரை 50க்கும் மேற்பட்ட படங்களில் நடித்தபோதும் சதீசுக்கு தனித்த அடையாளம் கிடைக்கவில்லை. வசனம் பேசுகிறார், பாடி லாங்குவேஜ் இல்லை என்ற விமர்சனம் வைக்கப்பட்டது. தற்போது வெளிவந்துள்ள தமிழ் படம் 2ம் பாகத்தில் சதீஷ் காமெடி வில்லனாக நடித்துள்ளார். சதீசின் நடிப்பு பற்றி இருவேறு விமர்சனங்கள் இருந்தாலும் ரசிகர்கள் அவரது காமெடி வில்லத்தனத்தை ரசிக்கிறார்கள். இது தவிர அவர் படத்தில் 15 கெட்அப்களில் நடித்துள்ளார். அந்நியன், முதல் 2.ஓ வரை எல்லா ஹீரோக்களின் கெட்அப்பையும் போட்டுவிட்டார். இந்தப் படத்திற்கு பிறகு சதீஷ் நடிக்கும் படங்களின் எண்ணிக்கை உயரும். அவர் சீரியஸ் வில்லனாக நடிக்கும் வாய்ப்பும் அமையலாம் என்கிறார்கள்.

## கடித்து குதறிய இலியானா!

நடிகை இலியானா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் தன்னுடைய லேட்டஸ்ட் புகைப்படங்களை வெளியிட்ட வண்ணமிருக்கிறார். சில நாட்களுக்கு முன் உடல் முழுவதையும் பெட்ஷீட்டால் மூடியபடி தனிமையில் படுத்திருக்கும் புகைப்படத்தை வெளியிட்டிருந்தார். அதைப் பார்த்தவர்கள் அவரது அழகை வர்ணித்த நிலையில் திடீரென்று ஒரு ரசிகர் மட்டும், 'நீங்கள் ஆபாச நடிகைபோல் இருக்கிறீர்கள். எங்களுக்காக ஒரு ஆபாச படத்தில் நடியுங்கள்' என்று கேட்டிருந்தார். ரசிகரின் ஆபாச கமெண்ட்டை கண்டதும் கோபத்தில் முகம் சிவந்தார் இலியானா. மறுநாள் நிர்வாணபாணியிலான ஒரு புகைப்படத்தை வெளியிட்ட இலியானா, அந்த ரசிகரை லெப்ட் ரைட் என வெளுத்து வாங்கினார். கெட்டவார்த்தையில் திட்டி பதிலை தொடங்கிய இலியானா, 'கருத்துசொல்வதென்றால் என்ன வேண்டுமானாலும் சொல்வாயா? உன்னை பெரிய இது என்று நினைத்துக்கொண்டிருக்கிறாயா? உன்னுடைய தவறுகளை நீ திரும்பிபார். நீயே உன்னை இருளில் மூழ்கடித்துக் கொண்டிருக்கிறாய். அதனால்தான் நடிகைகளை இப்படி விமர்சிக்கிறாய்' என ஆவேசத்தில் குமுறியிருக்கிறார்.


## ரஜினி படத்தில் இறைவி டீம்!

இப்போதுள்ள இளம் இயக்குனர்கள் தங்களது ஆரம்பகால படங்களில் கூட இருந்தவர்களையும், தங்களது படங்களில் நல்ல ஒத்துழைப்பை கொடுத்தவர்களையும் தங்களது அடுத்தடுத்த படங்களிலும் நல்ல கேரக்டர்கள் கொடுக்கின்றனர். அந்தவகையில் இயக்குனர் கார்த்திக் சுப்புராஜும் தற்போது ரஜினி படத்தில் தனது ஆஸ்தான நடிகர்களான விஜய்சேதுபதியையும் பாபி சிம்ஹாவையும் இணைத்ததைபோல, அஞ்சலியையும் கதாநாயகிகளில் ஒருவராக்கியுள்ளார். கார்த்திக் சுப்புராஜின் இறைவி படத்தில் இந்த மூன்றுபேரும் இணைந்து நடித்திருந்தார்கள் என்பதும் அதில் அஞ்சலியின் நடிப்பு எல்லோராலும் பாராட்டப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. அதேசமயம் அவரின் ஆஸ்தான இசையமைப்பாளராக சந்தோஷ் நாராயணன் இருந்தாலும், ரஜினியின் முந்தைய இரண்டு படங்களில் அவர் தொடர்ந்து பணியாற்றிவிட்டார் என்பதால் அவரை மட்டும் விட்டுக்கொடுத்துவிட்டு அனிருத்தை இணைத்துக்கொண்டுள்ளார்.

## தோற்றம் மாறிய சின்ன குஷ்பூ!

சின்ன குஷ்பு என்று ரசிகர்களால் செல்லமாக அழைக்கப்பட்ட ஹன்சிகா மோத்வானி தற்போது ஆளே அடையாளம் காண முடியாத அளவுக்கு மெலிந்திருக்கிறார். அவரை தேடி இந்தி படவாய்ப்பு வந்துள்ளதால் யோகா, உணவு கட்டுப்பாடு மற்றும் கடின உடற்பயிற்சி மூலம் 10 கிலோ எடையை குறைத்துள்ளார். ஆனால் ரசிகர்களோ ஹன்சிகா தமது அழகை இழந்து-நோய்வாய்ப்பட்டு இருப்பது போல காட்சி தருவதாக விமர்சித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'கல்யாண பரிசு' படத்தில் எம்.சரோஜா, கே.ஏ.தங்கவேலு

# சி(ரி)த்ராலயா

## மாயமானது தங்கவேலுவின் மோதிரம்!

டி.ஏ.நரசிம்மன்

'கல்யாண பரிசு' படப்பிடிப்பில் கோபுவுக்கு மறக்க முடியாத ஓர் அனுபவம். தங்கவேலு, எம்.சரோஜா சம்பந்தப்பட்ட நகைச்சுவைக் காட்சிகளை கோபுவே நடித்துக் காட்டினார். அவர் மிமிக்ரி கலைஞர் என்பதால் தனது வசனங்களைத் தானே நடித்துக் காட்டிப் பேச, தங்கவேலுவும் சரோஜாவும் அதைக் கப்பென்று பிடித்துக் கொண்டார்கள்.

“ஆச்சாரி... உம்மைப் போல எல்லா வசனகர்த்தாவும் நடிச்சு காட்டிட்டா எங்களுக்கு வேலை மிச்சம்” என்று சொன்ன தங்கவேலு, ஸ்ரீதரிடம் சென்று கோபுவைப் பாராட்ட, உடனே ஸ்ரீதர், “நீயே சரோஜாதேவிக்கும் வசனம் சொல்லிக் கொடுத்துடு கோபு” என்று கூடுதல் பொறுப்பைக் கொடுத்தார்.

### வசன வாத்தியார்

கதாநாயகிக்கே வசனம் சொல்லித்தரும் முக்கியப் பணி கிடைத்துவிட்ட கம்பீரத்துடன் சரோஜாதேவி முன்பாகப் போய் நின்றார் கோபு. பக்கத்தில் அவருடைய அம்மா. பெயரே ருத்ரம்மா!

“குட் மார்னிங் ஜடை கோபால்” சரோஜாதேவி கொஞ்சியபடி வரவேற்றார். “என் பேரு சடகோபன். ஜடை கோபால் இல்லை” கோபு விளக்கினார். “ஜடை கோபால்ங்கிற பேருக்கு என்ன அர்த்தம்?” கன்னடம் கலந்த தமிழில் கேட்டார்.

பெயர்தான் கொலை செய்யப் பட்டுவிட்டது. மதிப்பையாவது காப் பாற்றிக் கொண்டுவிடுவோம் என்று நினைத்த கோபு, “ஜடை கோபால்னா, 'உலகத்திலேயே சிறந்த புத்திமான்' என்று அர்த்தம்!” எனக் கூற, ருத்ரம்மா கோபுவை மலைப்புடன் நோக்கினார். சரோஜாதேவி தொடர்ந்து ஜடைகோபால் என்றே கோபுவை அழைக்க, படத்தின் ஒளிப்படக் கலைஞர் 'ஸ்டில்ஸ்' அருணாச்சலம் இந்தத் தகவலை ஸ்ரீதரிடம் சொல்லிவிட்டார்.

“அட்ஜஸ்ட் பண்ணிக்க கோபு, சின்ன வயசுல நீ ஜடையோட சுத்திட்டு இருந்தது சரோஜாதேவிக்கு தெரியுமோ என்னவோ!” என்று தன் பங்குக்கு நண்பனை கலாட்டா செய்தார் ஸ்ரீதர். இது நடந்து சுமார் 50 ஆண்டுகள் கழித்து கடந்த 2011ல் நடந்த கோபுவின் சதாபிஷேக வைபவத்துக்கு சென்னை வந்திருந்த சரோஜாதேவி, 'ஜடை கோபால்' என்று அழைத்துக் கிண்டல் செய்ததை கோபுவுக்கு நினைவுபடுத்தி சிரித்துத் தீர்த்தனர்.

### வழக்காறாக மாறிய வசனம்!

'கல்யாண பரிசு' படப்பிடிப்பின் போது ஒவ்வொரு நாளும் ஷூட்டிங் முடிந்தவுடன் திருப்தியுடன் கோபு விடம் வரும் தங்கவேலு, “ஆச்சாரி, நீ பெரிய லெவலுக்கு வருவே, நடிக்கிற எங்களாலயே சிரிப்பை அடக்க முடியுல, ஷாட் நேரத்துல நீயும்தானே பார்க்கிறே!” என்று மனதாரப் பாராட்டுவார். இப்படிப் பாராட்டும் மகிழ்ச்சியும் கலகலப்பு மாகப் படப்பிடிப்பு முடிந்து படம் வெளியானபோது, முதல் நாள் முதல் காட்சியில் படம் பார்க்கச் சென்ற ஸ்ரீதருக்குப் பயங்கர அப்செட். சரோஜாதேவி அழும் இடங்களில் எல்லாம் ரசிகர்களும் கூடவே கிண்டலாக கேவ ஆரம்பித்தனர்.

“என்னடா கோபு! ரசிகர்கள் கேலி செய்யறாங்களே, படம் படுத் துடுமா?” என்று கவலையோடு கேட் டார். ஆனால், ஒரே வாரத்தில் பிக் அப் ஆகி படத்துக்கு அமோக வரவேற்பு கிடைத்தது. பெண்கள் கூட்டம் திரையரங்குதோறும் மொய்க்க ஆரம்பித்தது. படத்தின் செண்டிமெண்ட் காட்சிகளில் மனம் இளகி குமுறிக் குமுறி அழுத பெண்கள், நகைச்சுவைக் காட்சிகளில் விலா நோகச் சிரித்த ஆண்களோடு இணைந்து கொண்டனர்.

படத்தில் இடம்பெற்ற நகைச்சுவைப் பகுதி தனி ரெக்கார்டுகளாக விற்ப னையில் சக்கைபோடுபோட்டது, பட்டிதொட்டியெங்கும் வயது பேதமின்றி அதைக் கேட்டு வாய் விட்டுச் சிரித்தனர். பிரபல எழுத்தாளர் பைரவன் என்று சொல்லி மனைவியிடம் தனக்குப் பாராட்டு விழா நடந்ததாக டூப் விட்டு தங்கவேலு மாட்டிக்கொள்ளும் இடம் மிகவும் பிரமாதம் என்று பத்திரிகைகளில் விமர்சிக்கப்பட்டது.

“எழுத்தாளர்கள் இந்த நாட்டின் முதுகெலும்பு என்று சொன்னேன். 'தட்'னான் பாரு...!” என்று தங்கவேலு கூற, “உங்களையா?” என்று சரோஜா கேட்பார்.

“என்னை ஏன் தட்றான்? கையை தட்னான்... தட் னான்...தட்டிகிட்டே இருந்தான்!” என்று தங்கவேலு தொடர்ந்து டூப் விடும் காட்சியின்போது திரையரங்குகள் அதிர்ந்தன. நடைமுறை வழக்கில் மன்னார் அண்ட் கம்பெனி என்றாலே ஏமாற்று வேலை என்று அர்த்தம் பெற்றுவிட்டது.

### உருவப்பட்ட மோதிரம்

'கல்யாண பரிசு' படத்தின் வெற்றி, ஸ்ரீதரை மிகப் பெரிய உயரத்துக்கு இட்டுச்சென்றது. தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய மூன்று மொழிகளில் சூப்பர் ஹிட். சென்னை, மதுரை உள்ளிட்ட நகரங்களில் 25 வாரங்கள், ஐந்து சென்டரில் நூறு நாட்கள் கடந்து ஓடி சாதனை படைத்தது. மற்ற மொழிகளிலும் படத்தின் ரீமேக் உரிமைக்கு ஏக கிராக்கி. தெலுங்கில் நாகேஸ்வரராவும் சரோஜாதேவியும் நடித்தனர். இந்தியில், ராஜ்கபூர் வைஜயந்திமாலா ஜோடி நடித்தது.

ஊர் ஊராகக் 'கல்யாண பரிசு' படத்துக்கு வெற்றிவிழாக்கள் நடந்தன. படத்தில் பங்கேற்ற தொழில்நுட்பக் கலைஞர்கள், நடிக நடிகையர் வெற்றிவிழாக்களில் கலந்துகொண்டபோது மக்கள் கூடம் அலைமோதியது. மதுரையில் நடந்த வெற்றிவிழாவில் கோபு மேடையேறியபோது, “என் நண்பன் கோபு” என்றுதான் ஸ்ரீதர் அவரைக் கூட்டத்தினரிடையே அறிமுகப்படுத்தினார். இதில் நெகிழ்ந்து போன கோபு, ஸ்ரீதரின் இறுதி நாட்கள் வரை அவரைப் பிரியாமல் இருந்தார்.


ஸ்ரீதர் இயக்கிய கடைசி படம் வரையிலும் அதில் இணைஇயக்குநர் கோபு என்ற பெயர் கிரெடிட் கார்டில் ஒளிர்வதைக் காணலாம். ஒரு முக்கிய நகரத்தில் 'கல்யாண பரிசு' வெற்றிவிழா நடந்து முடிந்ததும் கோபு அருகில் வந்த தங்கவேலு, 'கல்யாண பரிசு' ஆச்சாரி... படத்துக்கு திருஷ்டி கழிந்தது” என்றார். விஷயம் புரியாமல் கோபு விழிக்க 'கல்யாண பரிசு' கையைக் குலுக்குற சாக்குல எவனோ என் இரண்டுபவுன் தங்க மோதிரத்தை உருவிட்டு போயிட்டான். அவன் நம்மளவிட பெரிய மன்னார் அண்ட் கம்பெனியா இருப்பான்போல” என்றார்.

'கல்யாண பரிசு' படத்தை 'நஸ்ரானா' என்ற பெயரில் இந்தியில் இயக்கினார் ஸ்ரீதர். படப்பிடிப்பு முடிவடைந்ததும் ஸ்ரீதர் கோபு இருவருக்கும் பிரிவு உபசார விருந்து ஒன்றைத் தனது வீட்டில் கொடுத்தார் படத்தின் நாயகன் ராஜ்கபூர். இதற்கு முன்தினம்தான் படத்தின் இசையமைப்பாளர் ரவி ரீரெகார்டிங் பணிகளை முடித்து சவுண்ட் நெகட் டீவை ஒப்படைத்திருந்தார். ராஜ்கபூர் தரப்போகும் விருந்தை முடித்துக் கொண்டு சவுண்ட் நெகட்டீவை எடுத்துக்கொண்டு சென்னை செல்ல இரவு 9 மணி விமானத்தில் டிக்கெட் முன்பதிவு செய்து முடித்தாகிவிட்டது.


மாலை ஏழு மணிக்கு விருந்து அளிக்க ஏற்பாடு செய்திருந்தார் ராஜ்கபூர். ஸ்ரீதரையும் கோபுவையும் கப்பல் போன்ற ராஜ்கபூரின் கார் அழைத்துக்கொண்டு அவரது வீட்டுக் குச் சென்றபோது மாலை 7.30 மணி. இருவரையும் வரவேற்றார் ராஜ்கபூர். அப்போது எக்ஸ்பிரஸ் கார்டு என்ற புதியவகை சீட்டு விளையாட்டை ஸ்ரீதருக்கு அறிமுகப்படுத்தினார். ஸ்ரீதருக்கு ஆட்டம் பிடித்துப்போக ராஜ்கபூரும் ஸ்ரீதரும் நேரம் போவதே தெரியாமல் விளையாடிக் கொண்டிருந்தனர். திடீரென்று சுவர்க்கடிகாரத்தைக் கண்ட கோபுவின் வயிறு கலங்கிப்போனது.

தனது கண்களை நம்ப முடியாமல் தனது கைக்கடிகாரத்தையும் பார்த்தார் கோபு. மணி அதே 8.30 காட்டியது. “அய்யோ விமானம் புறப்பட இன்னும் சரியாக அரைமணிநேரம்தான் இருக் கிறது. எழுந்திரு ஸ்ரீ...” என்று கத்தியேவிட்டார் கோபு... அந்த சூப்பர் ஸ்டார் நாயகன் அதிர்ந்துபோய் கோபுவைப் பார்த்தார்...

சிரிப்பு தொடரும்.


கோபுவின் சதாபிஷேகத்தில் கலந்துகொண்டு வாழ்த்தும் சரோஜாதேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ராஜிவ் காந்தி கொலை 39
## புலிகள் சிக்கிய கதை

கே.ராகோத்தமன்

பதினோராம் திகதி சென்னையிலிருந்து புறப்பட்ட முருகன், கோடியக்கரையில் படகுக்காகக் காத்திருந்த நாள்களுக்குள்ளாகவே அவரைச் சென்னை திரும்பச் சொல்லி உத்தரவு வந்துவிட்டது.

அது மிஞ்சிப் போனால் இரண்டு மூன்று நாள்கள் இருக்கும். அதற்குள் சிவராசனுக்குப் புரிந்துவிட்டது.

முருகன் இல்லாது போனால் நளினியால் எந்தப் பயனும் இல்லை. முருகன் திரும்பி வந்துவிட்டார் என்பது தெரிந்ததும் நளினி சகஜ நிலைமைக்குத் திரும்பிவிட்டார்.

பழையபடி சுறுசுறுப்பாகத் திட்டத்தில் ஆர்வம் செலுத்த ஆரம்பித்தார். தணுவையும் சுபாவையும் புரசைவாக்கத்தில் ஒரு துணிக்கடைக்கு அழைத்துச் சென்று இருவருக்கும் துணிகள் எடுத்தார்கள்.

பச்சை, ஒரேஞ்ச் நிற சல்வார் கம்மீஸ் அங்கே வாங்கப்பட்டது.

இன்னொரு கடையில் வேறொரு சுடிதார் துணி வாங்கப்பட்டு, ராயப் பேட்டையில் அதனைத் தைக்கக் கொடுத்தார்கள். தணு அளவு கொடுக்கவில்லை.

தணுவின் சார்பில் சுபாவே அளவு கொடுத்தார். மிகவும் லூசாகத் தைக்கும்படி டெய்லருக்குச் சொன்னார்கள். சுபாவுக்கு ஒரு புடைவையும் வாங்கினார்கள்.

புரசைவாக்கத்திலிருந்து பாண்டி பஜாருக்குச் சென்று ஒரு செருப்புக் கடையில் மீண்டும் ஒரு ஜோடி செருப்பு வாங்கினார்கள். வெளியே



விடுதலை புலிகள் அணிவகுப்பில் தணு

வந்து ஒரு பிளாட்பார செருப்புக் கடையில் மீண்டும் ஒரு ஜோடி செருப்பு வாங்கினார்கள்.

ஷொப்பிங் எல்லாம் முடித்து, அன்றிரவு நாதமுனி தியேட்டருக்குச் சென்று மூவரும் படம் பார்த்தார்கள்.

மறுநாள் மூவரும் கோல்டன் பீச் சென்று உல்லாசமாகக் கழித்தார்கள். அன்றிரவு நளினி வீட்டிலேயே தங்கிவிட்டு அதற்கடுத்த நாள் (19 மே) மூவரும் மகாபலிபுரம் போனார்கள்.

திட்டம் தயார். என்ன செய்ய வேண்டும், யார் செய்ய வேண்டும், மற்றவர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று எல்லாம் ஏற்கெனவே பேசி முடிக்கப்பட்டிருந்தது.

எனவே தங்களைப் பதற்றமில்லாமல் வைத்துக்கொள்வதற்காக அவர்கள் இம்மாதிரி உல்லாசப் பயணங்களை மேற்கொண்டார்கள். ஆனால் இடையில் ஒரு சம்பவம் நடந்தது.

ஷொப்பிங் போன சமயம் தி. நகரில் சுபாவின் கண்ணில் ஒரு சர்தார்ஜி பட்டார். அதுவரை சகஜமாக சிரித்துப் பேசிக்கொண்டிருந்தவர் திடீரென்று முகம் மாறினார்.

அவரது உடம்பு உதறத் தொடங்கியது. நளினியின் கையைப் பிடித்துக்கொண்டிருந்தவர், மேலும் அழுத்தமாகப் பற்றிக்கொண்டார். வியர்த்துவிட்டது. நளினிக்கு ஒன்றும் புரியவில்லை. என்ன, என்ன என்று பதற, 'எனக்கு அவனை ஓங்கி அறையவேண்டும் போலிருக்கிறது. சர்தார்ஜியைப் பார்த்தாலே வயிறு எரிகிறது' என்று சுபா சொன்னார்.

இலங்கை சென்ற இந்திய அமைதிப்படையில் இருந்தவர்களுக்குள் பெரும்பாலானவர்கள் சீக்கியர்கள் என்பதை தணு விளக்கினார்.

பத்தொன்பதாம் திகதி மாலை மகாபலிபுரத்திலிருந்து மூவரும் வீடு திரும்பியபோது, வாசலில் சிவராசன் காத்திருந்தார். நளினி, பக்கத்து வீட்டில் சாவி கொடுத்துவிட்டுத்தான் வெளியே போவார் என்கிற விஷயம் அவருக்குத் தெரியாது. எனவே, வெளியே வெகுநேரம் காத்திருந்திருக்கிறார்.

உள்ளே சென்றதும் சிவராசன் அவசரமாக ஒரு செய்தித்தாளை நளினியிடம் காட்டினார். ராஜிவ் காந்தி தமிழகம் வருவதை உறுதி செய்து, அவரது பயணத் திட்ட விவரங்களை அளித்திருந்தார்கள்.

'நாம் இந்தத் தருணத்துக்காகத்தான் தயாராகிக் காத்திருக்கிறோம்!' என்று சிவராசன் சொன்னார். அவரது கண்ணில் மின்னல் மாதிரி ஓர் ஒளி தென்பட்டது.

மூவரும் அமைதியாக அவர் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். '21ம்திகதி மாலைவருகிறார். இங்கிருக்கப் போவது 22ம் திகதி ஒருநாள் மட்டும். நாம் வேலையை எங்கே முடிக்கப் போகிறோம் என்று விரைவில் சொல்கிறேன். பாண்டிச்சேரியோ, மயிலாடுதுறையோ, ஸ்ரீபெரும் புதூராகவோ இருக்கலாம். நளினி நீங்கள் எதற்கும் இரண்டு நாள் லீவ் எடுத்துக்கொண்டு விடுங்கள்.' திடீரென்று இரண்டு நாள் விடுமுறை எடுப்பதெல்லாம் கஷ்டம்.

சரியான நேரம் சொன்னால் உரிய சமயத்தில் வந்துவிடுவதாக நளினி சொன்னார்.

அன்றைக்குத்தான் சிவராசனோ, சின்ன சாந்தனோ டரியல் பீட்டர்ஸ் மூலம் லலித் சந்திரசேகரை அணுகி ஸ்ரீபெரும்புதூரில் காரியத்தை முடிப்பதற்கான ஆரம்பக்கட்ட வேலைகளைச் செய்திருந்தார்கள்.

மறுபுறம் தோப்புத்துறை ஜகதீசன் மூலம் மயிலாடுதுறை நிகழ்ச்சியில் மாலை அணிவிக்க முடியுமா என்றும் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

பிறகு திருமதி மரகதம் சந்திரசேகரிடம் தேர்தல் நிதி அளித்து, லதா கண்ணன் மூலம் அவர்கள் மாலையிடுவதற்கு வாய்ப்பு கிடைப்பது உறுதி என்பது தெரிந்ததும்தான் ஸ்ரீபெரும்புதூர் என்று திட்டம் இறுதியானது.

மாலை நளினியை ராயப்பேட்டை வீட்டுக்கு வந்துவிடச் சொல்லிவிட்டு தணுவையும் சுபாவையும் சிவராசன் தன்னுடன் அழைத்துச் சென்றார்.

அன்றைக்கு தணுவுக்கு வலது தோள்பட்டையில் வலி இருந்தது.

அவரை கல்யாணி நர்சிங்ஹோமுக்கு அழைத்துச் செல்லும்படி நளினி சொல்லியிருக்கிறார். 'அதையெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் நமது விஷயம் வெளியே யாருக்கும் தெரியாதபடி நடந்துகொள்ள வேண்டும்.

அலுவலகத்தில் லீவு சொல்லும் போதுகூட வேறுஏதாவதுகாரணத்தைச் சொல்லுங்கள். ஸ்ரீபெரும்புதூர் என்னும் பேச்சே வரக்கூடாது' என்று எச்சரித்துவிட்டுச் சிவராசன் புறப்பட்டுப் போனார்.

திட்டமிட்டபடி இருபதாம் திகதி அன்று மாலை ஆறு மணிக்கு ராயப்பேட்டை வீட்டில் அனைவரும் சந்தித்தார்கள்.

சிவராசன் மூன்றே விஷயங்கள் சொன்னார். (தொடரும்)



"தங்களின் உருவ பொம்மை மீது அம்பு எய்து பயிற்சி எடுத்துக்கொண்டிருப்பதாக எதிரி ஓலை அனுப்பியிருக்கிறான் மன்னா!"

"பொம்மைகளுக்கு ஓடத்தெரியாது என்று காட்டமாக பதில் ஓலை அனுப்பிவிடுங்கள் அமைச்சரே!"



"என்ன... ஃபீஸ் தராம கிளம்பறீங்க?"

"நீங்க எந்த வியாதியையும் கண்டுபிடிக்கலியே.. உடம்பு நல்லாதான் இருக்குனு சொல்லிட்டீங்களே..."



"தலைவருக்கு, பேச்சுவார்த்தைல எப்படி பல் உடைஞ்சது..?"

"வீட்ல சம்சாரத்துகூட பேசியிருக்காரு!"

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### அமைச்சரின் அதிரடி... அரசியல்வாதிகளின் எதிர்ப்பு

# இழுத்து மூடப்பட்ட முல்லைத்தீவு பார்மசிகள்

## பனடோலுக்கும் பத்து கிலோமீற்றர் போக வேண்டிய அவலம்

முரளி

இன்றைய திகதியில் முல்லைத்தீவில் ஒரு தனியார் பார்மசியும் இயங்கவில்லை. அவசரத்திற்கு மருந்துகள் வாங்குபவர்கள் பாடு பெரிய திண்டாட்டமாக உள்ளது. சாதாரண காயச்சலிற்காக பனடோல் வாங்குவதென்றால் கூட, ஒன்றில் அரச வைத்தியசாலைகளிற்கு சென்று காத்திருக்க வேண்டும். அல்லது முல்லைத்தீவு மாவட்டத்தை விட்டு வவுனியாவிற்கோ கிளிநொச்சிக்கோ செல்ல வேண்டியுள்ளது. அவ்வளவாக கவனம் பெறாத ஆனால், பெரிய சிக்கலில் சிக்கியுள்ளது முல்லைத்தீவு மாவட்டம்.

ஏனிந்த நெருக்கடி?

வடக்கு சுகாதார அமைச்சர் அண்மையில் ஒரு அதிரடி நடவடிக்கையை ஆரம்பித்தார். சாதாரண நோயாளியை போல அரச வைத்தியசாலைகளிற்கு சென்று, குறைகளை கண்டறிந்தார் என்ற செய்தியும் படங்களும் வெளியானது. அதே சூட்டுடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் அனுமதி பெறப்படாமல் இயங்கும் மருந்தகங்களை குறிவைத்து அடுத்த ஒப்ரேசனை ஆரம்பித்தார். முல்லைத்தீவு பிராந்திய சகாதார சேவைகள் பணிப்பாளர் ஆரம்பித்த இந்த அதிரடி நடவடிக்கைக்கு சுகாதார அமைச்சரின் முழுமையான ஆதரவு உள்ளது.

மருந்க்கங்களில் நடத்தப்பட்ட சோதனையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்கும் பதின்னான்கு மருந்தகங்களும் பதிவுசெய்யப்படாமல் இயங்குவது தெரிய வந்தது. இதனால் அனைத்து மருத்தகங்களும் இழுத்து மூடப்பட்டுள்ளன. ஒன்றும் இயங்கவில்லை. முல்லைத்தீவில் இதுவரை மருந்தகங்கள் ஒன்றுமே பதிவு செய்யப்படாமல்தான் இயங்கியதா என்ற அதிர்ச்சி பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. ஆனால் பார்மசி சார்ந்தவர்கள் வேறு விதமாக சொல்கிறார்கள்.

"முல்லைத்தீவில் மட்டுமல்ல, இலங்கை முழுவதும் உள்ள பிரச்சனை இது. இதுவரை பதிவுசெய்யப்பட்ட மருந்தாளர்களின் தொகையை விட, சில மடங்கு அதிகமான பார்மசிகள் நாடு முழுவதும் உள்ளன. பதிவு செய்யப்பட்ட மருந்தாளர்களே மருந்து வழங்க வேண்டுமென்ற சட்டம் இருந்தாலும், இலங்கை முழுவதும் யதார்த்தம் வேறுவிதமாக இருக்கிறது. பார்மசிகளில் வழங்கப்பட்ட மருந்தால் உயிரிழந்ததாக இதுவரை பதிவுகள் இல்லை. சாதாரணமாக கொடுக்கக்கூடிய மருந்துகளைத்தான் கொடுக்கிறோம். மருத்துவர்களின் சிபாரிசுகளுடன் கொடுக்க வேண்டியவை எவையென்பது பார்மசியில் இருப்பவர்களிற்கு தெரியும்" என்கிறார்கள் அவர்கள்.

என்றாலும், மருத்துவ விடயங்களில் அலட்சியம் கூடாது. அதிகபட்ச கவனமும், பொறுப்புணர்வும் அவசியம். பதிவுசெய்யப்பட்ட மருந்தாளர்கள் மட்டுமே மருந்துப் பொருட்களை வழங்க வேண்டுமென்ற நடைமுறையும் அப்படியானதுதான்.

"முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மருந்தகங்களில் கருக்கலைப்பு செய்யப்படுவதற்கான மருந்துகள் வழங்கப்படுவதாக முறைப்பாடு கிடைக்கிறது. இப்படியான மருந்தை பாவித்த பெண்ணொருவர் கர்ப்பபை வெடித்து இறந்துள்ளார். போதையூட்டும் மருந்துகளும் மருந்தகங்களில் தாராளமாக விற்பனை செய்யப்படுகின்றன. வைத்தியர்களின் அனுமதிபெற்றவர்களிற்குத்தான் அவற்றைவிற்கலாம். ஆனால் முல்லைத்தீவு பார்மசிகளில் அதெல்லாம் கணக்கில் எடுக்கப்படுவதில்லை" என தனது நடவடிக்கைக்கு விளக்கமளித்துள்ளார் சுகாதார அமைச்சர் குணசீலன்.

எனினும், முல்லைத்தீவு மாவட்ட பார்மசிகளை குறிவைத்தது பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது. முல்லைத்தீவை சேர்ந்த வர்த்தகர்கள், அரசியல்வாதிகள் என பெரும்பாலானவர்கள் அதற்கு எதிராக குரல்கொடுக்கிறார்கள். "வடக்கில் ஐந்து மாவட்டங்கள் இருக்க, முல்லைத்தீவை மட்டும் ஏன் குறிவைக்க வேண்டும்?, சுகாதார அமைச்சர் குணசீலனின் சொந்த மாவட்டமாக மன்னாரில் இருந்து ஆரம்பிக்க வேண்டியதுதானே. அங்கு இப்படியான சோதனைகளை ஆரம்பித்தால் வாக்கு கிடைக்காமல் போய்விடும்." என்கிறார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் 14 பார்மசிகளையும் மூடியதற்கு எதிராக பார்மசி உரிமையாளர்கள் முல்லைத்தீவு நகரில் போராட்டமொன்றை செய்தனர். வர்த்தகர் சங்கமும் அதற்கு ஆதரவளித்திருந்தது. எனினும், இதன் பின்னாலும் அரசியல் இருக்கிறது என்கிறார்கள். முல்லைத்தீவு வர்த்தகர் சங்க தலைவர் முன்னாள் வடக்கு பிரதி அவைத்தலைவராக இருந்த அன்ரனி ஜெகநாதனின் சகோதரர். அன்ரனி ஜெகநாதனின் மகன் பார்மசி உரிமையாளர் என்ற பெயரில் முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் பேசியிருந்தார். வர்த்தகர் சங்கத்தின் ஆதரவின் பின்னால் அரசியல், குடும்ப உறவு உள்ளதென்ற அபிப்பிராயமும் உள்ளது. அந்த ஆர்ப்பாட்டத்தில் சுகாதார அமைச்சருக்கு எதிரான சில தரக்குறைவான வார்த்தைகளும், சுலோக அட்டைகளும்காணப்பட்டன.

அனுமதி பெறாத பார்மசிகள் விடயத்தை கையாள்வதில் ஒரேயடியாக இழுத்து மூடுவது தீர்வல்ல என முல்லைத்தீவின் அரசியல் பிரதிநிதிகள் பெரும்பாலானவர்கள் எம்முடன் பேசினார்கள். "ஒரு பார்மசியை ஆரம்பிக்க 40, 50 இலட்சம் முதலிடுகிறார்கள். அனுமதியில்லையென ஒரேயடியாக அவற்றை இழுத்து மூடுவது சரியல்ல. இது போரால் பாதிக்கப்பட்ட மாவட்டம். அந்த மக்களை அடித்து விழுத்துவதை போல செயற்பட முடியாது. அவர்களிற்கு கற்பிக்க வேண்டும். குறிப்பிட்ட காலஅவகாசம் வழங்கி, அவர்களை பதிவுசெய்ய வைக்கும் பொறிமுறையை உருவாக்குவதுதான் சரியான நடவடிக்கை. யாரோ சில அதிகாரிகளின் பிழையான வழிகாட்டலில் அமைச்சர் இப்படி நடக்கிறார். யுத்தம் முடிந்த பின்னர் ஒன்பது வருடம் இப்படித்தானே இயங்கியது. உயிர்காக்கும் அவசரம் அப்போது எங்கே போயிருந்தது?" என்றார்கள்.

பார்மசி உரிமையாளர்கள் இன்னொரு கருத்து சொன்னார்கள். "பார்மசிகளை பதிவு செய்யச் சொல்கிறார்கள். ஆனால் பதிவுசெய்ய சென்றால் தேவையற்ற தடைகளை போட்டு இழுத்தடிக்கிறார்கள், நாங்கள் பதிவுசெய்யக்கூடாது என்பதற்காகவே அதிகாரிகள் குறுக்கே நிற்கிறார்களோ தெரியவில்லை. இங்குள்ள பார்மசியொன்றை அண்மையில் பதிவு செய்ய சென்ற சம்பவம் ஒரு உதாரணம். மட்டக்களப்பை சேர்ந்த ஒரு மருந்தாளரின் பெயரில் பதிவுசெய்ய சென்றார்கள். அதற்கு அதிகாரிகள் மட்டக்களப்பில் இருந்து ஏன் அங்கு வந்தீர்கள்? இங்கு எங்கு தங்கியிருப்பீர்கள்? என தேவையில்லாத கேள்விக்ளை கேட்டு இழுத்தடித்து வருகிறார்கள். அதிகாரிகள் இப்படி நடந்தால் எப்படி பதிவுசெய்வது?" என்கிறார்கள்.

பார்மசி சர்ச்சை முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்திலும் விவாதிக்கப்பட்டது. ரிசாட் பதியுதீன், செல்வம் அடைக்கலநாதன், சிவமோகன் எம்பிக்கள், வடக்கு அமைச்சர் சிவநேசன், மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் உள்ளிட்ட அரசியல்வாதிகளின் சம்மதத்துடன், பார்மசிகளை ஒரேயடியாக இழுத்து மூடாமல், ஆறு மாத அவகாசம் கொடுக்கலாமென முடிவெடுக்கப்பட்டது. நன்றாக பேசுவார், அமைச்சரை கேள்வி கேட்பார் என மருந்தக உரிமையாளர்கள் தமிழரசுக்கட்சியின் இளம் உறுப்பினர் இளஞ்செழியனையும் ஒருங்கிணைப்புகுழு கூட்டத்திற்கு அழைத்து சென்றிருந்தனர். பார்மசி உரிமையாளர் என்று கூறித்தான் அவர் ஒருங்கிணைப்புகுழு கூட்டத்தில் பேசினார். ஆனால், அவர் பார்மசி உரிமையாளர் அல்ல. தனது கடையை பார்மசி நடத்த வாடகைக்கு விட்டுள்ளார் என்கிறார்கள். சுகாதார அமைச்சர், அனுமதியின்றி இயங்கும் பார்மசிகளை தடுக்க வேண்டுமென கூறிய அதிகாரிகளை மரியாதை குறைவாகவும், எல்லைமீறியும் அவர்

தொடர்ச்சி 26-ம் பக்கம்...



முல்லைத்தீவில் நடந்த ஆர்ப்பாட்டம்

- முல்லைத்தீவில் இருந்த 14 மருந்தகங்களில் ஒன்றும் அனுமதிப்பத்திரம் பெற்றவையல்ல. வவுனியா மாவட்டத்தின் 19 மருந்தகங்களில் அனுமதிப்பத்திரம் பெற்றவை 10. யாழ் மாவட்டத்தின் 80 மருந்தகங்களில் அனுமதிப்பத்திரம் பெற்றவை 70. கிளிநொச்சி மாவட்டத்தின் 6 மருந்தகங்களில் அனுமதிப்பத்திரம் பெற்றவை 4. மன்னாரின் 11 மருந்தகங்களும் அனுமதி பத்திரம் பெற்றவை.
- முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவி வெற்றிடமாகவே உள்ளது. பதில் பணிப்பாளரே கடமையில் இருக்கிறார். நிரந்தர பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நியமிக்கப்பட வேண்டுமென பார்மசி உரிமையாளர்கள் வலியுறுத்துகிறார்கள். முல்லைத்தீவிற்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்படவிருந்த சமயத்தில், அவரை அரசியல்வாதிகள் சிலரே தடுத்து வைத்துள்ளதாக குற்றம் சுமத்துகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உதவிக்கு வரும் உயிரியல் - 10

# இயற்கை என்.பி.கே... மண்ணை வளமாக்கும் ஜப்பான் தொழில்நுட்பம்!

முனைவர் அ.உதயகுமார்

**இந்த உலகம் மனிதர்களுக்கு மட்டுமானதல்ல; கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர்கள் உட்பட கோடிக்கணக்கான உயிர்களுக்கும் உறைவிடம் நாம்தான் உலகை ஆட்டிவைத்துக் கொண்டிருக்கிறோம் என எண்ணிக் கொண்டிருக்கிறான் மனிதன். ஆனால், உண்மையில் உலகை ஆட்டிவைப்பவை பூச்சிகளும் கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர்களும்தான். நுண்ணுயிர்கள் என்றாலே மனிதனுக்கு எதிரானவை என்ற பொதுவான எண்ணம் உண்டு. உண்மையில் அப்படியில்லை. தனது அனைத்துப் படைப்பிலும் இரண்டு வாசல்களை வைத்தே இருக்கிறது இயற்கை. ஒரு வாசல் அடைத்தால், இன்னொரு வாசல் திறக்கும். அதன்படி, தீமை செய்யும் நுண்ணுயிர்களைக் கட்டுப்படுத்த சில நன்மை செய்யும் நுண்ணுயிர்களையும் படைத்துள்ளது. அப்படிப்பட்ட நுண்ணுயிர்களைப் பற்றிய புரிதலே இந்தத் தொடர்.**

அங்கக வேளாண்மையில் நுண்ணுயிர்களின் பங்கு மகத்தானது. இயற்கை விவசாயமானாலும் சரி, இரசாயன விவசாயமானாலும் சரி நுண்ணுயிர்கள் இருந்தால்தான் மண்ணில் நாம் இடும் சத்துகள் பயிர்களைச் சென்றடையும். இரசாயன உரங்களை அளவுக்கு அதிகமாக மண்ணில் இடும்போது, நுண்ணுயிர்கள் இறந்துபோவதால் மண்வளம் பாதிக்கப்படுகிறது. நுண்ணுயிர்கள் இல்லாத மண்ணில் மூட்டை மூட்டையாக உரங்களைக் கொட்டினாலும், அதன் பலன் பயிருக்குக் கிடைக்காது.

பயிர்களுக்குத் தேவையான முதன்மை உரங்கள் தழை, மணி, சாம்பல் சத்துகள். இவற்றைப் பயிர்கள் சுலபமாக எடுத்துக்கொள்ளும் வகையில் ஜப்பான் நாட்டில் புதிதாக ஒரு தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். நுண்ணுயிர்கள் மூலமாக இந்தச் சத்துகள் சிதைக்கப்பட்டு, திரவ வடிவில் நேரடியாகப் பயிருக்குக் கிடைக்கும் வகையில் ஒரு திரவத்தைத் தயாரித்துப் பயன்படுத்துகிறார்கள். அந்தத் திரவத்தின் பெயர் 'பயோ என்.பி.கே' (Bio NPK). தழை, மணி, சாம்பல் சத்துகளைத்தான் சுருக்கமாக என்.பி.கே என அழைக்கிறோம். தற்போது இது உலகம் முழுவதும் வேகமாகப் பரவி வருகிறது. நமது நாட்டில்தான் அதைப்பற்றி விவசாயத்துறை சார்ந்த அதிகாரிகளே அறியாமல் இருக்கிறார்கள்.

இந்தத் திரவத்தை இலை தழைக்கழிவுகள், ரோடோ சூடோமோனஸ்' (Rodo Seudomonos) எனும் பக்டீரியா மற்றும் ஏ.எல்.ஏ (5 அமினோ லியோலிக் அமிலம் (5 Amino Levulinic Acid) ஆகியவற்றைக் கொண்டு நாமே தயாரித்துக் கொள்ளலாம். வயலில் தேவையில்லாத களைகளை (பார்த்தீனியம் செடி உள்பட) நொதிக்க வைத்து இந்தத் திரவத்தைத் தயாரிக்க வேண்டும். இதனால், களைச்செடிகளைப் பயனுள்ளதாக மாற்ற முடியும்.

ரோடோ சூடோமோனஸ் என்பது ஒளிச்சேர்க்கை (போட்டோ சிந்தடிக்) செய்யக்கூடிய பக்டீரியா. இந்தப் பக்டீரியா தாவரங்களைவிட 300 மடங்கு அதிகமாகச் சூரிய ஒளியைப் பயன்படுத்தக்கூடியது. அதன் மூலமாக, தனக்குத் தேவையான அமினோ அமிலங்கள், என்சைம்கள், ஹார்மோன்களை அது உற்பத்தி செய்துகொள்ளும். இந்தப் பக்டீரியாக்கள் மண்ணில் இருக்கும்போது, 'லாக்டோ பேசிலஸ்', 'ஈஸ்ட்' போன்றவற்றைச் செயல்படத் தூண்டும். இதனால் மண்ணில் விழும் இலை, தழைகள் விரைவாக மட்கும். சுருக்கமாக ஏ.எல்.ஏ (கிலிகி) என அழைக்கப்படும் 5 அமினோ லியோலிக் அமிலம் எனும் என்சைம், மருத்துவம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் பயன்பாட்டில் உள்ளது. விவசாயத்தில் தற்போதுதான் இதைப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறார்கள்.

இது தொடர்பான ஆராய்ச்சிக்காக என் வீட்டில் ஒரு மாதிரியை அமைத்திருக்கிறேன். ஓரிரண்டு விவசாயிகள் தோட்டத்திலும் இதை அமைத்திருக்கிறார்கள். நம் சூழலுக்கேற்ப விவசாயிகள் சுலபமாகத் தயாரிக்கும் வகையில் சில மாற்றங்களையும் கண்டறிந்திருக்கிறேன். அவர்களும் இந்தத் திரவத்தைப் பயன்படுத்திய பிறகு பயிர் வளர்ச்சி, மகசூல் நன்றாக இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இதைத் தயாரிப்பது மிகவும் சுலபமானது.

எருக்கு, கொழுஞ்சி, பார்த்தீனியம் உள்ளிட்ட பல வகையான தாவரங்களின் இலைகளை மட்டும் சேகரித்துக்கொள்ள வேண்டும். அவற்றில் 50 கிலோ அளவு இலைகளை ஆயிரம் லிட்டர் தண்ணீரில் நன்றாக மூழ்கும்படி ஐந்து நாள்களுக்கு ஊற வைக்க வேண்டும். அதற்குள் இலைகளில் இருந்து சாறு இறங்கி, தண்ணீர் முழுவதும் கஷாயமாக மாறி இருக்கும். இந்தக் கஷாயத்தை வடிகட்டி வேறொரு டிரம்மில் ஊற்றி, அதில் 10 கிலோ பிண்ணாக்கு (கடலைப் பிண்ணாக்கு அல்லது எள்ளுப் பிண்ணாக்கு) சேர்த்துக் கலக்க வேண்டும். பிறகு, மீன்தொட்டிகளில் பயன்படுத்தப்படும் காற்று செலுத்தும் மோட்டார் மூலம் இத்திரவத்துக்குள் காற்றைச் செலுத்த வேண்டும்.

இலைகளை ஊற வைத்த 5ம் நாள் 20 லிட்டர் கொள்ளளவு கொண்ட டிரம்மில் 42 கிராம் ரோடோ சூடோமோனஸ், 40 கிராம் ஏ.எல்.ஏ என்சைம், 40 கிராம் உப்பு ஆகியவற்றைக் கலக்க வேண்டும். பிறகு, டிரம் நிறையும் வரை தண்ணீர் நிரப்பி வெயிலில் ஒரு நாள் வைத்தால், இது சிவப்பு நிறத்துக்கு மாறிவிடும்.

கஷாயத்தில் பிண்ணாக்கு கலந்து காற்று செலுத்திய பிறகு, 20 லிட்டர் டிரம்மில் தயாரித்த திரவத்தை அதனுடன் கலக்கி 25 நாள்கள் வைத்திருந்தால் பயோ என்.பி.கே தயாராகிவிடும். முதல் முறை மட்டுமே 25 நாள்களாகும். அடுத்த முறை தயாரிக்கும்போது ஏற்கெனவே தயாரித்த கசடுகள் டிரம் அடியில் இருப்பதால் ஏழே நாட்களில் தயாராகிவிடும். பயோ என்.பி.கே திரவத்தை அனைத்துப் பயிர்களுக்கும் பயன்படுத்தலாம்.

ஆயிரம் லிட்டர் திரவத்தைப் பத்து ஏக்கர் நிலத்தில் உள்ள பயிர்கள் மீது தெளிக்கலாம். சொட்டுநீர்ப் பாசனம் மூலமாகக் கொடுப்பதாக இருந்தால், ஐந்து ஏக்கருக்குப் போதுமானதாக இருக்கும். இதைப் பயிருக்குக் கொடுக்கும்போது பயிர் வளர்ச்சி நன்றாக இருக்கும். அதிகப் பூக்கள் எடுக்கும்; மகசூல் மூன்று மடங்கு அதிகரிக்கும். காய், பழங்கள் சுவையாகவும், நீண்டநாள்கள் சேமித்து வைக்கும் திறனுடையதாகவும் இருக்கும்.

பரவும்


## இரசாயன உரத்தைக் குறைக்கும்!


இரசாயனம் பயன்படுத்தாமல் என்னால் விவசாயம் செய்ய முடியாது என நினைக்கும் விவசாயிகளுக்கும் நல்ல தீர்வு பயோ 'என்.பி.கே. இலைதழை கஷாயத்தில் பிண்ணாக்கு கலந்த பிறகு, 150 கிராம் அளவுக்கு நுண்ணூட்ட உரங்களைச் சேர்த்துக் கொள்ளலாம். இதைப் பயன்படுத்துவதன் மூலமாக, வழக்கமாகப் பயன்படுத்தும் இரசாயன உரத்தின் அளவில் 25 சதவிகிதம் பயன்படுத்தினாலே போதுமானதாக இருக்கும்.






பயோ என்.பி.கே திரவ தயாரிப்புக்கான உபகரணங்கள்...







பயோ என்.பி.கே திரவ தயாரிப்புக்கான மூலப்பொருள்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "விளம்பரத்திற்கு அல்ல... ஆத்ம திருப்திக்காகவே வந்தோம்"

## ஐரோப்பிய இளையவர்களின் சத்தமில்லா மனிதநேயப்பணி

புலம்பெயர்ந்து வாழும் இளையவர்கள் சிலர் இலங்கைக்கு வந்து, தங்கியிருந்து வடக்கிலுள்ள சிறுவர் இல்லங்களில் சுகாதார வேலைத்திட்டங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்படியொரு தகவல் நமக்கு கிடைத்தது. அட... முக்கியமான முயற்சியாயிற்றே, சத்தமின்றி இந்த காரியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்கள் யார்? அவர்களின் நோக்கம் என்ன? இப்படி பல கேள்விகளுடன் வடக்கு சுகாதார அமைச்சின் அதிகாரிகளை தொடர்பு கொண்டோம். அந்த இளையவர் குழுவின் ஒருங்கிணைப்பாளர்களின் தொடர்பிலக்கங்களை தந்தார்கள். அந்த இலக்கத்தை தொடர்புகொண்டு, யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த அந்த குழுவின் ஒருங்கிணைப்பாளர்களை நேரில் சந்தித்தோம்.

வாசல்வரை வந்து கைகூப்பி, வணக்கம் சொல்லி வரவேற்றனர் மாளவியும், பிருந்தினியும். மிக இளையவர்கள். பிரித்தானியாவை சேர்ந்த பிரிந்தினி பல் மருத்துவர். நோர்வேயை சேர்ந்த மாளவி பல் மருத்துவத்துறை மாணவி. இருவரும்தான் இந்த அமைப்பை உருவாக்கியவர்கள்.

இருவரும் வேறுவேறு நாட்டை சேர்ந்தவர்கள். எப்படி இந்த அமைப்பிற்காக ஒன்றிணைந்தார்கள் என்பதன் பின்னால் சுவாரஸ்யமான கதையொன்றுள்ளது.

மாலவியின் இசை ஆசிரியரின் திருமண வரவேற்பு இலண்டனில் நடந்தது. இதற்கு மாளவி சென்றிருந்தார். ஆசிரியரின் உறவினர் வழியில் பிருந்தினியும் வந்திருந்தார். அங்கு `பேசிக் கொண்டிருந்தபோதுதான், இருவருக்குமிடையிலான ஒத்த சிந்தனையையும், இலங்கையில் பணியாற்றுவதற்கான ஆர்வத்தையும் அடையாளம் கண்டு கொண்டனர். அதன்பின் ஐரோப்பிய தமிழ் சுகாதார அமைப்பு உருவாகி, வடக்கில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆதரவற்ற சிறார்களின் மத்தியில் விழிப்பணர்ச்சி, சுயநம்பிக்கை, ஆலோசனை, சுகாதார மேம்பாடு உள்ளிட்டவற்றில் இப்போது பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதற்காக வடக்கிலுள்ள சகல சிறுவர் இல்லங்களிலும் கடந்த ஒரு மாதமாக பணியாற்றுகிறார்கள்.

இந்த புரஜெக்டிற்காக நோர்வே, இங்கிலாந்து, டென்மார்க், பிரான்ஸ் நாடுகளை சேர்ந்த 20 இளையவர்கள் இலங்கை வந்திருக்கிறார்கள். இவர்கள் அணிகளாக பிரிந்து வடக்கிலுள்ள ஐந்து மாவட்டங்களிலும் தங்கியிருக்கிறார்கள். அந்தந்த மாவட்டங்களிலுள்ள இல்லங்களில் ஒரு முழுநாள் தங்கியிருக்கிறார்கள். வடக்கு சுகாதார அமைச்சின் ஊடாகவே இந்த பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.




வடக்கிலுள்ள 34 சிறுவர் இல்லங்களிலும் கிட்டத்தட்ட 2,800 சிறார்கள் தங்கியிருக்கிறார்கள். அவர்கள் அனைவருடனும் இந்த தன்னார்வலர்கள் பேசி, அவர்களிற்கு சுயநம்பிக்கையூட்டி, ஆலோசனை வழங்கியுள்ளனர். இது மிக மகத்தான பணி.

இந்த தன்னார்வலர்களில் 18 பேர் இலங்கை வம்சாவளியை சேர்ந்த இளையவர்கள். இங்கிலாந்து, நோர்வே வம்சாவளியை சேர்ந்த இருவர் உள்ளனர். இந்த பயணம், திட்டத்திற்கான நிதியை இவர்களே திரட்டியிருக்கிறார்கள். ஐரோப்பாவிலிருந்து இலங்கை வருவதற்கான விமான பயணச்சீட்டுக்களை ஐரோப்பாவிலுள்ள முன்னணி தமிழ் நிறுவனமொன்று ஏற்பாடு செய்து கொடுத்திருந்தது. ஏற்கனவே இலங்கையில் பல மனிதநேய பணிகளில் அந்த நிறுவனம் ஈடுபட்டிருக்கிறது.

இந்த புரஜெக்டிற்கு முன்னதாக, இதைப்பற்றி அறிவித்து, இணைந்து வேலைசெய்ய விரும்புபவர்களை

**இலங்கைக்கு தனிமையில் பெண் பிள்ளைகள் வருவதில் பெற்றோர் ஆரம்பத்தில் தயங்கியிருக்கிறார்கள். வடக்கிலிருந்து தற்போது வரும் செய்திகள் வேறு அவர்களை பயமுறுத்தியிருக்கின்றன. அந்த தயக்கம், பயத்தையெல்லாம் போக வைத்துத்தான், இளையவர்கள் இலங்கைக்கு வந்திருக்கிறார்கள்.**

தொடர்புகொள்ளுமாறு அறிவித்திருக்கிறார்கள். அந்த அறிவித்தலை பார்த்து இணைந்தவர்கள்தான் இந்த தன்னார்வலர்கள்.

ஐரோப்பிய தமிழர் சுகாதார அமைப்பின் நோக்கம், தோற்றம் பற்றி மாலவி அறிமுகம் தந்தார்.

"2003 இல் நோர்வேஜிய தமிழ் சுகாதார அமைப்பு என்ற பெயரில் அப்பாவும், அவரது நண்பர்கள் சிலரும் ஒரு அமைப்பை உருவாக்கியிருந்தனர். நோர்வே அரசாங்கம் அந்த அமைப்பிற்கு நிதியுதவியளித்திருந்தது. வடக்கு, கிழக்கில் அந்த அமைப்பு மருத்துவ முகாம்கள், பல்வைத்தியத்துறை சார்ந்த பயிற்சி, சிகிச்சை நிலையங்கள் அமைத்தல், அம்பியுலன்ஸ் வாங்கிக் கொடுத்தல் என கணிசமான பணியாற்றியிருந்தது. ஆனால் யுத்தத்தின் பின் அந்த அமைப்பு அவ்வளவு வீச்சாக செயற்பட முடியாமல் போய் விட்டது.

எங்கள் தலைமுறையை சேர்ந்த ஏராளமானவர்கள் வெளிநாடுகளில் சுகாதாரத்துறையில் கல்விகற்கிறார்கள். இலங்கையில் வேலைசெய்ய அவர்களில் பலர் விரும்புகிறார்கள். ஆனால், யாரிடம் போவது, எப்படி உதவிகளை செய்வது என அவர்களிற்கு தெரியாது. ஏனென்றால், இந்த பணிகளிற்காக ஒழுங்கமைக்கப்பட்ட

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்புமுறையெதுவும் கிடையாது. அவர்கள் குடும்பத்துடன் இலங்கைக்கு வரும்போதுதான் தமக்கு தெரிந்தளவில் உதவிகளை செய்துவிட்டு போகிறார்கள்.

இளையவர்களின் தன்னார்வ முயற்சிகளிற்க வாய்ப்பேற்படுத்திக் கொடுக்கும் அமைப்பாகவே இதை இரண்டு வருடங்களின் முன்னர் ஆரம்பித்தோம்.

நான் தொடர்ந்து இலங்கைக்கு வந்து சென்று கொண்டிருக்கிறேன். பல இளம் பிள்ளைகளிற்கு போதிய சுகாதார விழிப்புணர்ச்சி இல்லாமல் இருக்கிறது. பிள்ளைகளால் சரியான முறையில் தமது சுகாதாரத்தை பாதுகாக்க தெரியவில்லை. அவர்களிற்கு சரியான வழிகாட்டலும் இல்லை. இப்படி இங்குள்ள இளையவர்களின் வாழ்க்கையையும் கட்டியெழுப்ப வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் இந்த அமைப்பை உருவாக்கினோம்.

பெற்றோருடன் வாழும் சிறுவர்களிற்கான சுகாதார உதவி, ஆலோசனையென்பவற்றை எப்படியானவது பெற்றோர் கொடுப்பார்கள். ஆனால் சிறார் இல்லங்களில் உள்ள ஆதரவற்ற குழந்தைகளிற்கு அது கிடைக்காது. அதை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்பதுதான் இம்முறை இலக்கை வந்ததன் நோக்கம். கடந்த ஜனவரி மாதம் இலங்கைக்கு வந்தபோது வடக்கின் ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா இரண்டு சிறுவர் இல்லங்கள் வீதம் தெரிவுசெய்து, அங்குள்ள சிறார்களுடன் பேசி, அவர்களின் தேவைகள், பிரச்சனைகளை அடையாளம் கண்டு, இந்த புரஜெக்டை உருவாக்கினோம்" என்றார்.

கடந்த ஒரு மாதமாக இந்த குழுவினர் வடக்கில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இம்மாத இறுதியில்தான் இலங்கையிலிருந்து புறப்படுகிறார்கள். சிறுவர் இல்லங்களில் பணியாற்றிய அனுபவங்களை, எதிர்கொண்ட சவால்களை பற்றி பிரிந்தினி பேசினார்.

"சிறுவர் இல்லங்களில் இருந்து உரிய வயதையடைந்ததும் வெளியேறுபவர்களிடம் தம்மைப் பற்றிய மருத்துவ அறிக்கைகள் இருப்பதில்லை. அவர்கள் எந்த நோய்க்காக சிகிச்சை பெற்றார்கள், உடலில் என்னென்ன பிரச்சனை இருக்கிறது என்பது குறித்த எந்த குறிப்பும் கிடையாது. இதுவே பெற்றோருள்ள குழந்தையென்றால், பெற்றோரிற்கு அனைத்தும் தெரிந்திருக்கும். முதல் வேலையாக 3,000 மருத்துவ பதிவேடு அச்சிட்டு அனைத்து பிள்ளைகளிற்கும் வழங்கினோம். அந்த பதிவேட்டு முறையை முறையாக நடைமுறைப்படுத்துவதென்றால், தாதியர்கள் மூன்று மாதங்களிற்கு ஒருமுறை எல்லா இல்லங்களிற்கும் சென்று பெண்பிள்ளைகளுடன் பேசியிருக்க வேண்டும். வருடத்திற்கொரு முறை பிள்ளைகள் முழுமையாக மருத்துவ பரிசோதனைக்குட்படுத்தப் பட்டிருக்க வேண்டும்.

தங்களது உடல், அது எப்படி மாற்றமடைகிறது, உடல் மாற்றமென்பது மனித இயல்பு, அது சாதாரணமானதென்பதை எல்லா பிள்ளைகளிற்கும் உணர்த்த வேண்டும். ஆனால் அது இங்கு இன்னும் பிரச்சனையான விடயமாக உள்ளது. பிள்ளைகளிற்கு இதை புரிய வைப்பதை சில இல்லங்கள் விரும்பாமலிருந்தன. சில இல்லங்களில் நிர்வாகிகள் பகிரங்கமாகவே ஒருசில மாணவர்களை சுட்டிக்காட்டி, "அவருக்கு கொஞ்சம் மெண்டல் பிரச்சனையிருக்கிறது", "ஆள் ஒரு மாதிரி" என்று கூறுகிறார்கள். இது மோசமான நடைமுறை.

இது முழுக்க முழுக்க தன்னார்வலர்களான எங்கள் அணியினரின் முயற்சிதான். எங்கள் குடும்பங்கள், நண்பர்கள் மூலம் 1,700 பவுண்ஸ் திரட்டினோம். சிறுவர்களிற்கு பல தேவைகள் உள்ளன. எங்களால் முடிந்தவற்றை வாங்கிக் கொடுத்தபடியிருக்கிறோம்" என்றார்.

இந்த பயணத்தினால் தாங்களும் பயனடைந்துள்ளதாக கூறுகிறார் மாளவி. இந்த தன்னார்வலர் அணியிலுள்ளவர்களின் பெற்றோர் இலங்கையர்களாக இருந்தாலும், அவர்கள் அனைவருமே ஐரோப்பாவில் பிறந்து வளர்ந்தவர்கள். பெரும்பாலானவர்கள் முதன்முறையாக இப்பொழுதுதான் இலங்கைக்கு வருகிறார்கள். உண்மையான பிரச்சனைகளையும், வாழ்க்கையை பற்றியும் அறிந்துகொள்ளும் வாய்ப்பாக அவர்களிற்கு இந்த பயணம் அமைந்திருப்பதாக சொல்கிறார்.

பேசிக் கொண்டிருந்தபோது, தன்னார்வலர் அணியை சேர்ந்த கிறிஸ்தோபரும் இணைந்து கொண்டார். நோர்வே வம்சாவளி இளைஞனான அவருக்கு இலங்கைக்கு வருமுன் ஒரு தமிழ் வார்த்தையும் தெரியாது. இப்பொழுது சில தமிழ் வார்த்தைகள் பேசுகிறார். சிறுவர் இல்லங்களில் உற்சாகமாக சிறார்களுடன் ஆடிப்பாடி, அவர்களை உற்சாகப்படுத்தி பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.






கிறிஸ்தோப்பர் - பிரிந்தினி - மாளவி




இவர்களுடன் பேசும்போது, வடக்கு சிறுவர் இல்லங்கள் குறித்து நமது நிர்வாக அமைப்பு கவனம் கொண்டிருக்காத பல விடயங்களை குறிப்பிட்டார்கள். முக்கியமாக சிறுவர் இல்லத்தில் பணிபுரிபவர்களின் நடத்தை தொடர்புடையது. சில இல்லங்களில் சிறார்களுடன் பேசும்போது, அவர்கள் மிக மகிழ்ச்சியாக இருப்பதையும், சில இல்லங்களில் சிறார்கள் சரியான மனநிலையில் இல்லாததையும் குறிப்பிடுகிறார்கள்.

எல்லா சிறுவர் இல்லங்களிலும் அவர்கள் அடையாளம் கண்ட பிரதான பிரச்சனை சிறார்கள் மனஅழுத்தத்துடன் இருக்கிறார்கள் என்பதே. அதை களைவதற்கு முயற்சித்ததாக சொல்கிறார்கள். ஒவ்வொரு சிறுவர் இல்லத்திலிருந்தும் இந்த குழு புறப்படும்போது, ஒவ்வொரு சிறாரிடமிருந்தும் கடிதமொன்று வாங்கிவைக்கிறார்கள். சில மணித்தியாலங்கள் அவர்களுடன் பேசியது பெரிய மாற்றத்தை அவர்களிற்குள் ஏற்படுத்தியது, அவர்கள் தந்த கடிதங்கள் அதை பிரதிபலிக்கிறது என்கிறார்கள். "அக்கா உங்களுடன் பேசும்போது அம்மாவுடன் பேசுவதை போலுள்ளது. அடுத்த பிறப்பொன்று இருந்தால், உங்களின் மகளாக பிறக்க ஆசைப்படுகிறேன்" என சிறுமியொருத்தி எழுதித்தந்ததாக நெகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறார் மாளவி. "ஓரிரண்டு மணித்தியாலங்கள் பேசியது மட்டுமே நான் செய்தது. அந்த சிறுமிகள் அன்பாக பேச, ஆறுதல் கூற, பகிர்ந்துகொள்ள ஆளில்லாமல் இருப்பதுதான் பெரிய பிரச்சனை" என்றார்.

"ஏதாவதொரு நோய்க்கு சிறார்கள் மருந்து பாவிக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. ஆனால் ஏன் அந்த மருந்தை பாவிக்கிறோம், தனக்கு என்ன பிரச்சனையென்பதை பல சிறார்கள் அறிந்திருக்கவில்லை. சிறுவர் இல்ல அணுகுமுறையில் சிறிய மாற்றங்கள் அவசியம்" என்றார் பிருந்தினி.

இந்த புரஜெக்ட் முடியும் தறுவாயை எட்டினாலும், விரைவில் இன்னொரு புரஜெக்டுடன் இலங்கைக்கு திரும்பி வருவோம் என்று உறுதியாக சொன்னார்கள்.

இப்படியான பணியை இளையவ்ர்கள் சத்தமின்றி செய்து கொண்டிருப்பது மகத்தான காரியமல்லவா. அதை அவர்களிடமே சொன்னோம். "இதை நாங்கள் விளம்பரத்திற்காக செய்யவில்லை. ஆத்ம திருப்திக்காகவே செய்கிறோம். பிறகெதற்கு ஆர்ப்பாட்டம்?" என அழுத்தமாக கேட்டார்கள்.

ஐரோப்பிய தமிழர் சுகாதார அமைப்பில் இணைந்து பணியாற்ற ஆர்வமுடைய உள்ளூரிலுள்ளவர்களிற்கு அழைப்பு விடுக்கிறார்கள். தனியே மருத்துவதுறையை சேர்ந்தவர்கள் என்றில்லாமல், ஆர்வமுள்ள யாரென்றாலும் தம்முடன் தொடர்பேற்படுத்தும்படி அழைப்பு விடுத்துள்ளனர்.

தொடர்புகளிற்கு: jeen.stanislaus@etho-charity.org, Malavi.siva@etho-charity.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் தயாரித்த சண்டியன்!

பீஷ்மர்



ஆனந்தபுரம் BOX என்றால் என்ன? அதன் புவியியல் அமைவிடம் எது? அது எப்படி உருவாகியது? இந்த விடயங்களில் வாசகர்களிற்கு தெளிவான அறிமுகத்தை கடந்த இதழ்களில் கொடுத்திருந்தோம். இராணுவத்தின் படையணிகள் எந்த திசையில், எப்படி நகர்ந்து புதுக்குடியிருப்பில் புலிகளை முற்றுகையிட்டன என்று குறிப்பிட்டிருந்தோம்.

இனியும் பின்னகர முடியாது. புதுக்குடியிருப்பே நமது கடைசி கோட்டை. புதுக்குடியிருப்பை விட்டு பின்னகர்வது புலிகளின் அழிவிற்கு சமமானது. பின்னகர்ந்து அழிவை சந்திக்க வேண்டியதில்லை. எமக்கொரு அழிவு வருமென்றால், அது புதுக்குடியிருப்பிலேயே வரட்டும். இங்கிருந்து பின்னகர்ந்து அழிவை சந்திக்க வேண்டியதில்லையென்ற முடிவிற்கு பிரபாகரன் வந்திருந்தார் என்பதை கடந்த இதழில் குறிப்பிட்டிருந்தோம்.

அதன் தொடர்ச்சியை குறிப்பிடுவதற்கு முன்னர், ஆனந்தபுரம் BOX பற்றிய கடந்த இரண்டு வார தொடர்களை வாசித்த பல வாசகர்கள் சில சந்தேகங்களை எழுப்பியிருந்தனர். அவற்றிற்கு இந்தவாரம் கட்டாயம் பதிலளிக்க வேண்டுமென அன்புக் கட்டளையும் இட்டிருந்தனர். வாசகர்கள் பல கேள்விகளை கேட்டிருந்தாலும், இந்த தொடரின் தொடர்ச்சியுடன் பொருந்திச் செல்லும், இரண்டு கேள்விகளிற்கு பதில் சொல்லிவிட்டு தொடரலாம்.

1.புதுக்குடியிருப்பில் தொடர்ந்து நிலைகொள்ள முடியாதென்றால், புலிகள் ஏன் காட்டுக்குள் செல்லவில்லை? காட்டுக்குள் செல்லாமல், கடற்கரை பக்கமாக சென்றதால்தானே சிக்கிக் கொண்டார்கள்?

2.மண் அணை அமைத்த இடங்களில் புலிகள் தாக்குப் பிடித்தார்கள் என்றால் புதுக்குடியிருப்பில் ஏன் மண் அணை அமைக்கவில்லை?



## இறுதி யுத்தத்தில் நடந்தது என்ன 81

இந்த இரண்டு கேள்விகளையும் பல வாசகர்கள் எம்மிடம் கேட்டனர்.

முதலாவது, புலிகள் முள்ளிவாய்க்காலை நோக்கி செல்லவில்லை. கொண்டு செல்லப்பட்டனர் என்பதே கள யதார்த்தம். புலிகளை எந்த பகுதிக்குள் முடக்குவது என்பதை படைத்தரப்பு முன்னரே திட்டமிட்டு, அங்கு நோக்கி முள்ளிவாய்க்கால் புலிகளை பின்தள்ளியது. இறுதி யுத்தத்தை நன்கு கவனித்தால் ஒரு உண்மை புலப்படும்.

புலிகளிற்கு மட்டுமல்ல, எந்த கரந்தடி இயக்கத்திற்கும் காடு உயிர்கொடுக்கும். புலிகள் மரபு இராணுவ கட்டமைப்பை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தாலும், கரந்தடி இயல்பிற்கும் மாறக்கூடும் என படைத்தரப்பு சந்தேகித்தது. காட்டிற்கும் புலிகளிற்குமிடையிலான தூரத்தை அதிகரிக்க வேண்டும், காட்டு போரில் புலிகளை விட வலுவானதாக இராணுவத்தை மாற்ற வேண்டும் என்பதே இறுதி யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னர் இராணுவத்திடமிருந்த திட்டம். அந்த இரண்டையும் வெற்றிகரமாக செய்தார்கள். இதுதான் புலிகளிற்கு மிக நெருக்கடியை கொடுத்தது.

இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையணி மட்டுமல்ல, 58வது டிவிசன், 8வது அதிரடிப்படை என்பன காட்டுப்போரில் சிறப்பு பயிற்சிகள் பெற்ற சிப்பாய்களை கொண்டு உருவாக்கப்பட்டன. 2005ம் ஆண்டின் பின்னர்தான் இராணுவம் இதை திட்டமிட்டு செய்தது.

யுத்தத்தை வெல்வதற்கு இராணுவம் அடையாளம் கண்ட முதலாவது இரண்டு தேவைகளைப் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். ஒன்று இராணுவத்தின் சூட்டு வலுவை உயர்த்துவது. இரண்டு புலிகளின் சூட்டு வலுவை வலுவிழக்க செய்வது. புலிகளின் சூட்டு வலுவை வலுவிழக்க செய்ய சர்வதேச கடற்படைகள், தொழில்நுட்பங்களுடன் இலங்கை கடற்படை செயலாற்றியது. வெளிநாட்டிலிருந்து வந்த புலிகளின் ஆயுதக்கப்பல்கலை தாக்கியழித்து, புலிகளிற்கு ஆயுத வரத்தை தடுத்து நிறுத்தினார்கள். வெளிநாட்டிலிருந்து ஆயுதங்கள் வராவிட்டால் புலிகளின் சூட்டு வலு தன்பாட்டில் வீழ்ச்சியடையும் என்பது படைத்தரப்பிற்கு தெரிந்திருந்தது.

அதேசமயம் இராணுவத்தின் சூட்டு வலு எப்படி உயர்த்தப்பட்டது என்பதையும் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறோம். அதிலும் காட்டுப் போர் முறையில் சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டு, அந்த அணிகள் அதீத சூட்டு வலுவுள்ளவையாக மாற்றப்பட்டன. உண்மையில் அந்த சமயத்தில் உருவாக்கப்பட்டவை இராணுவத்தின் மிகச்சிறந்த கொமாண்டோ அணிகள். ஏற்கனவே இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையணியை புலிகள் சமாளிக்க முடியாமல் திண்டாடிக் கொண்டிருந்தனர். இதற்குள் காட்டுப்போர் படையணிகளையும் களமிறக்க, புலிகளிற்கு பயங்கர நெருக்கடி ஏற்பட்டது.

யுத்தம் வெளிப்படையாக இரண்டு தரப்பும் சர்வதேச அனுசரணையாளர்களை வெளியேற்றி விட்டு, கடுமையான யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் இரகசிய மோதலொன்று ஆரம்பித்தது. அதை பெரும்பாலானவர்கள் அறிந்திருக்கமாட்டார்கள்.

இராணுவம்புலிகள் மோதல் முதலில் காடுகளிற்குள்தான் ஆரம்பித்தது.

இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையணியா? புலிகளின் படையணிகளா காடுகளை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதென நடந்த மோதல் அது. புலிகளின் காட்டு ஆதிக்கத்தை உடைப்பதற்காக இராணுவத்தின் மூலோபாய நகர்வுகளில் ஒன்றாக இந்த மோதல் ஆரம்பித்தது.

வன்னி காடுகளில் புலிகளிற்கு வாய்ப்பான, பெருங்காடாக இருப்பது முல்லைத்தீவு, மணலாறு, வவுனியா வடகிழக்கு பகுதிகளில் உள்ள காடு. மணலாறு காடு என பொதுவாக சொன்னால் பலரிற்கு புரியும். இந்த காட்டிற்குள் இருந்து கடல்வழியாகவும் தப்பிச்செல்லலாம். வவுனியா மன்னார் பக்கத்திற்கும் காடுகளால் நகரலாம். கிழக்கிற்கும் நகரலாம்.

யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னர் பிரமாண்டமான இந்த காட்டின் ஆதிக்கத்தை கையிலெடுக்கும் முடிவை இராணுவம் எடுத்தது. மணலாறு காட்டிற்குள் புலிகள் நிலைகொண்டிருந்தனர். அங்கிருந்து புலிகளை பின்தள்ளி, காட்டிற்குள் புலிகளை நுழைய விடாமல் செய்ய ஆழ ஊடுருவும் படையணிகள் தீவிரமாக முயற்சித்தன. ஒரு கட்டத்தில் காட்டுக்குள் இருக்கும் முகாம்களிற்கிடையிலான போக்குவரத்தே ஆபத்தானதாக மாறியது. சுதந்திரமான இயல்பான போக்குவரத்தை செய்ய முடியாத நெருக்கடி புலிகளிற்கு ஏற்பட்டது.

மணலாறு காடு மாத்திரமல்ல, வன்னியின் ஏனைய காடுகளிற்குள்ளும் ஆழ ஊடுருவும் படையணிகள் நுழைந்து, காட்டின் ஆதிக்கத்தை கையிலெடுத்தார்கள். காட்டிற்குள் சுதந்திரமான நகர்வை செய்ய முடியாமல் போன பின்னர், அங்கு முன்னரண் அமைத்து நீண்டகாலம் மரபுப்போர் செய்ய முடியாத நெருக்கடி புலிகளிற்கு ஏற்பட்டது.

யுத்தம் வெளிப்படையாக ஆரம்பிப்பதற்கு முன்னர், வன்னிக்காடுகளில் இராணுவத்தின் படையணிகள் தமது ஆதிக்கத்தை அதிகமாக நிலைநாட்டி விட்டன. இதில் கவனிக்க வேண்டியது காட்டில் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கு இராணுவம் கெரில்லாப் போர் உத்திகளுடன், கெரில்லா அணிகளாகவே செயற்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டன. முழு மரபு இராணுவமான இலங்கை இராணுவம் புலிகளை வீழ்த்த கெரில்லா போர் அணிகளையும் உருவாக்கி, மரபு மற்றும் கெரில்லா உத்திகளை கலந்த கலவையான போருத்தியை பாவித்தார்கள். மாறாக, கெரில்லா இயல்பிலிருந்து மரபு போருக்கு மாற்றம் பெற்று வந்த புலிகளால் மீண்டும் கெரில்லா இயல்பிற்கு திரும்ப முடியவில்லை. அல்லது, அதற்கு ஆர்வம் காட்டவில்லை.

மூன்றாம் ஈழப்போரின் இறுதியில் மரபுப்போரில் புலிகள் பெற்ற அசாத்திய வெற்றிகள், கெரில்லா இயல்பிற்கு அவர்களை திரும்ப விடாமல் செய்திருக்கலாம்.

2000ஆம் ஆண்டின் பின்னர் புலிகள் பெரியளவில் காட்டுப் போர் எதையும் செய்யவில்லையென்பதையும் கவனிக்க வேண்டும். அதன் பின் உருவாக்கப்பட்ட படையணிகள் எல்லாம் மரபுப்போரிற்கானவை.

புலிகளை காட்டுக்குள் நுழைய விடாமல் செய்ய வேண்டுமென்பது தான் நான்காம் ஈழப்போரில் இராணுவத்தின் முதலாவது நோக்கம். அதேபோல, புலிகளின் விநியோகங்களையும் தடுத்து நிறுத்த வேண்டும். சர்வதேச விநியோகத்தை தடுத்து நிறுத்தியதை போல, மன்னார் கடற்பரப்பின் ஊடான இந்திய தமிழக பின்தள தொடர்பையும் துண்டிப்பதை நோக்கமாகொண்டே பூநகரி நோக்கிய நீண்ட படைநகர்வை மன்னாரிலிருந்து படையினர் ஆரம்பித்தனர்.

அதாவது, காட்டுக்குள் நுழைவதற்கோ, கடல்வழியாக வெளியேறுவதற்கோ வாய்ப்பை வழங்காமல் புலிகளை முற்றுகையிடுவதற்காக நன்றாக திட்டமிட்டு இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கை இது. காட்டிற்குள் நுழைவதற்கு 2009 மே மாதம் புலிகள் முயற்சித்தார்கள்தான். ஆனால் அது வெற்றியளிக்கவில்லை.

2009 ஆரம்பத்தில் கேப்பாப்பிலவில் நிலைகொண்டிருந்த இராணுவத்தின் மீது புலிகள் ஒரு தாக்குதல் மேற்கொண்டார்கள். 2008ஆம் ஆண்டின் பின்னர் விடுதலைப்புலிகள் ஒன்று திரண்டு வலிந்த தாக்குதல்களை செய்யும் அவகாசம் கிடைக்கவில்லை. நான்கு வலிந்த தாக்குதல்களைத்தான் இராணுவத்தின் மீது மேற்கொண்டனர். ஒன்று அம்பகாமத்தில் நடந்தது. பிரபாகரனின் மகன் சாள்ஸ் அன்ரனி தலைமையில் நடத்தப்பட்ட தாக்குதல் அது. வெற்றியளிக்கவில்லை. இரண்டாவது கேப்பாப்பிலவில் மேற்கொண்ட தாக்குதல்.


ஜெயசிக்குறு அனுபவத்தின் பின்னர், முன்னேறும் படையினர் பின்தளங்களை பலப்படுத்தியபடி நகர்ந்தனர். முன்னணியில் நிரந்தரமில்லாதபாதுகாப்பரண் ஒன்றுஇருந்தது. இரண்டாவது வரிசையிலேயே நிரந்தரமான பலமான பாதுகாப்பரண் இருந்தது. முதலாவது அரணில் புலிகள் முட்டி, சண்டையிட, இரண்டாவது அரணில் இராணுவம் தயாராகி விடும்.

கேப்பாபிலவிலும் இதுதான் நடந்தது. புலிகள் தாக்குதலை ஆரம்பித்ததும், இராணுவத்தின் முன்னரணை சற்று பின்னகர்த்தி விட்டனர். சுமார் ஒரு கிலோ மீற்றர் அளவில் இராணுவம் தனது நிலைகளை பின்னகர்த்தி, அங்கு பலமாக நிலைகொண்டது. அந்த அரணை புலிகளால் உடைக்க முடியவில்லை. நான்காம் ஈழப்போரில் கிளிநொச்சிக்கு அப்பால் புலிகள் நடத்திய இரண்டாவது வலிந்த தாக்குதலும் வெற்றியளிக்கவில்லை. கேப்பாபிலவில் புலிகள் வெற்றியடைந்திருந்தால், காட்டுடனான தொடர்பை பேணியிருப்பார்கள்.

வாசகர்கள் கேட்ட இரண்டாவது கேள்வி புதுக்குடியிருப்பை சூழ ஏன் மண் அணை அமைக்கப் படவில்லையென்பது.

மண் அணை அமைப்பது சாதாரண விடயம் கிடையாது. மிகப்பெரும் செலவாகும். அப்போது இருக்கும் எரிபொருள் தட்டுப்பாட்டில் அடிக்கடி மண் அணை அமைக்க புலிகள் விரும்பியிருக்க மாட்டார்கள். அது எல்லாவற்றையும் விட முக்கியமானது, அதற்கான அவகாசம் புலிகளிற்கு கிடைக்கவில்லை.

மிக துல்லியமான குண்டுவீசும் வசதி இலங்கை இராணுவத்திடம் இருந்தது. மண் அணை அமைக்க விடாமல் புலிகளை தடுக்கும் வல்லமை விமானப்படையிடம் இருந்தது.



புலிகள் தயாரித்த சண்டியன்



புலிகளிடமிருந்து கைப்பற்றிய கனோன் ஆயுதத்துடன் இராணுவம்

எனினும், போதிய அவகாசமின்மை தான் மண் அணை திட்டத்தை செய்ய விடாமல் தடுத்திருக்க வாய்ப்புண்டு.

சரி, இனி கடந்த வாரத்தில் விட்ட இடத்திலிருந்து ஆரம்பிப்போம்.

புதுக்குடியிருப்பு நகரப்பகுதியை இராணுவம் கைப்பற்றிய போதும், அந்த முனையால் எதிர்பார்த்ததை போல முன்னேற முடியவில்லையென்றதும், 58வது டிவிசன் படையினர் தேவிபுரத்தின் பின் பகுதியால் நகர்ந்து புதுக்குடியிருப்பின் பின் பகுதி இரணைப்பாலை சந்தியை நோக்கி நகர்ந்தார்கள் என்று கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தோம்.

புதுக்குடியிருப்பு களமுனையில் புலிகளின் எல்லா தளபதிகளும் நிலைகொண்டிருந்தனர். போராளிகளை உற்சாகப்படுத்த பிரபாகரன் களமுனைக்கே செல்ல தொடங்கியிருந்தார்.

புதுக்குடியிருப்பு களமுனையில் புலிகளிற்கு இன்னொரு நெருக்கடி ஏற்பட தொடங்கியது. அது எறிகணை பற்றாக்குறை!

கடல்வழி விநியோகங்கள் தடுக்கப்பட்டிருந்த நிலையில், புலிகளின் எறிகணை கையிருப்பு நன்றாக குறைந்து விட்டது. ஆட்லறி, 1200 மி.மீற்றர் மோட்டார்கள்தான் புலிகளின் பிரதான போர் ஆயுதங்கள். மூன்றாம் ஈழப்போரில் புலிகளின் வெற்றிகளிற்கு இந்த ஆயுதங்களை துல்லியமாக பாவித்ததும் ஒரு காரணம். புலிகளின் கடல்வழி விநியோகங்கள் தடுக்கப்பட்டதும், எறிகணை தட்டுப்பாடு ஏற்பட்டது. இருந்த எறிகணைகளையே கொஞ்சம்கொஞ்சமாக பாவிக்க வேண்டியிருந்தது.

புதுக்குடியிருப்பு களமுனையில் இருந்த போராளிகள் எறிகணை உதவியை கோரிய போதெல்லாம், தேவையான அளவில் எறிகணை உதவியை புலிகளால் செய்ய முடியவில்லை. வழக்கமாக, முன்னரணில் மோதலில் ஈடுபடும் போராளிகள், களமுனையில் இறுக்கம் ஏற்பட்டால் உடனடியாக எறிகணை உதவியை நாடுவார்கள்.

எறிகணை பிரிவு, களமுனை இரண்டையும் ஒருங்கிணைப்பது அந்த பகுதி தளபதியின் கடமை. இது எல்லா இராணுவத்தின் அடிப்படை பொறிமுறை.நவீன தொழில்நுட்பத்தின் மூலம் ஒரு இடத்தின் அமைவிடத்தை துல்லியமாக கண்டறிய முடியும். அகலாங்கு, நெட்டாங்குகளின் சந்திப்பு புள்ளியை அச்சொட்டாக கணித்து, அந்த லொக்கேஷனை கணித்ததும், அந்த இடத்திற்கு எறிகணைகளை செலுத்துவார்கள். ஆளில்லாத வேவு விமானங்கள் மூலம் இராணுவம் லொக்கேஷன்களை அடையாளம் கண்டது. புலிகளிடம் அந்த வசதி கிடையாது. அதனால் அவர்கள் மாற்று ஏற்பாடு ஒன்று செய்திருந்தார்கள். தமது பிரதேசம் முழுவதையும் வரைபடத்தில் குறித்து, அந்த இடங்களின் லொக்கேஷனை வரைபடத்தில் குறித்து வைத்தனர். ஒவ்வொரு லொக்கேஷனையும் சாதாரணமானவர்களும் கண்டறிய வசதியாக, அதற்கு சுலபமான சங்கேத எழுத்துக்களை குறித்திருந்தார்கள். இதை இராணுவமும் செய்திருந்தது.

எறிகணை பற்றாக்குறையை சமாளிக்க புலிகள் பல முயற்சிகள் எடுத்தார்கள். அதில் ஓரளவு வெற்றியளித்தது சொந்தமாக எறிகணைகளையும்,மோட்டாரையும் தயாரிப்பது. 122, 120 மி.மீற்றர் மோட்டார்களிற்கு எறிகணையை தயாரிக்க முடியவில்லை. அதற்கான இயந்திரங்கள் புலிகளிடம் இருக்கவில்லை.

வெளிநாடுகளில் இருந்து வாங்கிய மோட்டார்களிற்கு எறிகணையை தயாரிக்க முடியவில்லையே தவிர, தாங்களே மோட்டாரை தயாரித்து, அதற்கான எறிகணையையும் தயாரிக்கும் முயற்சியில் வெற்றியடைந்தார்கள். அந்த மோட்டார் வழக்கமான மோட்டாரின் உருவத்தில் இருக்காது. கொஞ்சம் அல்ல... நிறைய வித்தியாசம்!

வழக்கமான மோட்டார்கள் குழாய் வடிவத்தில் இருக்கும். புலிகள் தயாரித்தது அப்படியல்ல. இரண்டு தண்டவாளங்களை சமாந்தரமாக பொருத்தியதுதான் மோட்டார்!

இதைப்படிக்க உங்களிற்கு தலை சுற்றுகிறதா? அதைவிட தலைசுற்றும், அதற்கு புலிகள் வைத்த பெயர்.

அந்த எறிகணை செலுத்திக்கு புலிகள் வைத்த பெயர் சண்டியன்!

பெயருக்கு ஏற்றதைபோல அது சண்டியனாகவே இருந்தது.

இரண்டு தண்டவாளங்களை சமாந்தமாக பொருத்தினார்கள். அந்த தண்டவாளங்களில் லொக் பண்ணும் விதமாகநீளமான,தட்டையான இரும்பு தகடு ஒன்றில் எறிகணையை பொருத்தி, தண்டவாளங்களில் வைத்தார்கள். தண்டவாளத்திலிருந்து எறிகணை புறப்படும்போது, எறிகணையில் பொருத்தப்பட்டிருந்த தகடு, தண்டவாளத்தில் உராய்வடைந்து "கிரீச்" என பெரிய சத்தம் எழும். அதுவேசிலகிலோமீற்றர்கள் தூரத்திற்கு கேட்கும். அந்த சத்தத்தை வைத்தே, சண்டியன் கிளம்பி விட்டதை தெரிந்து கொள்ளலாம்.

ஒரு காலத்தில் புலிகளின் பசீலன் 2000 கலக்கியதை போல, சண்டியனும் கலக்கு கலக்கியது. அதன் எடை, அதனால் ஏற்பட்ட சேதம், புறப்படும் போது ஏற்படுத்திய சத்தம் எல்லாம் சேர இராணுவத்திற்கு அது கிலியை ஏற்படுத்தியது.ஆனால் அதன் பலவீனம் அதிக வீச்செல்லையில்லாதது. சுமார் இரண்டு கிலோமீற்றர் அளவான தூரமே அதன் வீச்செல்லை. குறைந்த வீச்செல்லையென்றாலும், அடுத்த பலவீனம் அதன் எறிகணை புறப்படும் சத்தம் அனேகமாக அதன் வீச்செல்லை வரை கேட்பது. எறிகணை புறப்படுவதை சத்தத்தை வைத்தே இராணுவத்தினர் தெரிந்து, முற்கூட்டியே பதுங்குகுழிகளிற்குள் புகுந்து விடுவார்கள். என்றாலும், உளவியல் ரீதியாக அது புலிகளிற்கு ஓரளவு கைகொடுத்ததுல்.

கடந்தவாரம் தொடரை முடிக்கும் போது, பிரபாகரன் புதுக்குடியிருப்பில் வைத்து விடுதலைப்புலிகளை இரண்டாக பிரித்தார், அது ஏன், அப்போது என்னென்ன விசயங்கள் நடந்தன என்பதை அடுத்த வாரம் சொல்வதாக குறிப்பிட்டிருந்தோம். ஆனால், இந்தவாரம் தொடருடன் ஒட்டியதாக வாசகர்களின் கேள்விகள் வந்திருந்ததால், அதை குறிப்பிட முடியவில்லை. அடுத்த வாரம் அதை குறிப்பிடுவோம். (தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# 21 சென்றதும் வென்றதும்!



மருதன்

வாஸ்கோ ட காமா, கொலம்பஸ், மெக்கலன் என்று நமக்குத் தெரிந்த கடல் பயணிகள் குறைவானவர்களே. தெரியாத பயணிகள் மிக மிக அதிகம். வெவ்வேறு கனவுகள், திட்டங்களுடன் சென்றவர்களில் வெற்றிகரமாக திரும்பியவர்கள் சிலரே. பாதியிலேயே திட்டத்தைக் கைவிட்டு திரும்பியவர்கள், கொள்ளையர்களால் பலியானவர்கள், உணவின்றி இறந்தவர்கள், என்ன ஆனார்கள் என்றே தெரியாமல் போனவர்கள் பலர்.

1400 முதல் 1700ம் ஆண்டு வரையிலான ஐரோப்பிய வரலாற்றை, கண்டுபிடிப்புகளின் காலகட்டம் என்கிறார்கள். உலகம் என்பது ஐரோப்பா மட்டுமே அல்ல என்பதை ஐரோப்பியர்கள் புரிந்துகொண்டது அப்போதுதான். அதுவரை வாய் வழிக் கதைகளாக இருந்த பல இடங்களை, கடல் பயணிகள் நேரில் சென்று பார்த்தனர். ஆசியாவின் அழகும் அங்கு கிடைத்த வாசனைப் பொருள்களும், மதிப்புமிக்க ஆபரண கற்களும் அவர்களை ஈர்த்தன. ஆபிரிக்காவின் கம்பீரமான அழகும் இயற்கை வளமும் ஆசையைத் தூண்டின.



அமெரிக்காவை ஒரு புதிய உலகமாக கண்டார்கள். அங்கு வசித்த பழங்குடி மக்களின் வாழ்க்கையும் கலாசாரமும் மயக்கின. புதிய நிலங்களின் அறிமுகம், புதிய கலாசாரத்தையும் புதிய வாழ்க்கை முறையையும் கடல் பயணிகள் வழியே உலக மக்களுக்கு அறிமுகப்படுத்தியது. புதிய காய்கறிகள், பழங்கள், மரங்கள், விலங்குகள் அறிமுகம் ஆயின. வணிகத்துக்கான புதிய வழித்தடங்களை உருவாக்க முடிந்தது.


கடல் பயணங்கள் எல்லாமே அடிப்படையில் வணிக நோக்கம் கொண்டவைதாம். புதிய இடங்களைக் கண்டுபிடிப்பது மட்டுமே பயணிகளின் நோக்கம் அல்ல. கண்டுபிடித்த இடத்தை ஆக்கிரமித்தார்கள். 'புதிய இடம் கண்டுபிடிக்கப்பட்டதா? உடனடியாக அந்த இடத்தில் நம் நாட்டு கொடியை நட்டு வை' என்றே மன்னர்கள் உத்தரவிட்டார்கள்.

வரலாற்றில் பல அடிப்படையான மாற்றங்களைக் கடல் பயணங்கள் ஏற்படுத்தின. வாஸ்கோ ட காமாவை அனுப்பிவைத்த நாடு போர்த்துக்கல். அவர் வந்தடைந்தது இந்தியாவுக்கு. இந்த இரு நாடுகளிலுமே அவருடைய பயணங்கள் ஆழமான மாற்றங்களை ஏற்படுத்தின. அதேபோல, ஸ்பெயின் நாட்டின் உதவியால் அமெரிக்கா வந்தடைந்தார் கொலம்பஸ். ஸ்பெயின், அமெரிக்கா இரண்டையும் இந்தப் பயணம் மாற்றியது. இந்த மாற்றங்களில், நல்லவை மற்றும் கெட்டவை இரண்டும் சேர்ந்தே இருந்தன. இந்தியாவை ஆக்கிரமித்ததன் மூலம் போர்த்துக்கலுக்கு பல நன்மைகள் விளைந்தன. இந்தியாவோ, தன்னுடைய வளங்களை இழந்தது. கொலம்பஸின் வரவால் அமெரிக்கப் பழங்குடிகள் பாதிக்கப்பட்டனர்.

தவறான சிந்தனைகள் ஆதிக்கம் செலுத்தின. 'வலிமையானவர்கள், எளிமையானவர்களை வீழ்த்துவதும் வெற்றிகொள்வதும் சரியே' என்னும் நம்பிக்கை வலுப்பெற்றது. கொலையும் கொள்ளையும் பெருகின. ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்துக்குத் தொற்றுநோய்கள் சுலபமாகச் சென்று சேர்ந்தன. பெரிய நாடுகளுக்கு இடையில் போட்டியும் பொறாமையும் வளர்ந்தன. போர்கள் மூண்டன. காலனி ஆதிக்கம் தொடங்கியது.

அதேசமயம், அறிவியல் துறை வளர்ச்சி பெற்றது. கடல் பயணங்கள் மூலம் கப்பல் கட்டும் தொழில்நுட்பம் வளர்ச்சி அடைந்தது. துல்லியமான காந்த வழிகாட்டி கண்டுபிடிக்கப்பட்டது. வரைபடம் உருவாக்கும் கலை வேகமாக வளர்ந்தது. வானியல் துறை வளர்ச்சி கண்டது. நட்சத்திரங்களைக்கொண்டு திசைகளையும், காற்றின் வேகத்தைக்கொண்டு வானிலையையும் தெரிந்துகொண்டனர்.


வணிகம் வளர்ந்து, கலாசாரப் பரிமாற்றம் நடந்தது. பலவிதமான மதங்களும் நம்பிக்கைகளும் இருக்கின்றன. நம்முடைய கலாசாரம் மட்டுமே உயர்ந்தது என்று நினைக்க முடியாது; மனிதர்கள் வெள்ளை நிறத்தில் மட்டும் இல்லை, பழுப்பு நிறத்திலும் கறுப்பு நிறத்திலும் இருக்கிறார்கள்... அவர்களும் சிந்திக்கிறார்கள் என்பதைப் புரியவைத்தது.





பல கண்டங்களாக உலகம் பிரிந்திருக்கிறது. பல மொழிகள் மக்களைப் பிரித்துள்ளன. பலவித மான பழக்க வழக்கங்களை அவர்கள் பின்பற்றுகிறார்கள். நிறம், மதம், கலாசாரத்தின் அடிப்படையில் மக்க ளைப் பாகுபடுத்திப் பார்க்கக் கூடாது. நாம் அனைவரும் ஒரே இனம்.

வெவ்வேறு நாடுகளையும் கண்டங்களையும் மக்களையும் கடல் ஒன்றிணைக்கிறது. இதை மனதில் வைத்து, கடல் பயணிகளின் வெற்றி, தோல்வி இரண்டில் இருந்தும் நாம் பாடம் படிக்கலாம். அவர்கள் தொட்ட உயரம், அடைந்த வீழ்ச்சி இரண்டும் நமக்குப் பாடமே!



மனித குல வரலாற்றிலேயே குறிப்பிடத்தக்க வகையில் ஓவியக் கலையும் சிற்பக்கலையும் புதிய எழுச்சியை அடைந்தன. தத்துவங்கள் வளர்ந்தன. கலையும் இலக்கியமும் பெரும் பாய்ச்சல்களை நிகழ்த்தின. கலிலியோ, ஷேக்ஸ்பியர், டாவின்சி, மைக்கல் ஏஞ்சலோ, கோப்பர்நிகஸ், மார்டின் லூதர் என பல முக்கியமான ஆளுமைகள் இந்தக் காலகட்டத்தில் தோன்றினார்கள். இவர்களால் உலகைப் பற்றிய பார்வை விசாலமானது. ரசனை மேம்பட்டது. அறிவியல் கண்ணோட்டம் வளர்ச்சி பெற்றது. இவை அனைத்துக்கும் பின்னணியில், கடல் பயணங்கள் இருக்கின்றன.

எல்லாவற்றுக்கும் மேலாக, உலகை மாற்றிய கடல் பயணிகள் நமக்குக் கற்றுத்தரும் மிக முக்கியமான விஷயம் என்ன தெரியுமா? பயணங்கள் ஒருபோதும் முடிவடைவது இல்லை. நம் ஒவ்வொருவருக்கும் ஒரு கனவு இருக்கிறது. அந்தக் கனவை நாம் துரத்த வேண்டும். அந்தக் கனவை எப்படியாவது நனவாக்க வேண்டும். நீண்ட பயணம் மேற்கொண்டால்தான் அந்தக் கனவு நனவாகும்.

***பயணங்களுக்கான பாதைகள் காத்திருக்கின்றன. நீங்கள் தயாரா?***

*(முடிந்தது)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



18-ம் பக்க தொடர்ச்சி...

பேசினார் என்ற கடுமையான விமர்சனம் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களிடம் இருந்தது.

ஆர்ப்பாட்டத்திலும், ஒருங்கிணைப்புக்குழு கூட்டங்களிலும், பின்னர் மாகாணசபைக்குள்ளும் அமைச்சர் மீது சர்ச்சையாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு முல்லைத்தீவு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரியின் குடும்பமும், சுகாதார அமைச்சர் குணசீலனின் குடும்பமும் நண்பர்கள், வைத்திய அதிகாரியின் வீட்டிற்கு சென்று அமைச்சர் உணவருந்தினார், வைத்திய அதிகாரிக்கு சார்பாக அமைச்சர் செயற்படுகிறார் என்பது. எனினும், ஆர்ப்பாட்டம், ஒருங்கிணைப்புக்குழு கூட்டங்களில் அமைச்சர் மீது குற்றம்சுமத்தியவர்கள் வரம்புமீறி செயற்பட்டிருக்கிறார்கள் என்பதே பொதுவான அபிப்பிராயம். தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக இப்படியான குறுக்கு வழி ஆயுதங்களை எடுப்பது ஆரோக்கியமானதல்ல.

ஆறு மாதகாலம் பார்மசிகளிற்கு அவகாசம் கொடுக்கலாமென முல்லைத்தீவு ஒருங்கிணைப்புகுழு கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்ட போது மௌனமாக இருந்த மாகாண சபை உறுப்பினர் ரவிகரன், பின்னர் நடந்த புதுக்குடியிருப்பு ஒருங்கிணைப்புகுழு கூட்டத்தில், பார்மசிகளிற்கு அவகாசம் கொடுக்காமல் இழுத்து மூட வேண்டும் என்றார்.

முல்லைத்தீவு ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவை அமுல்படுத்த முடியாதென்பது சுகாதார அமைச்சரின் நிலைப்பாடு. பின்னர் நடந்த வடமாகாணசபை அமர்வில், இந்த விடயம் பற்றி சிவாஜிலிங்கம் கேள்வியெழுப்பினார். பார்மசி விடயம் சர்ச்சையானபோது, அமைச்சர் வெளிநடப்பும் செய்தார்.

முன்னர் வைத்தியராக இருந்து, இப்பொழுது அரசியல்வாதியாக இருந்த ஒருவர்தான் முல்லைத்தீவு ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் தனக்கெதிராக ஆட்களை செட் பண்ணி குற்றம்சுமத்தினார் என சுகாதார அமைச்சர் பகிரங்கமாகவே குற்றம்சுமத்தியிருந்தார்.

முல்லைத்தீவில் வைத்தியராக இருந்து அரசியல்வாதியாகியவர் சிவமோகன் எம்.பி. முல்லைத்தீவு ஒருங்கிணைப்புகுழு கூட்டத்தில் சுகாதார அமைச்சருடன் வரம்புமீறி பேசியவர்களில் ஒருவர் தமிழரசுக் கட்சியின் இளஞ்செழியன். அவர் முன்னர் சிவமோகன் எம்.பியின் நிழலாக திரிந்தவர். சிவமோகன் எம்.பியைத்தான் சுகாதார அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறாரோ என்ற சந்தேகத்தில் விசாரித்தோம். நமது சந்தேகம் சரியென்பதை போன்ற தகவல்கள்தான் கிடைத்தன.

இரண்டு தரப்பிற்கும் நெருக்கமானவர்களுடன் பேசியபோது சில பல முரண்பாடுகளும், பனிப்போரும் நடப்பது தெரிந்தது.


"ஐயன்குளம், துணுக்காய், நட்டாங்கண்டல் வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் இல்லை. வெலிஓயா வைத்தியசாலையில் சிங்கள அம்பியூலன்ஸ் சாரதியால் தாக்கப்பட்ட வைத்தியர் ஒருவர், இந்த மூன்று வைத்தியசாலைகளையும் கவனிப்பதாக சொன்னார். அவருக்கு இடமாற்றம் வழங்கும்படி சிவமோகன் எம்.பி, சுகாதார அமைச்சரிடம் கேட்டார். ஆனால் அமைச்சர் அதை செய்யவில்லை. வவுனியாவிலிருந்து வைத்திய நிபுணர் ஒருவர் யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் பெற இருந்தபோது, அவருக்கு வன்னிக்குள் இடமாற்றம் வழங்க கேட்டோம். வன்னியில் ஒரேயொர வைத்திய நிபுணர் தான் இருக்கிறார். இருண்டு நிபுணர்கள் இருக்கட்டுமென்றுதான் கேட்டோம். நாங்கள் கேட்டதாலோ என்னவோ அவர் அதையும் செய்யவில்லை. ஆனால் ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் நாங்கள் ஆட்களை செற் பண்ணி பேச விட்டோம் என்பது உண்மையில்லை. அங்கு கடுமையாக பேசியவர் செழியன். முன்னர் எம்.பி உடன் இருந்தார்தான்.

அதனால்தான் நாங்கள் செற் பண்ணியதாக நினைக்கிறார்கள். ஆனால் உள்ளூராட்சி தேர்தலில் சீற் கிடைக்கவில்லையென்றதும், அவர் எமக்கு எதிராகவும் பேசினார். இப்போதுஎம்முடன் அவருக்குதொடர்பில்லை. முல்லைத்தீவு ஆர்ப்பாட்டத்திலும், ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்திலும் அமைச்சருக்கு எதிராக அநாகரிக பேசப்பட்டது உண்மைதான். அப்படி பேசியது அநாகரிகமானது, கண்டிக்கத்தக்கது என்பதுதான் எமது நிலைப்பாடும்" என்றார்கள் சிவமோகன் எம்.பி தரப்பினர்.

"சிவமோகன் எம்.பி ஒரு அரசியல்வாதியென்பதை விடலாம். அவர் ஒரு வைத்தியர். வைத்தியராக, அனுமதியில்லாத பார்மசிகள் இயங்கலாம்? தகுதியில்லாதவர்கள் மருந்து வழங்கலாமென அவர் நினைக்கிறாரா? அரசியலுக்காக மக்கள் உயிருடன் விளையாட முடியாது. அப்படியென்றால் அமைச்சர் பதவியை பொறுப்பேற்றிருக்கவும்கூடாது" என்கிறார்கள் சுகாதார அமைச்சரின் தரப்பினர்.

மருத்துவத்துறையில் அலட்சியமாக இருக்க முடியாது. மருத்துவமனைகள், பார்மசிகள் என்பன முறையாக ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் என்பதில் இரண்டு கருத்து இருக்க முடியாது. எனினும், கடந்த ஒன்பது வருடங்களில் இதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்பது பெரும் உறுத்தலான விடயம்தான்.

உயிர்காக்கும் விடயத்தில் போரால்



பாதிக்கப்பட்ட பகுதியென்ற சலுகையை காட்ட முடியாது என்ற சுகாதார அமைச்சர் தரப்பு கருத்து நியாயமானதுதான். ஒன்பது வருடங்கள் அவகாசம் வழங்கி விட்டே இந்த நடவடிக்கையை எடுத்தோம், இனியும் அவகாசம் வழங்க முடியாதென்கிறார் பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர்.

முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தனது பொறுப்பில் இருந்த மாவட்டத்தில் இந்த முடிவை எடுத்தது சரி. ஆனால் இதே அதிரடியை ஏனைய மாவட்டங்களிலும், அமைச்சர் சமநேரத்தில் நடத்தியிருக்க வேண்டும். அது நடக்கவில்லை. அது அதிகாரியின் முடிவாக அல்லாமல், அமைச்சின்கொள்கை முடிவாக கையாளப்பட்டிருக்கலாம். பார்மசி உரிமையாளர்களிற்கு ஏற்கனவே முறையான அறிவிப்பு, வழிகாட்டல் செய்து, முறைப்படியான பதிவை நோக்கி நகர்த்தியிருக்கலாம். அப்படி செய்திருந்தால் சர்ச்சை உருவாகியிருக்காது. அதேவேளை, இந்த விடயத்தை அரசியலாக்குவது அநாகரிகமானது. அமைச்சரின் நடவடிக்கைக்கான எதிர்ப்பை தமது அரசியலாக்க எத்தனிப்பவர்களும் முல்லைத்தீவில் உள்ளனர்.

பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் தவறான நடவடிக்கை எடுத்ததாக சொல்ல முடியாது. சட்டத்தையே நடைமுறைப்படுத்த முயல்கிறார். நிர்வாக நடைமுறைகளின் வழியாகவே அதிகாரிகள் விடயங்களை கையாள்வார்கள். அது அதிகாரிகளின் பண்பு. ஆனால் அமைச்சர் மக்களின் பிரதிநிதி. சட்டத்தையும், மக்களையும் முட்டிமோத வைக்காமல் நுணுக்கமாக அழைத்து செல்லும் பொறுப்புடையவர். இந்த தடை நிரந்தரமானதல்ல என்று அமைச்சர் கூறியிருக்கிறார்.

பார்மசிகளை பதிவு செய்ய வைத்து, முறைப்படி இயங்க வைக்கும் முயற்சியையும் அமைச்சர் எடுக்க வேண்டும். அதுவே சிறப்பு.

**ஞா.குணசீலன்**
வடக்கு சுகாதார அமைச்சர்

**பொ**லிஸ்மா அதிபர் நினைத்தாலும் சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாத ஒருவரை ஒரு வாரமோ, ஆறு மாதமோ வாகனம் செலுத்த அனுமதிக்க முடியாது. சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமல் வாகனம் ஓட்ட மடியாதென்பது இலங்கை சட்டம். அதை மீறி அனுமதித்தால் இலங்கை சட்டத்தை மீறியதாகவே அர்த்தப்படும். அதேபோலத்தான் பார்மசி விடயமும். அனுமதிப்பத்திரம் உள்ள பார்மசிகளில், மருந்தாளர்கள்தான் மருந்து கொடுக்கலாம். சட்டத்தை மீறி ஆறு மாதங்களிற்கு அனுமதியில்லாமல் மருந்தகம் இயங்க அமைச்சரால் அனுமதிக்க முடியாது. மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் முடிவெடுத்தார்கள் என்பதற்காக என்னால் சட்டத்தை மீற முடியாது. போலி வைத்தியர்களோ, அனுமதியில்லாத பார்மசிகளோ இயங்க முடியாது. இது மாகாணம் முழுவதற்கும் பொருந்தும். வைத்தியர்கள்தான் வைத்தியர்களின் கடமையை செய்யலாம். தாதியர்கள்தான் தாதியர்களின் கடமையை செய்யலாம். மருந்தாளர்கள்தான் மருந்தாளர்களின் கடமையை செய்யலாம். பொருத்தமில்லாதவர்கள் அதை செய்ய முடியாது. இந்த விடயத்தில் அரசியல்வாதியாக வாக்கை மட்டும் நான் பார்க்கவில்லை. பொறுப்பான மருத்துவராக, அமைச்சராகவே செயற்படுவேன்.



பார்மசிகளை சோதனையிட்ட சுகாதார அமைச்சர்




**க.சிவநேசன்**
(முல்லைத்தீவு)
வடக்கு விவசாய அமைச்சர்

**மா**வட்டத்திலுள்ள அனைத்து பார்மசியும் மூடப்பட்டுள்ளது. பார்மசிகளில் மருந்து வாங்கிக் கொண்டிருந்தவர்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். மருந்து வாங்குவதற்காக முல்லைத்தீவை விட்டு வெளியில் செல்ல வேண்டியுள்ளது. கிட்டத்தட்ட ஒரு அசாதாரண நிலைமையை ஏற்படுத்தியுள்ளதை போலுள்ளது. அனுமதி பெறாமல் பார்மசி நடத்த முடியாதுதான். ஆனால் போரால் பாதிக்கப்பட்ட அந்த பகுதியில் அதிரடி நடவடிக்கை எடுக்காமல், மெல்லமெல்ல வேறு வழியயை கையாண்டிருக்கலாமென்ற அப்பிராயம் உள்ளது. முல்லைத்தீவை மட்டும் குறிவைத்துள்ளார்கள் என்ற அப்பிராயமும் மக்களிடம் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Cosy

## HOTEL & RESTAURANT

North Indian, Punjabi, Chinese
&
Jaffna Foods



Free Home Delivery (Limited Area)
**Hotlines: 021 222 7100 / 021 222 5899**

Open Daily : 11.00 a.m. to 11.00 p.m.
272, Stanley Road, Jaffna.
15, Sirambiyadi Lane, Jaffna.

**We Accept all credit cards**

www.cosylanka.com
info@cosylanka.com
www.facebook.com/cosy.cosy.167

| COSY HOTEL & RESTAURANT | Non A/C | A/C |
|---|---|---|
| Single bed | Rs. 2,000 | Rs. 2,500 |
| Double bed | Rs. 3,000 | Rs. 3,500 |
| Triple bed | Rs. 4,000 | Rs. 4,500 |
| Four bed | Rs. 4,500 | Rs. 5,000 |

10% Service charge will be added

Restaurant / party Hall
Roof Top Beer Garden
Ample Parking
Generator Backup
Wi - Fi Facilities
24 Hrs Security Service

*Gift Vouchers* Rs. 1,000 Rs. 2,000 Rs. 500
**Available here**



# சரவணபவன்

உயர்தர சைவ உணவகம்
Saravana Pavan
Vegetarian Restaurants
அனைத்து வகையான
சைவ உணவு வகைகளை
கிளிநொச்சியில் சுவைத்து மகிழ்த்திட.
திருநகர் வீதி, கிளிநொச்சி
T.P 077 5230 064




விளம்பரத் தொடர்புகளுக்கு 0768255563, 0214927561


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 29.07.2018 அன்று வெளியிடப்பட்டது.